www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1-15 ஏப்ரல் '88

3-10

விலை : ரூ 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




பஞ்சாப் அவசரநிலை ஆட்சி
சட்டபூர்வமாக வரும் பாசிசம்

படிப்பகம்

www.padippakam.com

# தமிழக பட்ஜெட் : காங்கிரசின் தேர்தல் அறிக்கை




'88-'89 ஆம் ஆண்டுக்கான தமிழக பட்ஜெட் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்கிறது. இப்படி சொல்வது கூட அதன் முழு அர்த்தத்தை குறைப்பது போல் ஆகும். தமிழகத்தில் ஆட்சியைப் பிடிப்பதற்கான, தனது முதல் தேர்தல் பிரசாரத்தை காங்கிரசு பாராளுமன்ற மண்டபத்திலிருந்து ஆரம்பித்திருக்கிறது. பட்ஜெட் என்ற பெயரில் அதனுடைய கவர்ச்சிகரமான தேர்தல் வாக்குறுதிகளை தமிழக மக்களிடம் வாரி இறைத்திருக்கிறது என்று சொல்வதுதான் சாலப்பொருந்தும்.

★ கட்டண பாக்கிக்காக துண்டிக்கப்பட்ட பம்புசெட் மோட்டார் இணைப்புகள் உடனடியாக திரும்ப வழங்கப்படும்.

★ அரிசனங்களுக்கு தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக 'பெருந்தலைவர்' காமராஜர்' பெயரில் ஆதி திராவிடர் வீட்டு வசதி திட்டம் உருவாக்கப்படும்.

★ ஆதரவு அற்ற மகளிர், விதவைகள் 19 ஆயிரம் பேருக்கு முதியோர் தொகையும் வேலையும் வழங்கப்படும்.

★ கிராமப்புற பெண்கள் 25 ஆயிரம் பேருக்கு புதிதாக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இன்னும் "ஜவகர்லால் நேரு அறிவியல் ஆற்றல் நூல் திட்டம்" என்ற பெயரில் திறமையான கல்லூரி மாணவர்கள் 3000 பேருக்கு இலவச பாட நூல் திட்டம், 60 வயதுக்கு மேற்பட்ட 100 ஓதுவார்களுக்கு மாதம் 250 ரூபாய் ஓய்வூதிய திட்டம், தமிழ்மொழியை வளர்க்க, தேர்ந்தெடுக்கப்படும் தமிழ் எழுத்தாளர்களுக்கும், வெளியீடுகளுக்கும் உதவி பணம்.

பாசிச கும்பல், தயாரித்து அளித்திருக்கும் பட்ஜெட்டுக்கு விளம்பர ஆரவாரம்தான் ஏராளம். அறிவித்திருக்கும் திட்டங்களுக்கும் ஒதுக்கியிருக்கும் பணமோ கடுகளவுதான்.

உதாரணமாக, 25,000 கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக ஒதுக்கியிருக்கும் தொகை வெறும் 3 கோடி ரூபாய்தான். அதாவது ஒதுக்கியிருக்கும் பணத்தைக்கொண்டு, 25,000 பெண்களுக்கு நாளொன்றுக்கு மூன்று ரூபாயும் 4 பைசாவும்தான் கூலியாக கொடுக்க முடியும். அதுவும், அதை அப்படியே நேரிடையாக பங்கிட்டால்தான். அதற்கும் ஒரு இலாகா நியமித்து அதிகாரிகளைப் போட்டால், கூலியாக சில பத்து பைசாக்கள்தான் கொடுக்க முடியும்.

கட்டண பாக்கிக்காக துண்டிக்கப்பட்ட பம்புசெட் மோட்டார் இணைப்புகள் உடனடியாக திரும்ப வழங்கப்படும் என்பதும் வெளி விளம்பரம் தான். 6 மாத காலத்திற்குதான் இவ்வாறு மின்கட்டண பாக்கி தள்ளி வைக்கப்படுகிறது. அதுவும் ஒரு பகுதி பாக்கியை செலுத்துவோருக்கு மட்டும்தான் இச்சலுகை.

'பெருந்தலைவர்' காமராஜர் புதிய ஆதி திராவிடர் வீட்டு வசதி திட்டமும் ஒரு ஏமாற்றுதான். '86ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர் அறிவித்த 30 லட்சம் பேருக்கு வீடுகட்டும் திட்டத்தை காமராஜர் திட்டமாக பெயர் மாற்றி இருக்கிறார்கள். சென்ற ஆண்டு இத்திட்டத்திற்கு 30 கோடி ரூபாய் ஒதுக்கியே மக்களுக்கு ஒரு மண்ணும் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு 17 கோடி ரூபாய் ஒதுக்கியதற்கு வானளவ பிரச்சாரம் எடுக்கிறார்கள்.

ஒருபுறம், 20 ஆண்டுகால திராவிட ஆட்சியில் அனைத்துதுறைகளிலும் தமிழகம் பின் தங்கிவிட்டது என்று ஒப்பாரி வைத்துக்கொண்டே மறுபுறம் ஓட்டு வேட்டையாட, திராவிடக் கட்சிகளின் பிழைப்புவாத அரசியலையும், கவர்ச்சியான திட்டங்களையும் பகிரங்கமாக எடுத்து போர்த்திக்கொண்டு வெட்கம் இல்லாமல், தேசியம், மக்கள் நலன், தொழில் முன்னேற்றம் பற்றி பேசுகிறது காங்கிரசு கட்சி.

மின்சார உற்பத்தி மற்றும் கல்வித் துறைக்கு மட்டும் முறையே 100 கோடி ரூபாய் அளவு உயர்த்திவிட்டு, விவசாயம், தொழிற்துறை, குடிநீர், போக்குவரத்து, மருத்துவம், சுகாதாரம், சமூக நலம் இவற்றிற்கு சில10 கோடி ரூபாய்களை உயர்த்தி புது பட்ஜெட்டை தயாரித்து இருக்கிறது. உயர்ந்து வரும் நிர்வாக செலவும், பெருகி வரும் அதிகாரவர்க்க சுமையும், ஏறி வரும் விலைவாசியும், அதிகப்படுத்தியிருக்கும் அத்தனை கோடிகளையும் விழுங்கிவிடும். இதில் மக்களுக்கு கிடைக்க போவதென்னவோ திரும்பவும் 'பட்டை நாமம்' தான். துண்டு விழும் தொகை, நடப்பு ஆண்டும் எதிர்வரும் ஆண்டும் சேர்ந்து ரூ. 536.98 கோடியை எட்டும் என கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆக, அறிவித்த திட்டங்களை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்றால், ஒன்று இடையில் வரிசுமையைக் கூட்ட வேண்டும். அல்லது திட்டங்களை கிடப்பில் போட வேண்டும். ஆனால் பாசிச கும்பல் இந்த இரண்டு வழிமுறையில் ஏதாவது ஒன்றை மட்டும் செய்யாது. இரண்டையும் செயல்படுத்தும். அதாவது, அறிவித்த திட்டங்களை கிடப்பில் போடுவதோடு அரசு எந்திரத்துக்கு தீனி போதவில்லை என வரி சுமையையும் ஏற்றிவிடும். வழக்கமாக நடக்கும் இந்த 'ராஜ தந்திரம்' தான் எதிர்வரும் ஆண்டும் நடக்கும். இதில் எந்த மாற்றமும் இருக்க போவதில்லை. இதற்குதான் இவ்வளவு விளம்பர வாணவேடிக்கைகளை நடத்திக் கொண்டிருக்கிறது காங்கிரசு ஆட்சி.

எம்.ஜி.ஆர் மறைவால் ஓட்டுகட்சிகளின் அரசியலில் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்தை எப்படியும் தான் நிரப்பிவிட வேண்டும், ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்று வாயில் எச்சில் ஒழுக தமிழக மக்கள் முன் வலம் வருகிறது காங்கிரசு கட்சி.

குறிப்பாக எம்.ஜி.ஆரின் வெற்றிக்கு உறுதுணையாய் இருந்த "தாய்குலத்தின்" ஓட்டை தம் பக்கம் இழுத்துவிட வேண்டும் என்பதற்கு, பெண்களுக்கு வேலைவாய்ப்பு உதவி பணம் என தம்பட்டம் அடிக்ககிறது.

ஓட்டு பொறுக்க எம்.ஜி.ஆர். கையாண்ட, சத்துணவு திட்டம், செருப்பு வழங்கும் திட்டம், போன்ற கவர்ச்சி மிகு இலவச திட்டங்களை "முனைப்புடன் செயல்படுத்த" போவதாக வாக்குறுதி அளித்து வாக்காளர்களை தம் வலையில் வீழ்த்தப்பார்க்கிறது. காங்கிரசு கும்பல் அறிவித்த தொழில் முன்னேற்றம், அதற்கான திட்டம் எதுவும் வெறும் காகிதத்தில் கூட ஏறவில்லை. மேடைப்போச்சோடு மறைந்துவிட்டது.

உழைக்கும் மக்கள் விழிப்போடிருக்க வேண்டிய தருணமிது. ஏனைய ஓட்டுக் கட்சிகள் போலவேதான், கண்ணைப் பறித்துக் கொண்டு கைத்தடி கொடுப்பதற்கு காங்கிரசு கும்பலும் ஓடோடி வருகிறது.

● மணி



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய
அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

10

1-15 ஏப்ரல் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர் :'புதிய ஜனநாயகம்'

21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை-600 015.

# பஞ்சாப் அவசரநிலை ஆட்சி

# சட்டபூர்வமாக வரும் பாசிசம்

பாசிச ராஜீவ் கும்பல் நிறைவேற்றியுள்ள 59-வது அரசியல் சட்ட திருத்தத்தின்படி பஞ்சாபில் எந்த நேரமும் அவசர நிலை ஆட்சி பிரகடனப்படுத்தப்படலாம். அதன்பின் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் எவரும் பஞ்சாப் பற்றிய செய்திகளையோ, கருத்துக்களையோ எழுதவோ பேசவோ கூடாது; அரசாங்க அனுமதியின்றி எவரும் பஞ்சாபிற்குள் நுழைய முடியாது; வியாபார தொழில் உறவுகளை வைத்துக் கொள்ள முடியாது; பஞ்சாப் மக்களுக்கு நீதி வழங்கக் கோரியோ, மதவெறி, அரசு பயங்கரவாதங்களை எதிர்த்தோ நாட்டின் எந்தப் பகுதியிலும் பேச, எழுத முடியாது. இவைகளை யாராவது மீறினால் அவர்களை சுட்டுக் கொல்வது முதல் போலீஸ் என்ன வேண்டுமானாலும செய்யலாம், இதற்கு கேள்வி முறை எல்லாம் கிடையாது.

யுத்தத்தினாலோ, வெளிநாட்டு ஆக்கிரமிப்பினாலோ அல்லது உள்நாட்டு குழப்பத்தினாலோ இந்தியாவினுடைய அல்லது இந்தியாவின் ஒரு பகுதியினுடைய பாதுகாப்பிற்கோ, ஒருமைப்பாட்டிற்கோ ஆபத்து ஏற்பட்டிருப்பதாக குடியரசுத் தலைவர் கருதினால் அவசரநிலையை ஒரு பகுதியில் பிரகடனப்படுத்தலாம். அப்போது அடிப்படை உரிமைகளை வழங்குவதாக சொல்லும் சட்ட ஷரத்துக்கள் 14, 19, 21 ஆகியவை தானாகவே ரத்தாகிவிடும். இதைத்தான் புதிய சட்டதிருத்தம் செய்துள்ளது. 'ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து' என்பது பாசிச ராஜீவ் புதிதாக சேர்த்திருக்கும் காரணமாகும். அதேபோல, முன்னர் 'ஆயுதந்தாங்கி கலகம்' என்று இருந்ததை தற்போது 'உள்நாட்டு குழப்பம்' என்றும் மாற்றியுள்ளது.

சொல்லப்படுவது போல இந்த சட்டதிருத்தத்தின் நோக்கம் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக அல்ல. தேசிய பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டம் போன்ற சரமாரியான சட்டங்கள் மூலம் போலீஸ் ஏற்கனவே பஞ்சாபில் கேள்விமுறையில்லாத காட்டு தர்பார் தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்; புது அதிகாரங்கள் கொடுப்பதற்கு அங்கு ஒன்றுமில்லை.

எனவே பஞ்சாப் மக்களுக்குள்ள மிச்ச சொச்ச அடிப்படை உரிமைகளையும் அடியோடு துடைத்தொழித்து அவர்கள் மீதான அடக்குமுறையை தீவிரப்படுத்துவதுதான் இச்சட்டத்தின் நோக்கமாகும். குறிப்பாக மதவெறி பயங்கரவாதத்தையும் அரசு பயங்கரவாதத்தையும் ஒரு சேர எதிர்த்து போராடும் புரட்சிகர சக்திகளை ஒடுக்குவது தான் நோக்கமாகும்.

அதேபோல 'மிதவாதிகளை' ஒரு எல்லைக்கு தள்ளி விடுவதும் இதில் அடங்கும்; ஒரு பக்கம் மதவெறி பயங்கரவாதம்; இன்னொரு பக்கம் அரசு பயங்கரவாதம்: பஞ்சாபில் இருக்கும் ஒருவர் இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒன்று மதவெறி பயங்கரவாதியாக மாற வேண்டும்; அல்லது அரசு பயங்கரவாதத்தின் அடியாளாக மாறவேண்டும். வேறு வழியில்லை; இந்த நிலையை ஏற்படுத்தி தான் விடுவித்துள்ள 'தீவிரவாதிகள்' ஒரு சிலரை நிர்ப்பந்தப் படுத்தி, பிற 'தீவிரவாதிகளை' ஒதுக்கி விட்டு சமரச ஒப்பந்தத்தைப் போட்டு தனது குறுகிய பதவி வெறி, கும்பல் நலன்களைச் சாதித்துக் கொள்ள பாசிச ராஜீவ் கும்பல் திட்டமிட்டுள்ளது.

பாசிச ராஜீவ் அரசின் முக்கிய நோக்கம் பஞ்சாப் நிலையை காரணம் காட்டி பாசிச ஆயுதத்தை ஏந்திக் கொள்வதாகும்.

இன்னும் குறிப்பாக நாட்டின் பிற பகுதிகளிலிருந்து ஒரு பகுதியைத் துண்டித்து ஒரு தீவு போல ஆக்கி அங்கு மட்டும் பாசிசத்தைக் கட்டவிழ்த்துவிட அதிகாரத்தைப் பெற்றுள்ளது. எதிர்ப்பை பகுதி பகுதியாக பிரித்து சமாளிக்கவும், நாடுதழுவிய எதிர்ப்பு உருவாகாமல் தடுக்கவும், தனது கோரமுகம் நாடு முழுவது ஒரே சமயத்தில் அம்பலமாகாமல் இருக்கவும் தான் இவ்வாறு செய்துள்ளது. எனவே, 1975-ல் இந்திரா அறிவித்த பாசிச ஆட்சியைவிட ராஜீவ் ஏந்தியிருக்கும் ஆயுதம் மிகவும் அபாயகரமானது; நயவஞ்சகமானது.

உறையில் கிடந்த கொலைவாளை எடுத்து சானை பிடித்து கையில் ஏந்திக் கொண்டு விட்டது பாசிச ராஜீவ் கும்பல்; எந்த நேரமும் அது நமது கழுத்தை நோக்கி வீசப்படலாம்.

நாடாளுமன்றத்தில் கூப்பாடு போடுவதாலோ குடியரசு தலைவரிடம் மனு கொடுப்பதாலோ இந்த அபாயத்தை முறியடித்து விட முடியாது; ஏனென்றால இந்த ஆபத்திற்கு அங்கீகாரம் அளித்ததே நாடாளுமன்றம் தான்.

நீதி மன்றத்தின் மூலம் இந்த அபாயத்தை நீக்கி விட முடியாது; ஏனென்றால் 1975-ல் போடப்பட்ட அவசர நிலை ஆட்சி அரசியல் சட்டத்தின்படி செல்லும் என நீதி வழங்கியது நாட்டிலேயே உயர்ந்த நீதிமன்றமான சுப்ரீம் கோர்ட்தான்.

சட்டத்திற்கு உட்பட்ட போராட்ட முறைகள், நிறுவனங்கள் மூலமும் சாதிக்க முடியாது; எனவே, நாடாளுமன்ற சட்டமன்றங்களுக்கு வெளியே ஓர் ஆயுதந்தாங்கிய மக்கள் திரள் போராட்டத்தின் மூலமே இந்த பாசிச ஆயுதத்தை அழித்தொழிக்க முடியும்! அதற்காக அணிதிரள்வோம் ●

படிப்பகம்

www.padippakam.com



# ஈழம் : துரோகத்தை நோக்கி...?!

ஒரு நூறு ஆயிரம் துருப்புகளை கொண்டு போய் பாசிச ராஜீவ் கும்பல் கொலை வெறியாட்டம் போட்ட போதும் ஈழத்தமிழ் மக்கள் மண்டியிட்டு விடவில்லை. மாறாக, இந்திய ராணுவத்தை கதிகலங்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சலுகைகள், கார்ருண்ய பேச்சுகள், பொய்ப்பிரசாரம், துரோகிகளின் காட்டிக் கொடுப்பு இவை எவற்றாலும் அவர்களின் போராட்ட உணர்வின் முனையை மயிர்முனை அளவு கூட மழுங்கடிக்க முடியவில்லை.

தோல்வியாலும் அவமானத்தாலும் முகத்தில் கரி பூசப்பட்டு சர்வதேச அரங்கில் தனிமைப்பட்டு நிற்கும் பாசிச ராஜீவ் கும்பல் புதிய ஸ்டண்ட் ஒன்றை அடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளின் இயக்கத்தை எப்படியாவது நிர்ப்பந்தித்து சில சிறு அம்சங்களில் விட்டுக் கொடுத்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அப்படியே அமுலாக்க அவசரம் அவசரமாக செயல்படுகிறது. இதற்காக பிரபாகரனை தனித்து வேட்டையாட இராணுவத்தை ஏவி விட்டுள்ளது. பிரபாகரனைச் கொல்வதன் மூலமோ அல்லது சிறைப்பிடிப்பதன் மூலமோ இதைச் சாதிக்கலாம் எனக் கருதுகிறது. இதற்காக, இல்லை இல்லை எனச் சொல்லிக்கொண்டே இலங்கை இராணுவமும் இப்போது களத்தில் இறக்கி விடப்பட்டுள்ளது.

இன்னொரு புறம் இரகசிய பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது. சாதகமான முடிவை அடைந்த பின்னர் **அதைக்காட்டி தமிழ்நாட்டுத் தேர்தலில் வோட்டு பொறுக்குவது; இதற்காகவே** ஏப்ரல் 23, 24 தேதிகளில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி மாநாட்டை சென்னையில் வைத்துள்ளது. 'வெற்றிகரமான' ஒப்பந்தம் முடிக்கப்பட்டுள்ளது என மாநாட்டில் ராஜீவ் பெருமையாக அறிவிப்பது; அதற்குப்பின் தேர்தல் அறிவிப்பு என திட்டமிட்டுள்ளது.

தொடர்ந்து தோல்வியுறுவதை மறைத்து வெற்றியாகக் காட்டி கௌரவமாக சிக்கலில் இருந்துவிடுபடுவது; தமிழர் நலனுக்காக பாடுபடும் ஒரே தலைவர் ராஜீவ் என தம்பட்டம் அடித்து வோட்டு பொறுக்குவது என ஒரே கல்லில் இரு கனிகளை விழ்த்த பாசிச ராஜீவ் கும்பல் திட்டமிட்டுள்ளது.

ராஜீவ் காந்தியின் திட்டத்திற்கு பிரபாகரன் ஒப்புக்கொள்ளலாம். 'யாழ்ப்பாணத்தை' மட்டும் நிர்வாகம் செய்யும் அதிகாரம்; கிழக்குப் பகுதியை விட்டு வெளியேறி விடுவது' என்ற அடிப்படையில் உடன்பாடு காண விடுதலைப்புலிகள் ஜெயவர்த்தனா அரசோடு இரகசியமாக பேசி வருவதாக செய்தி அடிபடுகிறது. ராஜீவ்காந்தி கொடுத்த கடிதத்தை எடுத்துவர தனது கமாண்டர்களை விடுதலைப்புலிகள் இயக்கம் அனுமதித்தது; பிரபாகரன் எந்தப் பகுதியில் எங்கு தங்கியிருக்கிறார் என இந்திய இராணுவத்திற்கு தெரியுமளவுக்கு செய்தியை எடுத்துவர ஒப்புக் கொண்டது; 'புலிகளின் தாகம்; தமிழீழ தாயகம்' என்ற முழக்கம் இப்போதெல்லாம் இவர்களிடமிருந்து கோரிக்கையாக வராமலிருப்பது ஆகியவைகள் எல்லாம் எப்படியாவது ஒரு உடன்பாட்டிற்கு வர வேண்டும் என்பதில் விடுதலைப்புலிகள் குறியாக இருக்கிறார்கள் என்பதையே காட்டுகின்றன. அண்மையில் விடுதலைப் புலிகளின் அரசியல் கமிட்டி விடுத்துள்ள 'இந்தியாவும் ஈழத்தமிழர் நெருக்கடியும்' என்ற பிரசுரம் இதை நிரூபிப்பதாக இருக்கின்றது. இதை மட்டுமல்ல, 'புதிய ஜனநாயகம்' வெளியிட்ட பல கருத்துகளை புலிகள் இந்த பிரசுரத்தில் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு சுயமரியாதையும் பாதுகாப்பும் சமாதானமும் உத்திரவாதம் செய்யப்பட வேண்டும்; இதைச் செய்தால் நாங்கள் ஆயுதத்தை கீழே போடத் தயார் என்று புலிகள் இந்த பிரசுரத்தில் சொல்கிறார்கள்;

"சரணடைந்து ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கம் விரும்புகிறது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை வார்த்தையளவில் மட்டுமல்லாது உணர்விலும் நாங்கள் முற்றாக ஒப்புக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறது. ஒரு ஜனநாயக வழிமுறையின் மூலம் அரசியல் நீரோட்டத்தில் நாங்கள் இணைய வேண்டுமென்று இந்திய அரசாங்கம் விரும்புகிறது. இந்த நிபந்தனைகளை இந்தியா நட்புறவு முறையிலும் அமைதியான முன் வைக்கட்டும்! இதையே அவர்கள் நல்லெண்ணத்துடனும் மனிதாபிமான உணர்வுடனும் சொல்லட்டும்! ஆனால் இந்தியப் படையோ எங்கள் யாழ்ப்பாணத்தை ஒரு பேய் நகரமாக மாற்றிவிட்டது! தமிழர்களின் சமாதிகளில் நின்று கொண்டு இவற்றை இந்திய அரசாங்கம் கத்திக் கொண்டிருக்கிறது. இராணுவத் தாக்குதல்கள் மூலம் எங்களை நிர்ப்பந்தப் படுத்தி அடிபணிய வைக்க முயல்கிறது."

(ஷ பிரசுரம், பக். 22)

கவுரவ பிச்சை! கண்ணியமான அடிமை சாசனம்! இதுதான் அவர்களது நிபந்தனை. இப்படி நாம் சொல்வதால் ஈழத்தமிழர்களையோ, போராளிகளையோ அவர்களது போராட்டத்தையோ இழிவுபடுத்துவதாக அர்த்தமல்ல. மாறாக, இவர்களை எல்லாம் இழிபடுத்தும் வகையில் விடுதலைப் புலிகளின் தலைமையும் பிரபாகரனும் செல்கின்ற அபாயம் இருப்பதை உணர்த்தவே. 'தனது தலைமையை மட்டும் ஈழப் பிரதிநிதியாக அங்கிகரிக்கும் பட்சத்தில் இந்திய அரசின் கைப்பாவையாக இருப்பதற்கு புலி பிரபாகரன் தயாராக உள்ளார்' என ஏற்கனவே 'புதிய ஜனநாயகம்' சுட்டிக்

புலிகளால் அழித்தொழிக்கப்பட்ட இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினர் .......

## இந்த வீரம் துரோகத்துக்கு இடந்தருமா?





படிப்பகம்

www.padippakam.com

காட்டியிருந்தது. இன்னும் அப்படிப் பட்ட மனப்பாங்கில்தான் பிரபாகரன் உள்ளார் என்பதை உறுதிப்படுத்து கிறோம்.

தோல்வியுறச் செய்து அவமானப் படுத்தி ஒப்பந்தத்தை இந்தியா திணித்து விடக் கூடாது என்பதற்காகவே யுத்தத்தை விடுதலைப் புலிகளின் தலைமை, குறிப் பாக பிரபாகரன் நடத்துவதாகத் தெரி கிறது. ஜனரஞ்சகமான முழக்கங்கள், போலி சோசலிச வாக்குறுதிகளை வாரி வீசி வோட்டுப் பொறுக்கி அரசு சன்மானங்களை கொள்ளையிட முய லும் போனபார்ட்டிஸ்ட் கட்சிகள் அர சியல் ரீதியில் செய்வதையே இவர்கள் இராணுவ ரீதியில் செய்ய முயற்சிக் கிறார்கள்.

"இந்திய அரசாங்கத்துடனான உறவை வலுப்படுத்தவே நாங்கள் எப்போதும் விரும்பினோம். இந்தியாவின் கூட்டா ளியாகவே செயல்பட விரும்பினோம். கிழக்காசிய பிராந்தியத்தில் இந்தியா ஒரு மாபெரும் சக்தியாகும். இந்துமாப் பெருங்கடலிலும் யுத்த தந்திர ரீதியிலான இடத்தில் உள்ள இலங்கையிலும் இந்தியா விற்கு புவியியல் — அரசியல் நலன்கள் இருப்பதை நாங்கள் அறிவோம். பிராந் தியம் மேலதிகாரம் பெறுவது என்ற எங்களை இந்தியாவிற்கு எதிரானவர் கள் என கணித்து ஒழித்துக்கட்ட இந்தியா தீர்மானித்திருப்பது கவலையளிக்கிறது. (ஷ. பக்.11)

இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நுகத்தடியை மாட்டிக் கொள்ளத் தயாராக இருக்கும் எங்களை ஒழித்துக் கட்ட இந்தியா முயலக்கூடாது என்று பிரகனப்படுத்துவது மூலம் விடுதலைப் புலிகள் செய்யப்போவது துரோகமே. பாசிச ராஜீவின் பாதந்தாங்கியாக இருப்பதற்காக சிங்கள பேரினவாத ஒடுக்குமுறையியிலிருந்து விடுதலை பெற ஈழ மக்கள் போராடவில்லை. விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு சமூக பாசிஸ்டு இயக்கம் என்றும் இந்திய உளவுப் படையான ரா-வால் இயக்கப் பட்டது இந்தக் குழு என்றும் 'புதிய ஜனநாயகம்' அடுத்து வெளியிட்டிருந்தது ஜெயவர்த்தனே அரசிற்கு எதிரான ஈழ மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமைக் கான போராட்டத்தை பயன்படுத்தி இலங்கையில் பிராந்திய மேலாதிக்கம் செய்வதும் தெற்காசிய பிராந்தியத்தில் விரிவாக்கம் செய்வதும்தான் இந்தியா வின் நோக்கம்; மற்றபடி ஈழத்தமிழர் களின் நியாயமான பேராட்டத்தை ஆதரித்து அல்ல எனவும் 'புதிய ஜன நாயகம்' எழுதி வந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு நாம் எழுதி வரும் கருத்துக் களை எல்லாம் இன்று விடுதலைப் புலி கள் தமது மேற்சொன்ன பிரசுரத்தில் ஒப்புக் கொண்டுள்ளார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் சமூக பாசிஸ்டு தன்மை கொண்டிருப்பினும் இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்துப் போரிடும் வரை அதை ஆதரிப்பது தான் சரியானது என ஆதரித்து எழுதி வருகிறோம். அதே வேளையில் எப் பொழுது பிரபாகரன் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை இந்திய அர சாங்கத்திடமோ அல்லது இலங்கை அரசாங்கத்துடனோ அல்லது இரண்டும் சேர்ந்த கூட்டிடமோ அடகு வைக்க உடன்படுகிறதோ அப்போது அவரை துரோகி என்று அடையாளம் காட்டவும் தயங்க மாட்டோம்!

விடுதலைப் புலிகளின் அரசியல் கமிட்டி வெளியிட்ட பிரசுரம் பின்வரு மாறு குறிப்பிடுகிறது :

"1977-ல் அதிகாரத்திற்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனே ஆட்சி தமிழர்கள்பால் மேலும் கடுமையான கொள்கையை கடைப்பிடித்ததோடு மேற்கத்திய முதலாளித்துவ நாடு களோடு வெளிப்படையாக அணிசேரும் விதத்தில் தனது வெளிநாட்டுக் கொள் கையையும் உருவாக்கியது."

"சிரீ இலங்கா அரசின் இந்த புதிய வெளிநாட்டுக் கொள்கையானது இந்த பிராந்தியத்தில் இந்தியாவின் மேல் நிலைக்கும் புவியியல் — அரசியல் தலைமைக்கும் ஒரு மிரட்டலாக அமைந் தது. 1983 ஜூலையில் நடந்த இரத்தம் தோய்ந்த இன மோதலும் அதைத் தொடர்ந்து ஜெயவர்த்தனே மேற்கத்தி ய நாடுகளிடமிருந்து உதவி பெற மு யற்சித்ததும் இந்தியாவை கவலை கொள்ளச் செய்தன. அதன்பின் சிரீ இல ங்காவின் இன மோதலில் தலையிடுவ தென இந்தியா முடிவெடுத்தது."


"இந்த தலையீடானது ராஜ தந்திர துறையில் வெளிப்படையாகவும் இராணுவ முனையில் தலைமறைவாகவும் பிரகடனப்படுத்தாமலும் நடந்தது. இனமோதலில் அமைதியை உருவாக்க கொழும்புவில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டே ஆயுதப் போராட்டத்தை தீவிரப்படுத்தி போராளி குழுக்களுக்கு இராணுவப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுப்பது என இந்தியா முடிவெடுத் தது. இந்தியாவின் இந்த தலை யீடானது ஈழத்தமிழர்களின் நலன்களுக் காக அல்ல; மாறாக, சிரீ இலங்கா அரசிற்கு இராணுவ ரீதியில்நிர்ப்பந்தம் கொடுக்கும் உள்நோக்கம் கொண்டதா கும். அதன் மூலம் இந்திய அரசின் ராஜ தந்திர நிர்ப்பந்தத்திற்கு ஜெயவர்த்தனே ஆட்சியை பணிய வைத்து இந்திய அர சாங்கத்தின் பிராந்திய விரிவாக்க திட் டத்திற்கு இரையாக்குவதாகும். எனவே, இவ்வாறு, தனது பிராந்திய மேல்நிலையை சாதிக்கவும் அதற்கு சாதகமாக்கவும் தமிழின மோதலைப் பயன்படுத்த இந்தியா முடிவு செய்தது."

"தமிழ்ப் போராளிகளுக்கு இராணு வப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை ரா-விடம் (ஆராய்ச்சி மற்றும் பகுப் பாய்வுத் துறை) மறைந்த பிரதமர் இந்திரா காந்தி ஒப்படைத்தார். ரா-வின் சில அதிகாரிகளுடைய தன்னிச்சையா ன திமிர்த்தமான நடவடிக்கைகளினால் தமிழ்ப் போராளிகளிடையே இருந்த பல்வேறு குழுக்களிடையே இருந்த இடைவெளியை அதிகரிக்கச் செய்வ தோடு கட்டுப்பாடு கொண்ட ஒரு தேசிய விடுதலை இயக்கம் உருவாவதையும் தடுத்து விட்டது. மேலும் இது போராளி குழுக்களை முற்றாக இந்திய அரசாங்கத்தைச் சார்ந்திருக்கும்படி செய்ததோடு இந்திய அரசாங்கத்தின் அடிமைச் சேனையாக செயல்படும்படி யும் அவர்களை ஆக்கி விட்டது. ரா-வின் இந்த சாகசங்கள் எல்.டி.டி.ஈ.யும் ரா-வும் தனித்தனியே பிரிந்து செல்வதற்கும் பங்காற்றியது. மேலும் ரா-வின் இந்த மறைமுக இரகசிய நடவடிக்கைகளுக்கு உதவிய ஆள் சந்திரஹாசன் என நாங்கள் திட்ட வட்டமாக சுட்டிக்காட்ட விழைகிறோம்."

"சிரீ சபாரத்தினத்தின் டெலோ அமைப்பை, தான் வளர்ப்பதற்கான சரியான அமைப்பு என திரு. சந்திர ஹாசன் தேர்ந்தெடுத்தார். அதே சமயத்

சிங்கள இனவெறி இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஈழத்தமிழர்கள்

## இந்தத் தியாகம் வீண் போகுமோ?



படிப்பகம்

www.padippakam.com

தில் டெலோ ஆந்தவிதமான அமைப்பு கட்டுமானத்தையும் கொண்டிருக்க வில்லை. தமிழ்நாட்டில் தங்கியிருந்த வெறும் ஆறு பேர்களைக் கொண்ட குழுவாகவே அது இருந்தது; இவ்வாறு சந்திரஹாசனின் பதவி வெறி டெலோ இயக்கத்தின் மறுபிறப்பிற்கு வழி வகுத்தது.

"டெலோ இயக்கத்திற்கு எவ்வித சித்தாந்த தலைமையும் இல்லாததால் அதை தனது தீய திட்டங்களுக்கு ஏற்ப பதப்படுத்திக் கொள்ளலாம் என்ற நம் பிக்கையில் அதை வளர்ப்பதென ரா ஒப்புக் கொண்டது. ரா விரும்பியது எல்லாம் என்னவென்றால், சுயமான சிந்தனையும் உன்னதமான நோக்கங்க ளும் அற்ற ஒரு குழுவையே. ஏனென் றால், அதை தன்னுடைய அடிமைப் படையாக மாற்றிக் கொள்ள முடியும் என்பதால்."

"......... இவ்வாறு சிறீசபாரத்தினத் தின் தலைமையில் ஒரு பெரிய அடிமைப் படையை கட்டுவதில் திரு. சந்திரஹாசன் வெற்றி பெற்றார். இதற்கிடையே ஈ.பி.ஆர்.எல்.எஃப்-ம் ஈரோசும் சந்திர ஹாசனிடம் சென்று அவர் மூலம் பயிற் சித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டன."

"... இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்திலிருந்து எல்.டி.டி.ஈ.-யை எட்டத்தில் வைக்க திரு. சந்திரஹாசன் சாத்திய மான அனைத்து வழிகளையும் கையாண்டார். அத்துடன் டெலோ வைக் கொண்டு எல்.டி.டி.ஈ.-யை ஒழித் துக்கட்ட திட்டமிட்டார். எங்களுடைய கண்ணோட்டம் மிகத் தெளிவானது. சந்திஹாசனுடைய சாகசங்களில் சிக்கிக் கொள்ளவோ இந்தியாவின் அடிமைச் சேனையாக ஆகவோ நாங்கள் எப் போதும் விரும்பவில்லை. அதே சமயத் தில் தவறாக வழி நடத்தப்பட்ட பிற குழுக்கள் இராணுவ ரீதியில் பலம் பெற்று வருவதைப் பற்றியும் அவர்கள் எங்களது குழுவை அழிக்கும் சாத்தியம் பற்றியும் கவலை கொண்டோம். அப்படி எங்கள் குழு ஒழிந்தால் அதுவே ஈழத்தில் சுதந்திர இயக்கத்தின் முடிவாக இருக்கும் என்று நாங்கள் உணர்வுப்பூர்வமாக எண் ணினோம். எனவே, கொஞ்ச காலம் கழித்து வரம்புக்குட்பட்ட பயிற்சி தரு வதாக இந்திய அரசாங்கம் எங்களை அணுகியபோது நாங்கள் ஏற்றுக் கொண்டோம். வரம்புக்குட்பட்ட உதவியை நாங்கள் பெற்றோம்."

"இந்திய அரசாங்கத்தின் ஒரு முக்கிய அங்கமாக ரா- அமைப்பு விளங்குவ தோடு அதன் வெளிநாட்டுக் கொள்கை யை பிரதிபலிக்கிறது. சட்டப்படி, இந் தியப் பிரதமரின் கீழ் நேரடியாக ரா செயல்படுகிறது. அது இந்திய அரசாங் கத்தின் விஷக் கொடுக்கு ஆயுதமாகும். எனவே, ரா- வின் நடவடிக்கைகளை இந்திய அரசியல் தலைமையின் நட வடிக்கைகளாகவே விளங்கிக் கொள்ள வேண்டும். எப்படியோ, ரா-வின் உயர் அதிகாரிகளில் சிலர் சுயேச்சையாக செயல்பட்டனர்; சிலர் சிஐஏ-வின் கையாளாகவும் செயல்பட்டு அரசுக்கு துரோகமிழைத்தனர். தமிழ் நாட்டில் ரா-க்கு பொறுப்பாக இருந்த திரு. உண்ணி கிருஷ்ணன் தான் பல்வேறு தமிழ் போராளி குழுக்களுடைய நட வடிக்கைகளின் ஒருங்கிணைப்பாளராக வும் செயல்பட்டார். ஆனால், தமிழ்ப் போராளிகளுக்கு எம்மாதிரியான பயிற்சிகள் மற்றும் ஆயுதங்கள் கொடுக் கப்படுகின்றன என்ற முக்கியமான விவ ரங்களை திரு. உண்ணி கிருஷ்ணன் சிறீ இலங்கா அரசிற்கு கொடுத்துக் கொண் டிருந்தார். ஒவ்வொரு குழுவினுடைய பலம், யுத்த தந்திர திட்டங்கள் போன்ற வைகளும் சிறீ இலங்கா அரசிற்கு தெரி விக்கப்பட்டன."

— இந்த நீண்ட மேற்கோள்களில் வெளியிடப்பட்டிருக்கும் உண்மைகள் அனைத்தும் 'புதிய ஜனநாயக'த்தால் ஏற்கனவே ஆணித்தரமாக எடுத்துரைக் கப்பட்டவைகள்தான்! இன்று விடு தலைப் புலிகளே இதற்கு வாக்குமூலம் கொடுத்துள்ளனர். விடு தலைப் புலிகள் பல உண்மைகளை ஒப் புக் கொண்டிருந்தாலும் வரலாற்றுப் பிடிப்பினைகளைக் கற்றுக் கொண்டதாக தெரியவில்லை. யாழ்ப்பாணத்தில் மட் டும் நாட்டாண்மை என்ற நிலையை புலிகள் ஏற்றுக் கொண்டு ஈழத்தமிழர் களின் சுய நிர்ணய உரிமை போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் அபாயம் இருப்பதைப் பற்றி ஈழ மக் களையும் ஆதரவாளர்களையும் எச்சரிக் கிறோம்! தற்போதுள்ள நிலையில் அப் படியே போர் நிறுத்தம்; அதையடுத்து நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைகள் என்ற யோசனையை விடுதலைப் புலி கள் இயக்கம் வெளிப்படையாகவே அறிவித்துள்ளது. ஆயுதங்களை ஒப் படைப்பது பற்றி ஆலோசிக்கும் முன் பு அக்டோபர் 10-ம் தேதி நிலைக்கு இந்திய இராணுவம் பின்வாங்கிச் செல்ல வேண்டும் என்ற நிபந்தனையை தற் போது எல்.டி.டி.ஈ. முன் வைப்ப தில்லை. இரண்டாவதாக, ஈழத்தமிழர் களின் நலன்கள் மற்றும் விழைவுகளை இந்திய-இலங்கை ஒப்பந்தம் பாதுகாக் குமானால் ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒத்துழைப்போம் என்று இரண்டும் கெட்டான் தனமாக அறிவித்துள்ளது ஆகியவை இந்த அபாயத்தை பற்றியே எச்சரிக்கின்றன.

குட்டி முதலாளிய சித்தாந்தத்தையே உலக கண்ணோட்ட மாகக் கொண்டுள்ளதால் கோழைத் தனமான, அடிமைத்தனமான ஒரு முடிவை விடுதலைப் புலியின் தலைமை எடுப்ப தற்கான சாத்தியம் உள்ளது. இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கு — அரக்கப் படைக்கு எதிராக போரிட்டுக் கொண் டிருக்கிற முன்னணி இயக்கமாக விடு தலைப்புலி இயக்கம் மட்டுமே உள்ளது. எனவே அந்த இயக்கத்தின் போராளி கள் இன்னும் விழிப்புடன் இருக்க வேண்டும்; தலைமை துரோகம் செய் தாலும், உரிமைப் போராட்டத்திற்காக உயிரையே அர்ப்பணம் செய்ய ஆயிர மாயிரம் ஈழத்தமிழர்கள் தயாராக இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத் தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்; அதற்கு புரட்சிகர சித்தாந்தத்தை ஏந்து வது முதல் நிபந்தனையாகும்!

சுயநிர்ணய உரிமைக்காக போராட துணிந்துவிட்ட ஒரு தேசிய இனத்தை ஒடுக்க இந்த உலகத்தில் உள்ள எந்த சக்திக்கும் வல்லமை இல்லை; வரலாற் றின் விதியது! 'இன்னும் முன் னேறுங்கள்! தேசிய சுய நிர்ணய உரி மைக்கான போராட்டத்தை முன் னெடுத்துச் செல்லுங்கள்! இந்திய ஆக்கிரமிப்புப் படையை விரட்டியடி யுங்கள்!

● மாணிக்கவாசகம்

## கோழைத்தனம்! அநாகரிகம்!!

டோனி (ஜானி)! இந்திய ஆக்கிரமிப் புப் படையால் கோழைத்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

தான் அனுப்பிய தூதுவரை பின்பற் றிச் சென்று எதிரியின் இருப்பிடத்தை அறியமுயன்ற இந்திய இராணுவத்தின் செயல் நயவஞ்சகமானது; கேவலமானது. இராணுவம் பின்தொடர்கிறது என்ற வுடன் முன்செல்ல மறுத்து, உறுதியுடன் எதிர்த்து நின்று, உயிர்த் தியாகியான டோனிக்கு எங்கள் வீர வணக்கம்!

தூதுவரைச் சுட்டுக்கொல்வது போன்ற ஈனத்தனம், இழித்தன்மை இந்த உலகில் வேறு எதுவுமில்லை. இந்த கோழைத் தனத்தை, அநாகரிகத்தைச் செய்த இந்திய இராணுவத்தின் முகத்தில் ஒவ்வொரு வரும் காரித்துப்ப வேண்டும்.

சமரில் கொல்லப்பட்டு வீரமரணம் எய்தவில்லை டோனி. தூதுவராகச் சென்று நிராயுதபாணியான நிலையில் சாதார மாக கொல்லப்பட்டிருக்கிறார். ஆக்கி மிப்பு படையை எதிர்த்துப் போரிடுகின் ஒரு படைத்தளபதிக்கு நேர்ந்த இந்த கதிக் விடுதலைப் புலிகளின் தலைமைதான் கா ணம்.

ராஜீவ்காந்தியின் செய்தியை எடுத்த கொண்டு தமிழ்நாட்டிலிருந்து இந்திய இர ணுவ ஹெலிகாப்டரில் சென்றிருக்கிறா டோனி. அதுமட்டுமல்ல, இந்திய இர ணுவ முகாமிலிருந்து பிரபாகரனின் இரு பிடத்திற்கு புறப்பட்டுச் சென்றிருக்கிறார்.

பகிரங்கமாக தனது நோக்கங்கள அறிவித்து சுயநிர்ணய உரிமைப் போரி உறுதியாக நிற்காமல், இரகசிய பேச் வார்த்தை, பேரங்கள் மூலம், உரிமை போருக்கு உலை வைப்பதாக இருந்தாலு பரவாயில்லை, எப்படியாவது ஒரு உட பாட்டை அடைய வேண்டுமென்று ஆசை படுகின்ற விடுதலைப்புலிகளின் தலைமை குறிப்பாக, பிரபாகரன்தான் இதற்குக் கா ணம்!



படிப்பகம்

www.padippakam.com

## சந்திரசாமி :

# ராஜகுருவா? ரகசிய உலகப் பேர்வழியா?



அரசாங்கம் என் பாக்கெட்டில் இருக்கிறது!" — சந்திராசாமி

சந்திராசாமி — சமீப காலமாக பத்திரிக்கைகளில் பரபரப்பாகவும், பிரபலமாகவும்அடிபடும் புள்ளிகளில் ஒருவர். குறிப்பாக ராஜீவின் ஆட்சியைக் கவிழ்க்க ஜெயில்சிங்கிற்கு ரூ 40 கோடி வரை செலவிடத் தயாராக இருந்த அரண்மனைச் சதியில் முக்கிய பங்காற்றியவர்.

ஆயுத வியாபாரி அட்னன் கஷோகியிலிருந்து அப்பல்லோ மருத்துவமனை அதிபர் பி.சி. ரெட்டி வரை உலகெங்கும் அவருக்கு தொழில் கூட்டாளிகள். ஆளும் காங்கிரசு மட்டுமின்றி எதிர்த்தரப்பு கோயங்கோ கும்பல் வரை அவருக்கு ஏராளமான நண்பர்கள்,

மத்திய மந்திரி பண்டாரி, நரசிம்மராவ் முதல், மாவீரன் ஜேப்பியார் வரை அவருக்கு எண்ணற்ற பக்தர்கள். ஹாலிவுட் நடிகை எலிசபத் டெய்லரிலிருந்து நம்மவூர் கமலஹாசன் வரை அவருக்கு கணக்கற்ற சீடர்கள். இதுவரை 150 நாடுகளுக்கு மேல் புனித யாத்திரை போனவர். பல நாட்டுத் தலைவர்களை மட்டுமல்ல உலகின் மிகப் பெரும் பணக்காரரரான புருனே நாட்டின் சுல்தானைக்கூட அருகே அழைத்துப் பேசும் அளவுக்கு ஆற்றல் மிக்கவர்.

ஒரு சாதாரண இந்தியப் பண்டாரம் எப்படி சர்வதேசப் பண்டாரமாக முடிந்தது? உலக நாட்டுத் தலைவர்களும் பெரும் புள்ளிகளும் எப்படி அவருக்குச் சீட ரானார்கள்? ராஜீவின் ஆட்சியைக் கவிழ்க்க ஜனாதிபதி விலை பேசும் அளவுக்கு அவ்வளவு பணம் முற்றும் துறந்த முனி வருக்கு எப்படி கிடைத்தது .

• • •

நேமி சந்திரா ஜெயின் என்ற இயற் பெயரைக் கொண்ட சந்திரசாமி, ஐம்பதுகளின் இறுதியில் இளைஞர் காங்கிரசின் தீவிர செயல் வீரராகப் பணிபுரிந்து பின்னர் மனம் வெறுத்து சந்நியாசியாகி சந்திரா சாமியாக மாறினார்.

லஞ்ச ஊழலில் சிக்கி அம்பலப்பட்டு அதிகாரத்துக்கு நெருக்கடி வரும் போதெல்லாம் ஓட்டுச்சீட்டு அரசியல் வாதிகள் ஏதாவது ஒரு சாமியாரின் காலைப் பிடித்து நம்மைப் பிடித்த 'கெட்ட காத்தை' விரட்ட குறி கேட்பது வழக்கம். '70 களில் ஹைதராபாத்தில் சித்து , வேலை செய்து வந்த சந்திரசாமியிடம் அன்றைய ஆந்திர முதல்வர் சென்னா ரெட்டி ஓடோடி வந்து காலில் விழுந்த பிறகு, சந்திரசாமி அவரின் மாயகுருவாக மாறினார்.

மாநில முதல்வருக்கே குருவாகிவிட்ட சந்திரசாமியின் புகழ் திடீரென பரவத் தொடங்கியது. அதன் பிறகு மத்திய மந்திரி நரசிம்ம ராவ் அவரின் சீடரானார். இதைத் தொடர்ந்து ஐதராபாத் சாமியார் அகில இந்திய சாமியாராக பதவி உயர்வு அடைந்தார்.

சந்திரசாமி தனது ஆசிரமத்தை டெல்லிக்குத் தூக்கிக் கொண்டு போய், இந்திரா காந்தியின் செல்வாக்கு மிக்க செயலாளராக இருந்த யஷ்பால் கபூரை தனது 'மாய வலையில்' சிக்க வைத்து அவரை நண்பராக்கிக் கொண்டார். இதன் மூலம், பாசிச பக்தை இந்திரா காந்தியின் ராஜகுருவாக மாறினார். அதன் பிறகு கேட்கவா வேண்டும்? மந்திரிப் பிரதானிகள் அதிகாரிகள், வர்த்தக சூதாடிகள், கருப்புப் பண முதலைகள், பெருநிலப் பிரபுக்கள், தரகு முதலாளிகள், அதிகாரத் தரகர்கள் என்று அவரை மொய்க்கத் தொடங்கினர்

ரகசிய உலகப் பேர்வழி கஷோகி — சாமியாரின் ஆயுத பேரத் தரகுத் தொழில் கூட்டாளி



சாதாரணமாக பண்டாரங்கள் தமது செல்வாக்கை பெரும்புள்ளிகளிடம் நிலைநாட்டவும் ஒரு உத்தியைக் கையாள்வதுண்டு. குறி கேட்க வரும் ஒரு தனவந்தர் கூறும் தீராத பிரச்சினைகளை அதேபோல குறி கேட்க வரும் வேறொரு அதிகாரி மூலம் தீர்த்து வைப்பது வழக்கம். அவர் பண்டாரம் கூறுகிறாரே என்ற பயபக்தியோடு காரியத்தை முடித்துக் கொடுப்பார். இவர் சாமியாரின் அருட்கடாட்சத்தால் தான் காரியம் கைகூடியது என்று புகழ்பாடி புதிய சீடர்களை அழைத்து வருவார். இந்த கீழ்த்தரமான தரகு வேலையை திறமையாக செய்ததால் தான் சந்திராசாமி பெரும் புள்ளிகள் மத்தியில் பிரபலமானார். படகுக் காரில் வந்திறங்கும் பக்தர்களுக்கு வசதியாக ஒரு பெரிய விடுதியையும், ஐந்து நட்சத்திர ஓட்டலில்எப்போதும் தயாராக ஒரு குளு குளு அறையையும் வாடகைக்கு எடுத்துக் கொள்ளுமளவுக்கு அவருடைய 'தொழில்' விரிவடைந்தது.

இதற்கிடையே கான்பூரைச் சேர்ந்த சிறு வர்த்தகரும் அதிகாரத் தரகருமான கைலாஷநாத் அகர்வால் எனப்படும்மாமாஜி சந்திரசாமியின் நெருங்கிய நண்பரானார். சஞ்சய் காந்தியின் விசுவாசியும் கூட்டாளியுமாக விளங்கிய அகர்வால் மூலம் சஞ்சய் காந்தியின் ஆஸ்தான பண்டாரமானார். அன்றைய ஜனதா அவியல் கூட்டணி கோஷ்டி தகராறுகளில் சிக்கியிருந்தது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு ஜனதா கூட்டணியைப் பிளவு படுத்தி, ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிட்டிருந்த காங்கிரசின் — சஞ்சய் காந்தியின் சதித் திட்டத்தை ராஜ்நாராயணனிடமும் சரண்சிங்கிடமும் விளக்கி அவர்களை வஞ்சக வலையில் வீழ்த்தும் வேலையை சந்திரசாமியும் அவரது கூட்டாளியான அகர்வாலும் மேற்கொண்டு வெற்றி பெற்றனர். இப்படி அதிகாரத் தரகர் மட்டுமல்ல



படிப்பகம்

www.padippakam.com

அரண்மனை ஆட்சிக் கவிழ்ப்பு சாகசங்களிலும் தான் கைதேர்ந்த சாணக்கியன் என்பதை நிரூபித்தனர் சந்திரசாமியும் அவரது தொழில் கூட்டாளியும்.

பின்னர் மீண்டும் பாசிச இந்திராபதவிக்கு வந்ததும் தனது விசுவாசத்தைக் காட்ட நிலையான ஆட்சி நீடித்து நிலைத்திருப்பதற்காக சண்டிகரில் மகாயக்ஞம் நடத்தினார் சந்திரசாமி. மீண்டும் மாநில, மத்திய மந்திரிகள் சாமியாரின் சீடர்களாகி சாமியாரின் யாகத்தின் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஆளும் காங்கிரசு கும்பலுடன் தமக்கிருந்த நெருக்கத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்திக் கொண்டு சாமியாரும் அவர் கூட்டாளியும் வெளிநாடுகளிலும் தமது தொழிலை விருத்தி செய்ய திட்டமிட்டனர். இதற்கு வாய்ப்பாக சாமியாரின் நீண்ட கால சீடரான நரசிம்மராவ் அன்று வெளியுறவு மந்திரியாக இருந்தார்.

உங்களுக்கு இந்தியாவில் தொழில் தொடங்க லைசென்ஸ் வாங்க வேண்டுமா? சந்திராசாமி ஏற்பாடு செய்து தருவார். மத்திய - மாநில மந்திரிகள் மூலம் உங்களுக்கு காரியம் ஆக வேண்டியிருக்கிறதா? சாமியார் அதற்கு உதவி செய்வார். இந்த சேவை களுக்காக டாலர் வரை 'காணிக்கை' வசூலிப்பது உண்டு. விவகாரம் பெரிய தாக இருந்தால் அதற்கேற்ப காணிக்கை யும் அதிகமாகும். சந்திராசாமியின் மூளையாகச் செயல்படும் அகர்வால், வியாபாரிக்கே உரிய தனிக்குணத் தோடு செயல்பட ஆரம்பித்தார். காணிக்கைகள் பெருகத் தொடங்கிய தும் பினாமியாகத் தனது உறவினர் களைக் கொண்டு அவற்றை முதலீடு செய்ய திட்டமிட்டார். இதன்படி, சந்திரா சாமியின் சொத்துக்கள் பினாமிகளின் பெயரில் இந்தியாவிலும் வெளிநாடு களிலும் கம்பெனிகளாகவும், தொழில், போக்குவரத்து நிறுவனங்களாகவும் உருமாறியது.


பின்னர், 1984ல் உலகின் மிகப்பெரும் பணக்காரரான புருனே நாட்டின் சுல்தான், சந்திராசாமிக்கு நெருங்கிய நண்பரானார். சுல்தானின் தொடர்புக்குப் பிறகு சாமியாரின் தரகுத் தொழிலும் கிரிமினல் மோசடிகளும் அகிலம் முழுதும் விரிவடையத் தொடங்கியது.

அதன்பிறகு 1985ல் கள்ள ஆயுத வியாபாரியும், ஆயுத பேரத் தரகனு மான அட்னன் கஷோகி சாமியரின் கூட்டாளியானான். அப்போது கஷோகி கோடி க் கணக்கான டாலர்களுக்கு கட னாளியாகி தொழிலில் திவாலாகி விட்ட நிலையில் இருந்தான்.

சந்திராசாமி சுல்தானை சந்தித்து கஷோகியின் கடன்களை முறைப்படுத்தி நீண்ட காலத் தவணை யில் திருப்பியடைப்பதற்கான ஏற்பாடு களைச் செய்து கொடுத்தார். பின்னர் சாமியாரும் கஷோகியும் தமது கள்ளக் கூட்டு வியாபாரத்தை விருத்தி செய்வ தற்காக எட்டு திக்கெல்லாம் கஷோகி யின் தனிவிமானத்தில் பறந்தார். கஷோகியின் மூலம் உலகின் பல நாட்டு அதிபர்கள், பிரமுகர்கள், மன்னர்கள், தொழிலதிபர்கள், மற்றும் ஹாலிவுட் சினிமா நட்சத்திரங்களுக்கு சந்திரா்சாமி அறிமுகமானார். இந்த சர்வதேச தொடர்புகளைப் பயன்படுத்திக் கொண்டு வியாபார ஒப்பந்தங்களைப் பேசி முடிப்பதும் அதற்கீடாக லட்சக்கணக்கில் கமிஷன் அடிப்பதுமான தனது தொழிலை திறமையாக நடத்தி வந்தார். வியாபாரம் என்றால் ஏதோ வாங்குவது விற்பதில் இடைத்தரகராக

சூழ்ந்துள்ள அதிகாரிகளான அவரது சீடர்களின் உதவியால் கஷோகியுடன் அவரைச் சந்தித்தார். இந்தியாவின் ஆயுத வியாபாரத்தில் கஷோகியை இடைத்தரகராக நியமிக்க வேண்டிக் கொண்டார். ராஜீவ் இதற்கு சம்மதித் தாரா என்று தெரியவில்லை. ஆனால் ராஜீவை சந்தித்தபோது போட்டோ எடுத்துக்கொண்ட சந்திரா சாமி, அதை உலக ஆயுத வியாபாரிகளிடம் காட்டி தம்பட்டம் அடித்துக் கொண் டார். ராஜீவ் மட்டுமின்றி ரொமெஷ் பண்டாரி, நட்வர் சிங், நர சிம்ம ராவ் முதலான மத்திய மந்திரி களுடன் தனக்குள்ள நெருக்கத்தைக் காட்டி 'இந்திய அரசே எனது பாக்கெட் டில் இருக்கிறது' என்று பீற்றிக் கொண் டார்.

ஆனால் ராஜீவ் கும்பல் சாமி யார்-கஷோகி கும்பலை இடைத்தரகர்



தேவிலாலுடன் சந்திராசாமி

இருப்பது மட்டுமல்ல; ஈரானுக்கு அமெரிக்கா ரகசியமாக ஆயுதங்கள் கொடுத்து அதற்கீடாக பிணையக் கைதிகளை விடுவிக்கக் கோரிய 'ஈரான் கேட்' பேரத்தில் இடைத்தரகர்களாக சாமியாரும் கஷோகியும் இருந்திருக்கின்றனர். இப்படி ஏழு கடல் தாண்டி ஏழு மலை தாண்டுமளவுக்கு சாமியாரின் ரகசிய உலகத் தொடர்பு விரிவடைந்து கொண்டே போனது.

அதிகாரத் தரகு வேலையை விட ஆயுதபேரத் தரகு மூலம் குறுகிய காலத் திலேயே குபேரராக முடியும் என்பதை கண்டார் சந்திரா சாமி 1985ல் பாசிச ராஜீவ் அரசு அன்னிய நாடுகளிலிருந்து பெருமளவு ஆயுதக் கொள்முதல் செய்ய விருந்ததை தமது இந்திய 'சீடர்கள்' மூலம் அறிந்தார். ராஜீவ் அமெரிக்கா வுக்கு விஜயம் செய்தபோது, அவரைச்

களாக நியமிக்காமல் ஏமாற்றி விட்டது. தனது தாயைப் போலவோ, தம்பியைப் போலவோ இந்த கள்ளச் சாமியாரின் நட்பை ராஜீவ் விரும்பாததாலும், லண்டனில் சண்டே அப்சர்வர், இந்தியா வின் 'வீக்லி' 'ஆன்லுக்கர்' பத்திரிக்கை கள் சாமியாரின் வண்டவாளங்களை அம்பலப்படுத்தியதாலும், இந்த அரிய வாய்ப்பு கிடைக்காமல் போனதாகக் கூறப்படுகிறது. அதுவரை சாமியாருக்கு ஜால்ரா தட்டிய 'பிளிட்ஸ்' பத்திரிகை யும் அவருக்கு எதிராகத் திரும்பி விடவே காற்று பிடுங்கிய பலூனாகி விட்டார் சாமியார்.

எரிச்சலடைந்த சாமியார் மீண்டும் தனது மாஜி நண்பர்களான எதிர்க் கட்சித் தலைவர்களின் ஆதரவைப் பெற நாயாய் அலைந்தார். இந்த நேரத்தில் பேர்ஃபாக்ஸ் விவகாரம் வெளியாகி ராஜீவின் கூட்டாளிகளே அந்நியச்



படிப்பகம்

www.padippakam.com

செலாவணித் திருடர்களாக சிக்கியிருந்தனர். இதன் தொடர்ச்சியாக வி.பி. சிங் வெளியேற்றம், கோயங்கா-நூஸ்லி வாடியா தலைமையில் போட்டி முதலாளித்துவக் கும்பல் அணிதிரண்டு அம்பலப்படுத்தியது, காங்கிரசுக்குள்ளேயே அதிருப்தியாளர்கள் கலகக் கொடி தூக்கியது ஆகிய நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து அரங்கேறின. ராஜீவைப் பழிவாங்கக் காத்திருந்த சாமியார் இந்த அரியவாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். கோயங்கா-குருமூர்த்தி-ஜெத்மலானி அடங்கிய 'எக்ஸ்பிரஸ்' கும்பலிடம், சுவிட்சர்லாந்தில் அஜிதாப் பச்சன் சட்டவிரோதமாக குவித்துள்ள சொத்துக்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்துத் தருவதாக வாக்களித்தார். அதன்படி, சாமியார் தனது சர்வதேசத் தொடர்புகள் மூலம் அஜிதாப் பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொடுத்ததை 'எக்ஸ்பிரஸ்' வாந்தியெடுத்து ராஜீவ் கும்பலை அம்பலப்படுத்தியது. இதற்காக குருமூர்த்தியுடன் ஜெக்மாலினியும் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் பறந்து சாமியாரை ரகசியமாக சந்தித்து தகவல்களைத் திரட்டினர்.

நெருக்கடியில் சிக்கி ராஜீவ் கும்பல் மூச்சுத் திணறிய போது போபர்ஸ் பூதம் கிளம்பி அதன் குரல்வளையை நெறித்தது. சந்திராசாமி இந்த சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டு, இத்தாலியில் வாழும் ராஜீவ் மாமனாரின் வங்கிச் சேமிப்பு போபர்ஸ் ஆயுத பேரத்திற்கு பிறகு திடீரென உயர்ந்துள்ளதாகவும், அது பற்றிய விவரங்களைச் சேகரித்துத் தருவதாகவும், எக்ஸ்பிரஸ் கும்பலுக்கு வாக்களித்தார். ஆனால் சாமியார் தகவல் திரட்டுவதில் ஏற்பட்ட தாமதம், இதற்கிடையே ராஜீவின் மாமனார் மண்டையைப் போட்டது ஆகியவற்றால் இந்த விவகாரம் சூடு பிடிக்கவில்லை. பின்னர் சாமியார் போபர்ஸ் நிறுவனத்தின் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் தலைவர் மார்ட்டின் அர்ட்போவைச் சந்தித்தார். அவருக்கு புருனே சுல்தானிடம் வேலை வாங்கித் தருவதாக ஆசைகாட்டி அவரிடம் போபர்ஸ் ஆயுத பேரம் பற்றிய ரகசியங்களைக் கேட்டறிந்தார். அந்த தைரியத்தில், 'போபர்ஸ் பேரம் பற்றிய தகவல்கள் எனக்குத் தெரியும்; சமயம் வரும்போது அதை வெளியிடுவேன்' என்று பரபரப்பாக பேட்டியளித்தார்.

இதற்கிடையே ராஜீவ் — ஜெயில்சிங் தகராறு முற்றத் தொடங்கியது. காங்கிரசு அதிருப்தியாளர்களும் எதிர்கட்சியினரும் ராஜீவன் ஆட்சியைக் கவிழ்க்க ஜெயில்சிங் தயவை நாடினர். ராஜீவைப் பழிவாங்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த சாமியாருக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று.

ராஜீவ் ஆட்சியைக் கவிழக்கும் திட்டத்தோடு ஜெயில்சிங்கைச் சந்தித்தார் சந்திராசாமி. சுல்தானிடம் தனக்கிருந்த நெருக்கத்தைக் காட்டி, எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவிடத் தயா



ராஜீவுடன் சந்திராசாமி

ராக இருப்பதாகவும், ராஜீவ் ஆட்சியைக் கவிழ்த்து நரசிம்மராவைப் பிரதமராக்கும் படியும் கேட்டுக் கொண்டார். இந்த அரண்மனைச் சதிகளைப் பற்றி ஜெயில்சிங்கே இப்போது ஒப்புக் கொண்டுள்ளார்.

ஜெயில்சிங் சாமியாரின் திட்டத்தை ஏற்காமல் பின்வாங்கியது வேறு கதை. ஆனால் காவியுடைக்குள் மறைந்திருக்கும் அதிகாரத் தரகரும், தனது குறுகிய நோக்கங்களுக்காக ஆட்சிக் கவிழ்ப்பையும் செய்யத் துணியும் கிரிமினல் பேர்வழியும்தான் சந்திராசாமி என்பது அம்பலப்பட ஆரம்பித்தது. சாமியார் வஞ்சகச் செயல்களைத் தமது உளவுப்படை மூலம் அறிந்த ராஜீவ் அவரை மிரட்டிப் பணிய வைத்து தண்டிக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தார். இந்த நேரத்தில் லண்டனைச் சேர்ந்த ஒரு வியாபாரி சாமியார் தன்னை ஏமாற்றிவிட்டதாக இந்திய அரசிடம் புகார் செய்திருந்தார். இதை சாக்காகக் காட்டி, சி.பி.ஐ. உளவுப்படையை சாமியார் மீதும் அவர் கூட்டாளி மாமாஜி மீதும் ராஜீவ் ஏவினார். கைது செய்வதற்கான ஆணையுடன் சி.பி.ஐ. புறப்பட்டதும் அரண்டுபோன சாமியார் திடீரென நெஞ்சுவலி வந்ததாக நடித்து



'மாமாஜி' — சந்திராசாமியின் தொழில் கூட்டாளி

தமது நண்பரின் மருத்துவமனையில் போய் படுத்துக்கொண்டார். ஆனாலும் சி.பி.ஐ. விடாமல் அவரை மருத்துவமனையிலேயே காவலில் வைத்தது. மாமாஜியின் வீட்டையும் அவரது பினாமிகளின் வீடுகள், தொழில் நிறுவனங்களிலும் 'ரெய்டு' நடத்தி மிரட்டியது.

ராஜீவின் நடவடிக்கையால் தமது தொழிலும் கவுரமும் திவாலாகிவிடுமோ என்று மிரண்டுபோன சாமியார் 'நான் நீண்ட காலமாக காங்கிரஸ் விசுவாசி; எதிர்கட்சிகள் தவறான தகவல் தந்து என்னை மிரட்ட வைத்துவிட்டனர்' என்று ராஜீவுக்கு விசுவாசத்தைக் காட்டி புலம்பிக் கொண்டிருக்கிறார்.

எப்படியோ ராஜீவ் இந்த கள்ளச் சாமியாரைக் கைது செய்து 'முற்போக்கான' பாத்திர மாற்றிவிட்டார் என்று திருப்தியடைய முடியாது. சந்திராசாமி தனது ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தார் என்ற ஆத்திரத்தில்தான் இந்த நடவடிக்கையை எடுத்தார். மற்றபடி அவரது கும்பலின் விசுவாச அதிகாரத் தரகர்களையும், பண்டாரங்களையும் ஆதரித்து அவர்களின் யாகத்தியில் குளிர்காயவே செய்கிறார்.

சந்திராசாமி ஒரு மோசடிப் பேர்வழிதான்; ஆனால் எல்லா சாமியார்களையும் அப்படி எடைபோட முடியாது என்று சிலர் கருதலாம். ஆனால் முற்றும் துறந்த முனி சங்கராச்சாரி, சங்கரா லாட்டரி நடத்துகிறார்; குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் மூலம் ஜானகியின் ஆட்சியை ஆதரிக்க ராஜீவுடன் பேரம் பேசியிருக்கிறார். சங்கராச்சாரிகள் தாங்கள் அம்பலப்படாமலிருக்க திரைமறைவில் வரம்புக்குட்பட்ட அளவில் செய்வதை, சந்திராசாமி விரைவில் பணம் குவிக்கும் பேராசையோடு செய்திருக்கிறார். மற்றபடி பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை.

மேலும், முனிவர்களும் பண்டாரங்களும் மரவுரி தரித்து காடுகளில் தவமிருப்பதாக கருதுவது முட்டாள்தனம். அவர்கள் ஐந்து நட்சத்திர ஓட்டல்களை ஆசிரமாகக் கொண்டு, அரசர்களின் அந்தப்புரம் வரை செல்லும் ஆற்றல் மிக்கவர்களாக இன்று மாறிவிட்டார்கள். அதேபோல அதிகாரத் தரகர்களும் ஆயுத வியாபாரிகளும் கோட்டு சூட்டு மாட்டியிருப்பார்கள் என்று கருதுவதும் முட்டாள்தனம். அவர்கள் சந்திராசாமியைப் போல காவியுடையை கவசமாக மாட்டிக் கொண்டும் திரிகிறார்கள்.

'தேசத்தின் தலைவிதியை உங்கள் வாக்குச்சீட்டு தீர்மானிக்கிறது. இதுவே நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மாண்பு' என்று முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் மார்தட்டுகிறார்கள். ஆனால் சந்திராசாமி, சாராய உடையார் போன்ற ரகசிய உலகப் பேர்வழிகளின் பாக்கெட்டில் அல்லவா 'ஜனநாயகம்' பதுங்கியிருக்கிறது!

**மனோகரன்**



படிப்பகம்

www.padippakam.com

# மோசடிக்கு ஒரு நினைவகம்



அறக்கட்டளை மோசடியில் உருவான ஆறடுக்கு மாளிகை : திருவனந்தபுரத்தில் உள்ள ஏ.கே.ஜி. நினைவகம் — 'மார்க்சிஸ்டு'களின் கட்சித் தலைமை அலுவலகம்.

சமூக சேவைக்காக தரும காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டதாக கூறிக் கொண்டாலும், தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்கள், வட்டிக்கடைக்காரர்கள், சாதி-மத வெறியர்கள் கருப்புப் பண முதலைகளின் கொள்ளைச் சுரண்டலுக்கான சட்டபூர்வ ஏற்பாடுதான் அறக்கட்டளை என்பது யாவரும் அறிந்த உண்மை. கள்ளச்சாராய உடையாருக்கும் கள்ளச்சாமியார் பங்காரு அடிகளுக்கும் கூட அறக்கட்டளைகள் சாதகமாக இருக்கும்போது, அறக்கட்டளைகளால் வரும் ஆதாயங்களைப் பார்த்ததும் 'புரட்சி' செய்யப் புறப்பட்ட போலிக் கம்யூனிஸ்டுகளுககும் நாக்கில் எச்சில் ஊறத் தொடங்கிவிட்டது. 'செய்யறது அயோக்கியத்தனம் தான்; ஆனால் அது 'புரட்சிக்கு' சேவை செய்யறதா இருந்தா அதைச் செய்யறதில் தப்பேயில்லை' என்று 'நாயகன்' சினிமா பாணியில் சித்தாந்த விளக்கம் கொடுத்து ஏ.கே.ஜி. அறக்கட்டளை என்ற பெயரில் தம் பங்குக்கு புதிய மோசடியை கேரளத்தில் அறங்கேற்றியுள்ளார்கள்.

மாண்டுபோன 'மார்க்சிஸ்ட்' தலைவர் ஏ.கே. கோபாலனின் சேவையைப் பாராட்டுவதற்காக ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப 'மார்க்சிஸ்டு'கள் முடிவு செய்தனர். இதற்காக தங்கள் கூட்டணி கட்சிகளையும், சில சமூக சேவை அமைப்புகளையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு ஏ.கே.ஜி. நினைவகக் கமிட்டி என்ற அமைப்பை 1977ல் நிறுவினர். வெறுமனே நினைவகமாக இல்லாமல் கல்வி, ஆராய்ச்சி, கருத்தரங்கப் பணிகளையும் சேர்த்து சமூக சேவைக்கான நிறுவனம் என்று காட்டினால் அரசாங்க நிலத்தைப் பெறலாம் என்ற நப்பாசையில் அவ்வாறே அன்றைய அந்தோணி தலைமையிலான காங்கிரசு அரசிடம் நினைவகத்துக்கு இலவசமாக நிலம்தரக் கோரினர்.

தங்கள் ஊழல்கள் அம்பலப்படாமல் இருக்க எதிர்க்கட்சிகளுக்கு ஆளுங்கட்சிகள் அவ்வப்போது கருணை காட்டுவதென்பது ஓட்டுக் கட்சிகளிடையே நிலவும் எழுதப்படாத ஒப்பந்தம். அதன்படி அந்தோணியின் காங்கிரசு அரசும் கேரள பல்கலைக்கழகத்தை ஒட்டியுள்ள 28 சென்ட் அரசு நிலத்தை ஏகேஜி நினைவகத்துக்குத் தாரை வார்த்து, மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற வெள்ளை உள்ளத்துடன் நடந்து கொண்டது. இதோடு நினைவகக் கமிட்டி கோரியதன் பேரில் கேரள பல்கலை கழகமும் எல்லையை ஒட்டியுள்ள 15 சென்ட் நிலத்தை தானமாகக் கொடுத்தது. காங்கிரஸ் அரசு மார்க்சிஸ்டுகளுக்கு நிலத்தை தானமாகக் கொடுத்த போது இரு முக்கிய நிபந்தனைகளை விதித்தது. ஒன்று இந்த நிலத்தை நினைவகத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். நினைவகத்தில் கல்வி, ஆராய்ச்சி, கருத்தரங்கு முதலான பணிக[ளு]ம் நடைபெற வேண்டும். இரண்டு. இந்த அரசாணையை மீறினால் நிலத்தை நட்டஈடு ஏதுமின்றி திரும்பப் பெற அரசுக்கு உரிமை உண்டு.

நிபந்தனைகளை ஏற்று நிலத்தைப் பெற்ற 'மார்க்சிஸ்டு'களுக்கு கட்டிடம் எழுப்ப அப்போது கையில் காசில்லை. கட்சி ஊழியர்களின் கையில் உண்டியலைக் கொடுத்து நிதி வசூலிப்பதற்கு மார்க்சிஸ்டுகள் முட்டாள்களா என்ன? அறக்கட்டளை என்று சொல்லி நிதி திரட்டினால் கருப்புப்பண முதலைகள் அள்ளித்தர காத்திருக்கும்போது ஊழியர்களை ஏன் தொல்லைப்படுத்த வேண்டும் என்று கருதினார்கள் போலும். இதன்படி ஏ.கே.ஜி. நினைவகக் கமிட்டியானது, ஏகேஜி அறக்கட்டளை என்று உருமாறியது. பாசிச இந்திராவுக்கே பாடம் சொல்லிக் கொடுத்த மார்க்சிஸ்டு பொதுச் செயலாளர் நம்பூதிரிபாட் அறக்கட்டளையின் தலைவராக இருந்து கவனித்துக் கொண்டார்.

இதற்கிடையே 1980 கேரளத் தேர்தலில் மார்க்சிஸ்டு கூட்டணி வெற்றி பெற்று நாயனார் முதல்வரானார். அதிகார துஷ்பிரயோகம் செய்ய ஆட்சி கிடைத்த பிறகு அப்புறம் நிதி வசூலைப் பற்றி கேட்கவா வேண்டும்? வெள்ளமாகப் பாய்ந்தது. கூட்டுறவுத்துறை பதிவாளர் தனி சுற்றறிக்கையின் மூலம் அனைத்து கூட்டுறவு அமைப்புகளும் ஏ.கே.ஜி. அறக்கட்டளைக்கு நிதியளிக்கும்படி நிர்பந்தித்துள்ளார். இப்படி அதிகார முறைகேடுகள் மூலம் மாநகராட்சி, முனிசிபாலிடி, பஞ்சாயத்துக்களிடம் கட்டாய நிதி வசூல் வேட்டை நடத்தினர். இதோடு வளைகுடா நாடுகளுக்கு வேலை தேடிப் போவோரிடமும் திரும்பி வருவோரிடமும் கட்டாய வசூல் நடத்தினர்.

இப்படி அரசாங்கம், பொது நிறுவனங்கள், தனி நபர்கள் மூலம் சுருட்டிய பணத்தைக் கொண்டு 1980ல் கட்டிடம் எழும்பத் தொடங்கியது. இடையே நாயனார் ஆட்சி போய் கருணாகரன் ஆட்சி வந்தது. ஆனாலும் அறக்கட்டளை மூலம் கிடைக்கும் ஆதாயங்களை விட்டுவிட முடியுமா? அரசு நிலத்தைப் பயன்படுத்துவதற்கு வாடகை செலுத்த வேண்டும். சட்டத்தின் ஓட்டையை சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டால் வாடகை கூட செலுத்த வேண்டியதில்லை என்பதை வரி ஏய்ப்பாளருக்கே உரிய கழுகுக் கண்களுடன் கண்டு கொண்டது மார்க்சிஸ்ட் கட்சி. 'நாங்கள் சமூக சேவை செய்கிறோம் எனவே வாடகை வரி விலக்கு அளியுங்கள்' என்று காங்கிரசு அரசிடம் மன்றாடியது 'மார்க்சிஸ்ட்' கட்சி. கருணாகரன் ஆட்சியோ இழுத்தடித்து வந்தது. பின்னர் மீண்டும் நாயனார் தலைமையில் மார்க்சிஸ்டு கூட்டணி இப்போது ஆட்சிக்கு வந்ததும் இரண்டே மாதங்களில் வரிவிலக்கு அளிப்பதாக மாநகராட்சி ஆணையாளர் உத்திரவிட்டார்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். அரிவாள் சுத்தியல் சின்னத்தோடு



படிப்பகம்

www.padippakam.com

ஆறடுக்கு மாளிகையாக உயர்ந்து நிற்கும் ஏ.கே.ஜி. நினைவகத்தில் அப்படி என்னதான் சமூக சேவை நடக்கிறது? அதெல்லாம் ஒன்றுமில்லை. திருவனந்தபுரத்தின் மையத்திலுள்ள ஏ.கே.ஜி நினைவகம் மார்க்சிஸ்ட் கட்சியின் கோட்டையாக மாறிவிட்டது. கட்சி செயலகம், மாநிலக் கமிட்டியின் அலுவலகம், தொழிலாளர்-விவசாய-மாணவர் சங்கங்களின் தலைமை நிலையம், கட்சித் தலைவர்களின் ஒய்வு விடுதி - விருந்தினர் மாளிகை என்று முற்றிலும் கட்சி வேலைக்கான மையமாக மாறி விட்டது. ஒரு சிறிய நூலகம் இருக்கிறது. ஆனால் அதில் கட்சிப் பத்திரிக்கைகளின் பழைய பிரதிகளே அடுக்கி வைக்கப் பட்டுள்ளது.

இப்படி அரசு விதிகளை மீறியும் அறக்கட்டளை என்ற பெயரில் மோசடி செய்தும் ஆட்டம் போடும் 'மார்க்சிஸ்டு'களை எதிர்த்து காங்கிரஸ்காரர்கள் எம்பிக் குதிக்கிறார்கள். இதெல்லாம் ஓட்டுக்கட்சி அரசியலில் சர்வசாதாரணமான வழக்கமான விவகாரம் என்பதாலோ என்னவோ ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகளும் மறுப்புகளும் விளக்கங்களும் கொடுத்து வாயடைக்கப் பார்க்கின்றனர்.

இடத்தைக் கொடுத்தவனின் மடத்தையே பிடுங்கிய கதையாக, கேரள பல்கலைக்கழகம் தானமாகக் கொடுத்த நிலத்தில் நினைவகத்துக்கு காம்பவுண்டு சுவர் கட்டுகிறேன் என்று போலிகள் 7.5 சென்ட் நிலத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளார்கள். கேரள பல்கலைக் கழக செனட் உறுப்பினரும், இளைஞர் காங்கிரசு தலைவருமான செரியன் பிலிப் ஆதாரங்களுடன் இக்குற்றச் சாட்டை வைத்து விசாரணை நடத்தக் கோரினார். 'மார்க்சிஸ்டு'களின் விசுவாசியான பல்கலைக்கழக துணை வேந்தர் மோகன்தம்பி புகாரை ஏற்க மறுத்தார். பின்னர் செரியன் பிலிப் கேரள கவர்னரும், பல்கலைக்கழக வேந்தரும், காங்கிரசு பெருச்சாளியுமான பா. ராமச்சந்திரனிடம் முறையிட்டதையடுத்து அவர் விசாரணைக்கும், மறுநில அளவைக்கும் உத்திரவிட்டுள்ளார்.

இப்படி மோசடியில் மூழ்கித் திளைக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளின் வண்டவாளங்களை அடுக்கடுக்கான ஆதாரங்களுடன் முதலாளித்துவ பத்திரிக்கைகள் அம்பலப்படுத்தி நாறடிக்கின்றன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பாக பதிலளிக்க வக்கற்ற போலிக் கம்யூனிஸ்டுகள் ஊமைக் கோட்டானாக முழிக்கின்றனர். இந்த லட்சணத்தில் ஆயுத பேர ஊழல் நாயகன் பாசிச ராஜீவைப் பார்த்து பதவி விலகச் சொல்கிறார்கள். வெட்கக் கேடு! ஊழலிலும் மோசடியிலும் முதலாளித்துவக் கட்சிகளுக்கு இணையாகவும் போட்டியாகவும் சீரழிந்து, முழுக்க நனைந்து விட்ட இப்போலிகளுக்கு இன்னமும் 'கம்யூனிஸ்ட்' என்ற முக்காடு எதற்கு?

—குமார்.

## ஒரு சமரசவாதியின் வாக்குமூலம்

18.3.88 அன்று காலை திருச்சி பெல் தொழிற்சாலையின் மெயின் கேட்டில் நடந்த வாயில் கூட்டத்தில் பல்வேறு **தொழிற்சங்கத்** தலைவர்களும் நடந்து முடிந்த போராட்டத்தில் நிர்வாகம் மற்றும் காவல் துறையினரின் அட்டூழியங்களைப் பற்றி ஆளுக்கொரு விதமாக எடுத்துக் கூறினர். குறிப்பாக தொழிற்சங்கத் தலைவர்களை கைது செய்து காவலில் வைத்திருந்ததோடு அவர்களை அரை நிர்வாணப்படுத்தி (ஜட்டியுடன் நிறுத்தி வைத்து) கேவலப்படுத்திய போலீசாரின் திமிரான செயல்களை கொதிப்போடு கண்டித்துப் பேசினர். கூட்டத்திலிருந்த தொழிலாளர்களும் அதற்கு ஆதரவாக அடுத்த ஸ்ட்ரைக் வரட்டும் அவர்களை செருப்பைக் கழற்றி அடிப்போம் என்று உணர்ச்சி மேலிட உரத்துக் கூறினர்.

கடைசியாக வந்து முத்தாய்ப்பாக பேசத் தொடங்கினார் போலிக் கம்யூனிஸ்டு சிஐடியு சங்கத் தலைவர் **சுப்பையா அவர்கள்**. அவர் பேச **ஆரம்பித்தவுடன்** ஹெச்.எம்.எஸ். **சங்கத்தைச்** சேர்ந்த ராஜாமணி **என்பவர்** மைக் அருகில் சென்று 'கம்பனி உளவுத் துறையினர் நாம் பேசுவதை டேப் செய்கிறார்கள்; அதைக் கண்டியுங்கள்' என்று சுப்பையாவிடம் கூறினார். அதற்குப் பிறகு பேசத் தொடங்கிய சுப்பையா, 'சிலர் நாம் பேசுவதை டேப் செய்கிறார்கள் என்றால், செய்து விட்டு போகட்டும்; அதைப்பற்றி நமக்கொன்றும் கவலையில்லை' என்று டேப் செய்வது உளவுத் துறையினரின் உரிமை போல பேசி நிறுத்திக் கொண்டார். 'காவல் துறையினரின் நடவடிக்கைகள் பற்றி தோழர்கள் பலரும் ஆத்திரப்பட்டு பேசினார்கள். ஆனால் இந்த சமுதாயம் மாறாதவரை அவர்கள் இப்படித்தான் நடந்து கொள்வார்கள். அது இந்த சமுதாய அமைப்பின் இயல்பு. நாம் இதைப் புரிந்து கொண்டால் இதில் ஆச்சரியப்படுவதற்கோ ஆத்திரப்படுவதற்கோ ஏதுமில்லை' என்று கூறி விட்டு மேலும் தொடர்ந்தார். 'என்னை கூடத்தான் வேட்டியையும், சட்டையையும் அவிழ்க்கச் சொன்னார்கள். நானும் அவிழ்த்து போட்டேன். அவர்களிடம் நான் எவ்வித மறுப்பும் சொல்லவில்லை. இதையெல்லாம் தாங்கிக் கொள்ளவில்லை என்றால் இன்னும் எத்தனையோ சிறைக் கொடுமைகள் இருக்கின்றன' என்று கொஞ்சமும் சூடுசுரணையில்லாமல் கூறி முடித்தார்.

சாதாரண தொழிலாளர்கள் அல்ல; நிர்வாகத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் தலைவாகள் என்ற முறையில் கூட சிறிதும் மதிக்காமல் அவர்களை துச்சமாக கருதி கேவலப்படுத்தியிருப்பதை எந்த தன்மானமுள்ள தொழிலாளியாலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. ஒரு அதிகாரியையோ ஒரு பண முதலையையோ இப்படி நடத்துமா இந்த போலீஸ் நாய்கள்: இதை தின்று கொழுத்து தினவெடுத்துத் திரியும் போலீசாரின் திமிர்த்தனம் என்று சொல்லாமல் வேறெப்படி சொல்வது? அரை நிர்வாணமாக்குவது அவர்களின் இயல்பு என்றால் துப்பாக்கியால் சுடுவதும் பூட்ஸ் காலால் உதைப்பதும் கூட **இயல்புதானே? அதற்காகத் தான்** அவற்றை வைத்திருக்கிறார்கள் என்று நாம் அதை சகித்துக் கொள்வதா?

நிர்வாகம் நமது சம்பள உயர்வை மறுப்பதும் நமது போராட்டங்களை ஒடுக்குவதும் கூட அவர்களின் இயல்புதான் என்றால் இந்த ஈனமற்ற போலி கம்யூனிஸ்டுகள் எதற்காக போராட்டம் நடத்துகிறார்கள்!

**— மகேஸ்வரன்.**

## மந்திரமா, தந்திரமா?

### 'தந்திரக் கலையை மந்திரமென்று சொல்லி ஏய்க்கும் கூட்டத்தை அம்பலமாக்கும் நிகழ்ச்சி.

'புதிய ஜனநாயகம்' ஏடு வளர்ச்சி நிதிக்காக மார்ச் 19 முதல் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள கிராமங்கள், சிறு நகரங்கள் மட்டும் நகரங்களில் 'மந்திரமா, தந்திரமா' **எனும் நிகழ்ச்சியை** நடத்தி வருகின்றன மக்கள் கலை **இலக்கியக் கழகமும் விவசாயிகள்** விடுதலை முன்னணியும்.

**அவதாரங்கள், கடவுளின்** அருள் **பெற்றவர்கள் என்ற பெயரில் சாயிபாபா**, பன்றிமலை சாமி போன்ற **இந்து மதப் பண்டாரங்களும் டி.ஜி.எஸ். தினகரன் போன்ற 'தேவ', தூதர்களும் நடத்தும் பித்தலாட்டங்களை** அம்பலமாக்குகின்றது இந்நிகழ்ச்சி.

ஏப்ரல் 6ம் தேதியிலிருந்து 27ம் தேதி வரை, மதுரை, கோவை, திருச்சி, தஞ்சை, அதிராம்பட்டினம், கடலூர், வேலூர், திருப்பத்தூர், ஊற்றங்கரை, சென்னை ஆகிய ஊர்களில் இந்நிகழ்ச்சி நடக்கவிருக்கின்றது.

அருகிலுள்ள மகஇக, விவிமு தோழர்களைத் தொடர்பு கொண்டு நிகழ்ச்சிக்கு வருகை தாருங்கள். 'புதிய ஜனநாயகம் வளர்ச்சிக்கு நிதியுதவியும் தாருங்கள்!

இவண்,
மக்கள் கலை இலக்கியக் கழகம்,
தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com

## 'பிலிப்பைன்சுக்கு ஒரு



சர்வதேசக் கடத்தல்காரனும் பனாமாவின் சர்வாதிகாரியுமான ராணுவத் தளபதி நோரிகா

ஈரானின் ஷா, பிலிப்பைன்சின் மார்க்கோஸ், இந்தியாவின் ராஜீவ் என்று சொந்த நாட்டைச் சூறையாடும் சர்வாதிகாரிகளின் வரிசையில் இப்போது பனாமாவின் ராணுவத் தளபதி நோரிகாவும் புதிதாகச் சேர்ந்துள்ளார். நவ காலனியாக உள்ள மூன்றாம் உலக நாடுகளின் சர்வாதிகாரிகள், ஏகாதிபத்தியங்களின் அடிவருடியாக மட்டுமின்றி, அப்பட்டமான தரகர்களாகவும் சொந்த நாட்டையே சூறையாடி சொத்து சேர்க்க எந்த எல்லைக்கும் போகத் தயங்குவதில்லை என்பதே இன்றைய போக்காக உள்ளது என்பதற்கு இன்னுமொரு சான்றுதான் பனாமாவின் நோரிகா.

பனாமா. மத்திய அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கும் 26 லட்சம் மக்கள் தொகை கொண்ட சின்னஞ்சிறு நாடு. நாட்டின் குறுக்கேயுள்ள பனாமா கால்வாய் கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலையும், மேற்கே பசிபிக் பெருங்கடலையும் இணைக்கும் கப்பல் போக்குவரத்துக்கான முக்கிய நீர்வழியாக உள்ளது. பனாமா கால்வாய் இல்லையென்றால் பல ஆயிரம் மைல்கள் கடந்து தென் அமெரிக்காவைச் சுற்றி வந்துதான் அமெரிக்காவின் மேற்குப் பகுதியை கப்பல்கள் அடைய வேண்டியிருக்கும். இதன் காரணமாகவே யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த பனாமா கால்வாயை தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டும், பனாமா நாட்டில் தன்து அடிவருடிகளைக் கொண்டு ஆட்சி செய்து கொண்டும் மேலாதிக்கம் செலுத்தி வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

பனாமா கால்வாயை விட, போதை மருந்து கடத்தல்காரர்களின் சொர்க்க பூமி என்ற பெருமையும் பனாமா நாட்டிற்கு உண்டு. ஹஷிஷ், கோகொய்ன், ஹெராயின், கஞ்சா உள்ளிட்ட எல்லா வகையான போதைப் பொருட்களை அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் கடத்தி விற்பதற்கான வியாபார மையம்தான் பனாமா. இதோடு ஆயுதங்கள் கடத்தி விற்பதற்கும, கருப்புப் பணத்தை பனாமா வங்கிகளில் ரகசிய கணக்குகளில் — ஸ்விஸ் வங்கிபோல — குவித்து வைப்பதற்கும் வாய்ப்பான நாடுதான் பனாமா. சமீபத்தில் போபர்ஸ் ஆயுத பேரத் தரகர்கள் கூட தாங்கள் அம்பலப் படாமலிருக்க பனாமா நாட்டில்தான் தங்கள் செல்வத்தைக் கொண்டு போய் குவித்துள்ளன்ர். இப்படி பனாமாவை கள்ளக் கடத்தல்காரர்களின் சொர்க்கபூமியாக, மாஃபியா குண்டர்களின் உல்லாச கோட்டையாக சீரழித்தல் பனாமாவின் ராணுவத் தளபதி நோரிகாவுக்கும் ஆளும் இராணுவக் கும்பலுக்கும் முக்கிய பங்கு உண்டு.

ராணுவத் தளபதி என்ற பொறுப்பால் இருந்தாலும் நோரிகாவின் பிரதானத் தொழில் தரகுவேலைதான். போதை மருந்து கடத்துவதிலிருந்து, ஏகாதிபத்தியங்களால் ஊட்டி வளர்க்கப்படும் எதிர்ப்புரட்சி குண்டர் படைகளுக்கு ரகசியமாக ஆயுதங்களை விநியோகம் செய்வது, வல்லரசுகளின் உளவு நிறுவனங்களுக்கு ரகசியமாக தகவல்கள் சேகரித்து அனுப்புவது, பனாமா ரகசிய சட்டப்படி பனாமா வங்கிகளில் கருப்புப்பண முதலைகள் பணத்தைக் குவிக்க ஏற்பாடு செய்வது என்று அப்பட்டமான தரகுத் தொழிலின் மூலம் குறுகிய காலத்திலேயே குபேரராகி உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவராக மாறிவிட்டார் நோரிகா. பனாமாவில் விலையுயர்ந்த கலைப் பொருட்களுடன் கூடிய ஆடம்பர மாளிகை, தனி விமானம், ஸ்பெயின், இஸ்ரேல், ஜப்பான் முதலான நாடுகளில் ரகசியமாக குவித்துள்ள சொத்துக்கள் முதலானவற்றைச் சேர்த்துக் கணக்கிட்டால் அவரது சொத்து மதிப்பு ஏறத்தாழ 100 கோடி டாலர் இருக்கும் என்று நம்பப்படுகிறது.

தனது யுத்த தந்திர நோக்கங்களை நிறைவேற் றிக் கொள்ள பனாமா கால்வாயில் துருப்புக்களை நிறுத்தியும் கடல் பிராந்தியத்தில் ரகசிய ராணுவத் தளங்களை நிறுவியும் உள்ள அமெரிக்கா இப்பகுதியில் என்ன செய்தாலும் நோரிகா கண்டு கொள்ளாமலிருக்க, அதற்கு நன்றிக் கடனாக அமெரிக்காவும் நோரிகாவின் தொழிலில் தலையிடாமலிருக்க, நோரிகாவின் 'தொழில்' அமோகமாகத்தான் நடந்து வந்தது. ஆனால் அமெரிக்காவில் போதை மருந்துகளும் குற்றங்களும் பெருகியதையடுத்து அதை தடுப்பதற்காக செனட் உதவிக் குழு விசாரணையைத் தொடங்கியதும் கிணறு வெட்ட பூதம் கிளம்பியது. நோரிகாவின் தொழிலுக்கு மட்டுமல்ல, அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கும் ஆபத்து ஏற்பட்டு பனாமாவில் அரசியல் நெருக்கடியும் கொந்தளிப்பும் தீவிரமாகத் தொடங்கியது.

அமெரிக்க செனட் குழு போதை மருந்து தடுப்புக்கான விசாரணை செய்தபோது, நோரிகாவின் கூட்டாளியும் போதை மருந்து கடத்தலில் 10 லட்சம் டாலர் கமிஷனாக அடித்த கடத்தல் புள்ளியுமான ஜோஸ்பிளாண்டன் சிக்கிக் கொண்டு அமெரிக்க வழக்குமன்றத்தில் சாட்சியமும் அளித்தான். அதைத் தொடர்ந்து அமெரிக்க வழக்கு மன்றம் நோரிகாவை 'சர்வதேச போதை மருந்துக் கடத்தல் கொள்ளைக்காரன்' என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியது. இதோடு, அமெரிக்க கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வுக்கு ரகசிய தகவல்களை சேகரித்துத் தரும் விசுவாச பத்தினியாக இருந்த நோரிகா, பின்னர் ரஷிய உளவு நிறுவனமான கே.ஜி.பி.க்கும் ரகசிய தகவல் தரும் பிழைப்புவாத விபச்சாரியாக மாறியதைத் தொடர்ந்து அமெரிக்கா அச்சம் கொண்டது. இது தவிர, முன்னாள் சி.ஐ.ஏ. தலைவர் வில்லியம் கேசே நோரிகாவுடன் கொண்டிருந்த ரகசிய தொடர்பு, போதை மருந்து கடத்தலில் அமெரிக்க அதிகாரிகளின் தொடர்பு, ஈரானுக்கு நோரிகா மூலம் அமெரிக்கா ரகசியமாக ஆயுத விற்பனை செய்தது பற்றிய உண்மைகள் முதலானவை நோரிகாவினால் அம்பலமாகிவிடுமோ என்று அமெரிக்கா பீதியடைந்தது. எனவே நோரிகாவை பொறுப்பிலிருந்து விலகி



படிப்பகம்

www.padippakam.com

# ாஸ்!

## ாவுக்கு ஒரு நோரிகா!

காப்பான இடத்திற்குச் சென்று உல்லாசமாக
வடுக்கும்படி நிர்பந்தித்தது.
ுமெரிக்க அடிவருடியும், நோரிகாவின் கைப்பாவையும்,
மாவின் அதிபருமான டேவல்லே அமெரிக்க
ாசனைப்படி, பனாமாவின் நற்பெயரைக் காப்பாற்ற
ரிகாவை பதவி நீக்கம் செய்வதாகவும், மார்க்கோஸ்
ுன்ஸ் என்பவரை புதிய தளபதியாக நியமிப்பதாகவும்
வித்தார். ஆனால் அமெரிக்காவின் சதித்திட்டம்
ரிகாவிடம் செல்லுபடியாகவில்லை. அடுத்த நாளே நோரிகா
ாளுமன்றத்தில் தனக்கு அறுதிப் பெரும்பான்மை
ப்பதாகக் கூறி டேவேல்லேயை பதவி நீக்கம் செய்வதாக
வித்தார். புதிய அதிபராக பால்மா என்பவரை நியமித்தார்.
் வேடிக்கை என்னவென்றால் டேவல்லேயால் நிய
ப்பட்ட புதிய தளபதி ஜஸ்டின்ஸ், தான் நோரிகோவை
ரிப்பதாகவும் எனவே தனது பதவியை ராஜினாமா
வதாகவும் அறிவித்து கட்சி மாறினார்.
பதவி பறிபோன அதிபர் டேவல்லே தனது குடும்பத்தை
மரிக்க தூதர் வீட்டில் அடைக்கலமாக்கி விட்டு, கைது
ய வந்த நோரிகாவின் போலீஸ் கண்களில் மண்ணைத்
ிவிட்டு வீட்டின் புழக்கடை வழியே தப்பியோடி
லமறைவானார். தனது ரகசிய வானொலி மூலம் சட்ட
ுமுறைகளைக் காட்டி நோரிகா தன்னை நீக்கியது செல்லாது
றும், தானே உண்மையில் சட்டப்படி அதிபர் என்றும்
பத்தில் பிஜி நாட்டில் நடந்த ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பில்
வி பறிபோன அதிபர் பவாத்ராவைப் போல ஒப்பாரி
த்தார். எங்கோ ஒரு பொந்துக்குள்ளிருந்து அறிக்கை
ாடுக்கும் டேவல்லேக்கு ஆதரவாகவும் நோரிகாவுக்கு
ராகவும் மக்கள் போராடுவார்கள் என்று நாக்கில் எச்சில் ஊற
மெரிக்க நரி காத்திருந்தது. ஆனால் அமெரிக்க
ுவருடியாகவும், நேற்றுவரை நோரிகாவின் பொம்மை
ிபராகவும் மக்களிடமிருந்து தனிமைப்பட்டும் கிடந்த
வல்லேக்கு ஆதரவாக சிறு சலசலப்பு கூட கிளம்பவில்லை.
ிப்பைன்சில் அம்பலப்பட்டுப் போன சர்வாதிகாரி
ர்க்கோசுக்கு மாற்றாக புதிய அடிவடியாக திருமதி அகினோ
டைத்தார். ஆனால் பனாமாவில் நோரிகாவுக்கு மாற்றாக
னடியாக புதிய அடிவருடி அமெரிக்காவுக்கு
டைக்கவில்லை. டேவல்லேக்கு முட்டுக் கொடுத்து தூக்கி நிறுத்த
யற்சித்தும் முடியாமல் போகவே விழி பிதுங்கிய அமெரிக்க
ாதிபத்தியம், நோரிகாவை பதவியிலிருந்து விரட்டுவதற்காக




பனாமாவுக்கு செயற்கையாக பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி மிரட்டிப் பணிய வைக்க முயன்றது.

பனாமாவிலுள்ள அமெரிக்க வங்கிகள் பணப் புழக்கத்தை திடீரென நிறுத்தின. பனாமா கால்வாய் போக்குவரத்து சுங்க வரித் தொகையை பனாமாவுக்குத் தராமல் அமெரிக்கா இழுத்தடித்தது. நியூயார்க், பாஸ்டன் முதலான நகரங்களிலுள்ள பனாமாவின் வர்த்தக நிறுவனங்களின் செயல்பாட்டை அமெரிக்கா முடக்கியது. இது தவிர, உலக வங்கி பனாமாவுக்குத் தருவதாக இருந்த கடனை கொடுக்க முடியாதபடி முட்டுக் கட்டை போட்டது.


ஆனால் நோரிகாவை நிர்பந்திக்க அமெரிக்கா தொடுக்கும் பொருளாதார முற்றுகை எதிர் விளைவுகளையே ஏற்படுத்தியது. பணப்புழக்கம் இன்மையால் நோரிகா கும்பலால் அரசு ஊழியர் — தொழிலாளர்கள் — ராணுவத்தினருக்கும் சம்பளம் கொடுக்க முடியவில்லை. ஆத்திரமுற்ற அரசு ஊழியர்களும் — தொழிலாளர்களும் பனாமா பல்கலைக் கழக மாணவர்களுடன் சேர்ந்து கொண்டு எதிர்கட்சிகளின் ஆதரவோடு கால வரையற்ற வேலை நிறுத்தப்போராட்டம்நடத்துகின்றனர். அஞ்சி நடுங்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்போது நோரிகாவிடம், ஸ்பெயின் நாட்டில் பாதுகாப்பாக உல்லாச வாழ்க்கை நடத்த ஏற்பாடு செய்து தருகிறோம்; பதவியை விட்டு வந்து விடு என்று கெஞ்சுகிறது.

இந்த நெருக்கடியான நேரத்தில் அமெரிக்க திட்டத்தை ஏற்க மறுக்கும் நோரிகாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வை மெச்சி நிகரகுவாவும், ரஷியாவின் தொங்குசதை நாடான கியூபாவும் அவரை உச்சி முகர்ந்து ஆதரிக்கின்றன. அதிகாரத் தரகரோ, ஆயுத பேரத் தரகரோ கடத்தல்காரரோ, உளவாளியோ யாரால் இருந்தால் என்ன எங்களை ஆதரிக்கும் எந்த சர்வாதிகாரியையும் ஆதரிப்பதே எங்கள் கொள்கை என்பதுதான் ரஷிய ஆதிக்கவாதிகளின் ராஜதந்திரம். ஏற்கனவே பிலிப்பைன்சில் அம்பலப்பட்டு நெருக்கடியில் சிக்கியிருந்த சர்வாதிகாரி மார்க்கோஸுக்கு பாசிச எதிர்ப்புப் போராளி என்ற பட்டம் சூட்டி ரஷியா ஆதரித்தது. இப்போது அதே உத்தியோடு நோரிகாவை வளைத்துப் போட நாயாய் அலைகிறது.

ஆனால் நோரிகா எல்லா ஏகாதிபத்தியங்களுக்கும் கிடைத்த விசுவாசத் தரகன். சி.ஐ.ஏ.விடமிருந்து கிடைத்த ரகசிய தகவல்களை கே.ஜி.பி.க்கும், கே.ஜி.பி.யிடமிருந்து கிடைக்கும் ரகசியங்களை சி.ஐ.ஏ.வுக்கும் விற்கும் அப்பட்டமான பிழைப்புவாதி. அவன் எல்சால்வடார் புரட்சிக் கொரில்லாக்களுக்கு ரகசியமாக ஆயுதங்களை அனுப்பிவிட்டு அதை நடுவழியில் மடக்கி பழியை கியூபா, நிகரகுவா முதலான ரஷ்ய சார்பு நாடுகள் மீது போடும் அமெரிக்காவின் திட்டத்திற்கு ஏற்பாடும் செய்தான். இந்த சதித்திட்டம் அம்பலமான போதுதான் நோரிகாவின் யோக்யதையும் அம்பலமானது.

அமெரிக்கத் திட்டப்படி நோரிகா பதவி விலகினாலும், புதிய அடிவருடி அதிகாரத்துக்கு வந்தாலும் பனாமா நாட்டுக்கும் மக்களுக்கும் சுதந்திரமும் சுபீட்சமும் வந்துவிடப் போவதில்லை. சொந்த நாட்டைச் சூறையாடும் சர்வாதிகாரிகளையும் அவர்களின் ஏகாதிபத்திய எஜமானர்களையும் விரட்டியடிக்காமல் மூன்றாம் உலக நாட்டு மக்கள் விடுதலையடைந்ததாக வரலாறு இல்லை.

ட்டைச் சூறையாடிய துரோகி நோரிகாவே, பதவி விலகு!' —
கருக்களில் மக்கள் ஆர்ப்பாட்டம்.






படிப்பகம்

www.padippakam.com

# சிம்மாசன வேட்டை! அரண்மனைச் சதிகள்!!

'எவருக்கும் ஒரு விலை உண்டு' — இது வோட்டுப் பொறுக்கிகளின் சந்தை மொழி. இந்திய ஜனாதிபதியின் விலை ரூ. 30 கோடியிலிருந்து ரூ. 40 கோடி வரை விலை பேசப்பட்ட விஷயம் தற்போது அம்பலமாகியுள்ளது. தான் இரண்டாம் முறையாக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டால் சிலர் ரூ. 30 கோடியிலிருந்து ரூ. 40 கோடி வரை செலவு செய்ய தயாராக இருந்தனர் என்ற ஒரு இரகசியத்தை போட்டு உடைத்துள்ளார் ஜெயில்சிங்.

இரு தரகு முதலாளிகளுக்கிடையே இருந்த தொழில் போட்டி, வோட்டுப் பொறுக்கிக் கட்சித் தலைவர்களின் பதவி வேட்டை; இதற்காக நடைபெற்ற திரை மறைவுச் சதிகள், அந்தரங்க ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டங்கள், அரசியல் விசுவாசங்களை மாற்றி அந்தர் பல்டி அடித்தல் ஆகிய இவைகளின் விளைவுதான் ஜனாதிபதி விலை பேசப்பட்டதன் பின்னணி. 1986-ல் சூடுபிடிக்க ஆரம்பித்த இவை 1987 மார்ச் ஏப்ரல் மாதங்களில் உச்சநிலையை அடைந்தது.

* ரிலையன்ஸ் குருப் துணி ஆலை முதலாளி துருபாய் அம்பானிக்கும் பாம்பே டையிங் குருப் துணி ஆலை அதிபர் நுஸ்லி வாடியாவிற்கும் இடையில் ஏற்பட்ட தொழில் போட்டி; லாப வேட்டை. 'எக்ஸ்பிரஸ்' ஏட்டின் முதலாளி கோயாங்கோ தனது பொருளாதார ஆலோசகரான குருமூர்த்தியை விட்டு ரிலையன்ஸ் மோசடிகள் பற்றிய அரசு இரகசியங்களை 'எக்ஸ்பிரஸ்' ஏட்டில் அம்பலப்படுத்தியதை ஒட்டி தீவிரமான மோதல்.

* ஜனாதிபதிக்கு உரிய மரபு வழி மரியாதைகளை பிரதமர் என்ற அடிப்படையில் ராஜீவ் தர மறுத்ததினால் மனம் நொந்து போயிருப்பதாக பத்திரிகைகளில் ஜெயில்சிங் தான் சம்பந்தப்படாதது போல பிரச்சாரம் செய்தது; ஆத்திரம் கொண்ட ராஜீவ் மேலும் திமிர்த்தனமாக நடந்து கொண்டது; இதன் மூலம் பிரதமர்-ஜனாதிபதிக்கு இடையே ஏற்பட்ட விரிசல்கள்.

* அலகாபாத் தொகுதியை யார் செல்வாக்கில் வைத்துக்கொள்வது என்பதில் வி.பி. சிங்கிற்கும் அமிதாப்பச்சனுக்கும் ஏற்பட்ட மோதல் பச்சன் சகோதரர்களின் ஸ்விஸ் நாட்டு திருட்டு சொத்துகள் பற்றிய விவகாரமாக உருவெடுத்து, பேர்பாக்ஸ் பூதமாக கிளம்பியது; அதன் மூலம் வி.பி. சிங்கிற்கும் ராஜீவிற்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவு.

* ஸ்நாம் பிரகாட்டி என்ற இத்தாலிய கம்பெனிக்கு காண்ட்ராக்ட் கிடைக்காமல் செய்ததில் அருண்நேருவிற்கு பங்கு உண்டென சோனியா காந்தி கருதி கோபம் கொண்டது; ராஜீவ்காந்தியை கவிழ்த்து விட்டு தான் பிரதமர் ஆக அருண்நேரு திட்டமிட்டது ராஜீவிற்கு தெரிந்தது; ஆகியவைகளினால் ஏற்பட்ட ராஜீவ்காந்தி-அருண்நேரு உராய்வுகள்.

இந்த கட்டத்தில் கோயாங்கோ-வாடியா கும்பலுடன் சந்திராசாமியும் வந்து சேர்ந்து கொள்கிறார். ஜெயில்சிங்கை வளைத்துப் போட குருமூர்த்தியும் சந்திராசாமியும் சென்று அவரைப் பார்க்கிறார்கள். நாடாளுமன்றத்தில் பிரதமர் தன்னைப்பற்றி குறிப்பிட்டுச் சொன்னது அனைத்தும் புளுகு என குறிப்பிட்டு பிரதமர் ராஜீவிற்கு ஒரு கடிதம் எழுதப் போவதாக ஜெயில்சிங் சொல்கிறார். அந்த கடிதத்திற்கான நகல் ஒன்றை தாங்கள் தயாரித்துக் கொடுப்பதாக குருமூர்த்தி சொல்கிறார்; ஜெயில்சிங்கும் ஏற்றுக்கொள்கிறார். ஆனால் கோயாங்கோ கும்பல் தயாரித்த கடிதம் போய்ச்சேருவதற்கு முன்பே தானே தயாரித்த கடிதத்தை ஜெயில்சிங் பிரதமருக்கு அனுப்பி விடுகிறார். ஆனால் மறுநாள் 'எக்ஸ்பிரஸ்' நாளேட்டின் முதல் பக்கத்தில் ஜெயில்சிங் கொடுத்தனுப்பிய கடிதம் பிரசுரிக்கப்படுகிறது.

அதிர்ச்சியும் ஆத்திரமும் கொண்ட ராஜீவ் கும்பல் சிபிஐ-யை ஏவிவிடுகிறது. 'எக்ஸ்பிரஸ்' நாளேட்டின் சுந்தர் நகர் விருந்தினர் மாளிகை சோதனை இடப்படுகிறது. எதிர்பாராதவிதமாக, ஜெயில்சிங்கிற்காக குருமூர்த்தியும் கோயாங்கோவின் ஆலோசகரான முல்கோக்கரும் தயாரித்த கடிதத்தின் ஒரிஜனல் சிபிஐ அதிகாரிகளுக்குக் கிடைக்கிறது. இதன் மூலம், அம்பாணிக்கு எதிராக வாடியாவிற்காக மட்டுமல்ல, பச்சன் சகோதரர்களுக்கு எதிராக வி.பி. சிங்கிற்காக மட்டுமல்ல, தனக்கு எதிராக ஜெயில்சிங்கையும் கோயாங்கா கும்பல் தூண்டி விடுகிறது; பக்கபலமாக இருக்கிறது என பாசிச ராஜீவ் கும்பல் துல்லியமாக உணர்ந்து கொள்கிறது.

1987 மார்ச்சில், கோயாங்கோ-வாடியா-வி.பி. சிங்-அருண்நேரு-ஜெயில்சிங் ஆகியோர் ஒரே அலைவரிசைக்கு வந்திருந்தனர். ராஜீவ் அரசை கவிழ்க்க ஜெயில்சிங் வற்புறுத்தப்பட்டார். ஆனால் முகாந்திரம் போதுமானதாக இல்லை; காங்கிரஸ் எம்.பிக்கள் பெருமளவில் ராஜீவிடமிருந்து பிரிந்து வந்தால் தங்களது திட்டம் நிறைவேறும் என இருந்தனர்; கேரளா, மே.வங்க தேர்தல்களில் காங்கிரஸ் தோற்றபோதும் இது நடக்கவில்லை. அரண்மனைச் சதியின் முதலாவது படலம் இப்படி தோல்வியில் முடிந்தது.

1987 ஏப்ரல் வந்தது; பேர்பாக்ஸ் விவகாரம் பெரிதாக அடிபட ஆரம்பித்தது; ராஜீவ் கும்பல் திணறியது; இத்தனைக்கும் காரணமான வி.பி. சிங்கை ஆவேசமாக தாக்குமாறு காங்கிரஸ் எம்.பிக்களை கொம்பு சீவி விட்டது.

தன்னை பலியாக்க ராஜீவ் துணிந்து விட்டார் என உணர்ந்துகொண்ட சிங் எதிர்தாக்குதல் தொடுக்க தகுந்த ஆயுதத்தைத் தேடிக்கொண்டிருந்தார்.

ஏப்ரல் 6ம் தேதி பேர்பாக்ஸ் விவகாரத்தைப் பற்றி ஆராய ஒரு கமிட்டியை போடுவதென்று ராஜீவ் கும்பல் முடிவு செய்தது. இதன்மூலம் மூன்று விஷயங்களை நிரூபித்து கோயாங்கோ கும்பலை முறியடிக்க முனைந்தது. முதலாவதாக, பின்விளைவுகளை எல்லாம் பார்க்காமல் அன்னிய உளவு நிறுவனத்தை வி.பி. சிங் அமர்த்தினார்; இரண்டாவதாக, இவ்வாறு அமர்த்த குருமூர்த்தி நிதி அமைச்சகத்தை நிர்பந்தப்படுத்தினார்; மூன்றாவதாக, வாடியா இதற்கான பணத்தைக் கொடுத்தார் என்பதாகும்.

இதைத் தொடர்ந்து ராஜீவ் ஆட்சி மீதான தனது தாக்குதலை எக்ஸ்பிரஸ் தீவிரப்படுத்தியது. வி.பி. சிங் ஜெர்மன் நீர்மூழ்கி கப்பல் பேர ஊழலை வெளியிட்டு வேறு கோணத்திலிருந்து தனது தாக்குதலை ராஜீவ் கும்பல் மீது தொடுத்தார்; இதன் தொடர்ச்சியாக பதவியில் தனக்கு நாட்டமில்லை என்று சொல்லி அமைச்சரவையிலிருந்து வி.பி. சிங் ராஜினாமா செய்து ஒரு ஸ்டண்ட் அடித்தார்.

அடுத்து அம்பலத்திற்கு வந்தது போபார்ஸ் பீரங்கி பேர ஊழல். இந்தப் பிரச்சினை சூடுபிடித்து பாசிச ராஜீவ் கும்பல் அம்பலப்பட்டு தனிமைப்பட்டது. இது ராஜீவ் அரசை டிஸ்மிஸ் செய்ய ஜெயில்சிங்கிற்கு எதிர்பார்த்த காரணத்தை வழங்கியது. அதே சமயத்தில் வி.பி. சிங்கும் அருண்நேருவும் கூட்டாக செயல்பட ஆரம்பித்தார்கள்; இந்திராவின் அவசரநிலை ஆட்சியில் அதிகாரத்தை வைத்து அராஜகம் புரிந்து பின்னர் ராஜீவ்காந்தியின் விசுவாச ஊழியராக இருந்த வி.சி. சுக்லாவும் ஆரிஃப் மொகம்மத்கானும் வி.பி. சிங் கும்பலுடன் வந்து சேர்ந்துகொண்டனர்.

இந்த கும்பலின் சார்பாக வி.சி. சுக்லாவும் பிற எதிர்க்கட்சியினரும் ஜெயில்சிங்கை சந்தித்து ராஜீவ் அரசை டிஸ்மிஸ் செய்ய வற்புறுத்தினர். ஜெயில்சிங் ஏற்றுக்கொண்டு ராஜீவிற்கு மாற்றாக நம்பகமான ஆளைத் தேட ஆரம்பித்தார். இவர்களின் திட்டம் எளிமையானது. முதலில் ராஜீவை டிஸ்மிஸ் செய்வது; நாடாளுமன்றத்தில் தனக்கு பெரும்பான்மை இருப்பதாக வி.பி. சிங் அறிவிப்பது; உடனடியாக 200 எம்.பிக்கள் வி.பி. சிங்கிற்கு ஆதரவு தெரிவித்து அறிக்கை விடுவது; அதற்கடுத்து அமைச்சரவையை அமைக்குமாறு வி.பி. சிங்கை ஜெயில்சிங் அழைக்க வேண்டும்; நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வோட்டெடுப்பு நடப்பதற்கு முன்பு இன்னும் பல எம்.பிக்களை விலைக்கு வாங்குவது; அதன் மூலம் ஆட்சியை தக்கவைத்துக் கொள்வது — இதுதான் அவர்களின் யுத்த தந்திரமாக இருந்தது.

இதை எப்படி சட்டபூர்வமாக செய்வது என வழக்குரைஞர் அசோக் சென் (காங்கிரஸ் அதிருப்தியாளர்) நீதிபதி சந்திரசூட் ஆகியோரை ஜெயில்சிங் கலந்து ஆலோசிக்கிறார்; சட்டப்படி ராஜீவ் அரசை டிஸ்மிஸ் செய்ய 50% வாய்ப்பு இருப்பதாக கருத்து தெரிவிக்கின்றனர். இந்த சதித்திட்டத்தை அறிந்து கொண்ட பாசிச ராஜீவ் கும்பல்




படிப்பகம்

www.padippakam.com

ஆர்.கே. தவானையும் பூடாசிங்கையும் ஜெயில்சிங்கையும் தூது விடுகிறது; ஆனாலும் டிஸ்மிஸ் செய்வதென ஜெயில்சிங் முடிவெடுத்து செயல்பட்ட் ஆரம்பித்தார்; டிஸ்மிஸ் கடிதமும் தயாரிக்கப்பட்டு விட்டது; ஆனாலும் ராஜீவ் அரசு டிஸ்மிஸ் செய்யப் படவில்லை.

முதலாவது காரணம் அவருடைய செயலாளர் வரதன் இதற்கு உடன்பட மறுத்து ராஜினாமா செய்கிறேன் எனச் சொன்னது; இரண்டாவது ஜெயில் சிங்கின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அவரது செய்தித்துறை உதவிச் செயலாளர் டர்லோச்சன் சிங்கும் வரதனை ஆதரித்தது; மிகவும் முக்கியமான மூன்றாவது காரணம் 'எக்ஸ்பிரஸ்' ஆசிரியர் அருண்ஷோரி ஜெயில்சிங்கை மூன்று முறை சந்தித்து டிஸ்மிஸ் செய்ய வேண்டாமென கேட்டுக்கொண்டது. நடவடிக்கை எடுங்கள் என தீவிரமாக எழுதிக் கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் கும்பல் ஏன் பல்டி அடிக்க வேண்டும் என ஜெயில்சிங்கிற்கு ஒரே ஆச்சரியம். ராஜீவ் அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டால், அவர் தியாகி போல கருதப்பட்டு அவர் மீது அனுதாப அலை வீசும்; அவர் மீதான எல்லா குற்றச்சாட்டுகளும் மறக்கப் பட்டுவிடும் என்று அருண்ஷோரி வாதாடியுள்ளார். ஆனால் உண்மைக் காரணம் இதுவல்ல.

ஜெயில்சிங்குடனும் வி.பி. சிங்குடனும் கோயாங்கோ கூட்டு சேர்ந்து ஒரே குறிக்கோளுடன் செயல்பட்டாலும் இந்த கும்பலில் அருண்நேரு சேர்ந்ததிலிருந்து கோயாங்கோவிற்கு சந்தேகம் வர ஆரம்பித்துவிட்டது. கோயாங்கோ இன்னும் அருண்நேருவை அம்பானியின் ஆளாகவே பார்த்தார். தங்களுடன் கூட்டு சேர்ந்து ராஜீவை கவிழ்த்துவிட்டு அருண்நேருவை பிரதமராக்க அம்பானி-ஸ்வராஜ்பால் கோஷ்டி சதிக்குள் சதி செய்வதாக கோயாங்கோ கருதினார். மேலும் மாற்று சக்தியாக செயல்படுவேன் என வி.பி. சிங் வெளிப்படையாகவும் தைரியமாகவும் பேச தயங்கினார். எனவே ராஜீவ் டிஸ்மிஸ் செய்யப் பட்டால் அருண்நேரு பிரதமர் ஆகிவிடும் அபாயம் இருப்பதாக கோயாங்கோ கும்பல் உணர்ந்தது. சோ கூட துக்ளக்கில்



எவ்வளவு கோடி வேண்டுமானாலும் ஏற்பாடு செய்கிறேன்; ராஜீவைக் கவிழ்த்து நரசிம்மராவை பிரதமராக்குங்கள் என்று ஜெயில்சிங்கிடம் பேரம் பேசினர் சந்திராசாமி.

## பயங்கரவாதிகளின் கூடாரம் — காங்கிரசு

"அவர்கள் (ராஜீவ் கும்பல்) நினைத்திருந்தால், அரசாங்கத்தால் என்னை கொலை செய்வது மிகவும் சுலபமானது. நான் ஜனாதிபதி மாளி கையிலேயே தீவிரவாதிகளுடன் கூடிக் குலாவுவதாக பலர் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தார்கள். என்னைப் பாது கா த்துக் கொண்டிருந்தவர்களும் அவர்களுடைய (ராஜீவ் அரசாங்கத் தின்) ஆட்களே! தீவிரவாதிகளுடன் மோதல் ஒன்று நடந்ததாகவும் அதில் எதிர்பாராதவிதமாக கொல்லப்பட்டு (ஜெயில்சிங்) விட்டதாகவும் ஒரு பொய்யை பரப்புவது அவர்களுக்கு ஒன்றும் கஷ்டமில்லை! அல்லது அவர் கள் என்னை நேரிடையாக கொன்று விட்டு பழியை தீவிரவாதிகள் மேல் போட்டிருக்க முடியும். யார் அவர்களை அவநம்பிக்கையாக பார்க்க முடியும்? தீவிரவாதிகளின் தாக்குதல் பட்டிய லில் முதல் ஆளாக நான் இருந்தேன்" — இந்த காரணமே தன்னை கொலை செய்வதற்கு ராஜீவ் கும்பலுக்கு வசதி யாக இருந்திருக்கும் என்கிறார் ஜெயில் சிங்.

இப்படியொரு பொருள் தொனிக்கிற கார்ட்டூனை முதல் பக்கத்தில் போட்டார் என்பதை இங்கே நினைவு கூர்கிறோம். இதுதான் ராஜீவை டிஸ்மிஸ் செய்ய வேண்டாமென கோயாங்கோ கும்பல் சொன்னதின் பின்னணி.

இவ்வாறு அமைச்சரவைக் கவிழ்ப்பின் முதல் படலம் தோல்வியில் முடிந்தது. 1987 ஜூனில் நடந்த அரியானா மாநிலத் தேர்தலில் ராஜீவ் கும்பல் படுதோல்வி அடைந்தது. இது ராஜீவ் கும்பலின் கோட்டை என கருதப்பட்ட இந்தி பேசும் மாநிலங்களிலேயே ராஜீவின் செல்வாக்கு சரிந்திருப்பதின் அடையாளமாக இருந்தது. வோட்டு சேகரிக்கும் சக்தியை இழந்துவிட்ட ராஜீவை இனியும் நம்பி பயனில்லை என்பதால் புதிய பழமரத்தை தேடும் முயற்சியில் சில காங்கிரஸ் வௌவால்கள் இறங்கின.

இவர்களில் ஜெகன்னாத் மிஸ்ரா, மாதவசிங் சோலங்கி, அசோக் சென் ஆகியோருடனும் வி.சி. சுக்லாவுடனும் ஜெயில்சிங் அடுத்த சதிப்படலம் பற்றி கலந்து ஆலோசித்தார். இந்த கட்டத்தில் இன்னும் பலர் தனித்தனியாகவும் கூட்டாகவும் ஜெயில்சிங்கை சந்தித்து ராஜீவை டிஸ்மிஸ் செய்யச் சொல்லியும் தங்களால் சொல்லப்படும் ஆளை பிரதமராக்கவும் பல பேரங்களை பேசினர். அப்போதுதான் ரூ. 30, 40 கோடி பற்றிய பேரமும் நடந்திருக்கிறது. காங்கிரஸ் எம்.பிக்களை விலைக்கு வாங்குவது இப்போது சுலபம் என இவர்களில் பலரும் கருதினர். வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகள் வேட்பாளராக ஜெயில்சிங்கை நிறுத்துவது; தங்களால் விலைக்கு வாங்கப்படும் காங்கிரஸ் எம்.பி.; எம்.எல்.ஏக்களைக் கொண்டு காங்கிரசின் அதிகாரபூர்வ வேட்பாளரைத் தோற்கடிப்பது; இதனால், வேறு வழியின்றி ராஜீவ் அரசு ராஜினாமா செய்யவேண்டி வரும்.

இந்த திட்டத்தின் அடிப்படையில் ஜெயில்சிங் தனது வியூகத்தை வகுத்தார். ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுதாக்கல் செய்தபின், உடனடியாக நிருபர்கள் கூட்டத்தைக் கூட்டுவது; மிகுந்த தயக்கத்திற்கு பின்தான் தேர்தலில் நிற்க ஒப்புக்கொண்டது போல அங்கு பசப்புவது; 'எனக்கு கிடைத்த சாட்சியங்களிலிருந்து என்னால்

ஆட்சியைக் கவிழ்த்தால் அடுத்த பிரதமர் பதவியை எனக்குக் கொடுங்கள் என்று 45 எம்.பிக்களின் பட்டியலைக் கொடுத்தார் பல்ராம் ஜாக்கர்.

என்னைப் பிரதமராக்கினால் நீங்கள் ஜனாதிபதியாக தொடர்ந்து நீடிக்க ஏற்பாடு செய்கிறேன் என்று 35 எம்.பிக்களின் பட்டியலைக் கொடுத்து ஜெயில்சிங்கிடம் பேரம் பேசினார் அர்ஜுன்சிங்





படிப்பகம்

www.padippakam.com



ஜெயில்சிங்குக்கும் போட்டி காங்கிரசாருக்கும் அதிகாரத் தரகர்களாகச் செயல்பட்ட வி.சி.சுக்லா, அசோக் ஜைன்.

ராஜீவ்காந்தியை டிஸ்மிஸ் செய்திருக்க முடியும். பலர் இந்த ஆலோசனையை எனக்கு கூறினர். ஆனால் நான்தான் அவர்களை சாந்தப்படுத்தினேன்; குறுக்கு வழி எல்லாம் வேண்டாம்; மக்களிடம் செல்வோம்; நேர்வழியில் நம்பிக்கை பெற்று வருவோம் என சொன்னேன்' என ஒரு வசனத்தைப் பேசுவது; ராஜீவிற்கு எதிரான சாட்சியத்தை வெளியிட எவராவது கோரினால், அப்படி வெளியிடுவது எனது பதவி பிரமாணத்திற்கு எதிரானது' என உத்தமன் போல் நடிப்பது; மேலும் தேர்தல் நடக்கும் சமயத்தில் தான் ஜனாதிபதி மாளிகையில் வசிப்பது சரியல்ல என பகிரங்கமாக அறிவித்து வெளியேறி பரிசுத்தம் போல நடிப்பது — இதுதான் அவரது வியூகமாகும்.

அடுத்து; ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறிய ஓரிரு நாட்கள் கழித்து . பெங்களூர் செல்வது; ராமகிருஷ்ண ஹெக்டே அவருக்கு விருந்தோம்பல் செய்வது; நிருபர் கூட்டங்களை நடத்துவது; அடக்க வொடுக்கமாகவும் எளிமையானவர் போலவும் நடிப்பது; வலுவான ஆதாரங்கள் கிடைத்தபோதும் ராஜீவ் அரசை டிஸ்மிஸ் செய்யாததற்கு காரணம் மக்கள்மீது தான் நம்பிக்கை வைத்ததுதான் என யோக்கியவான் போல காட்டிக்கொள்வது என்பது அவரது திட்டமாகும். அதற்கடுத்து ஆந்திரா சென்று இதே நாடகத்தை நடிப்பது; அதற்கடுத்து கல்கத்தா; இவ்வாறு இவர் 'புனித பயணம்' மேற்கொண்டிருக்கும்போதே இவரது ஏஜண்டுகள் எம்.பிக்களையும் எம்.எல்.ஏக்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டிருப்பர்.

ஆனால் இவ்வாறெல்லாம் நடக்கவில்லை. தான் தேர்தலில் நிற்பதற்கு முன்னால் இரண்டு விஷயங்களை உறுதிப்படுத்திக்கொள்ள ஜெயில்சிங் முயன்றார். உத்திரவாதமில்லாமல் தலையைக் கொடுக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். மேலும் காங்கிரஸ் அதிருப்தியாளர்கள், எதிர்க்கட்சியினர் அனைவரும் எப்போது எப்படி நிறம் மாறுவார்கள் என்பதை யாரர்லும் அறிய முடியாது என்பதையும் அவர் அறிந்திருந்தார்; பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல; எனவேதான் ஜெயில்சிங் இரு உத்திரவாதங்களைக் கோரினார். ஒன்று, அனைத்து எதிர்க்கட்சிகளின்

## காங்கிரசு கலாச்சாரம்

'ஒரு ஜனாதிபதி தேர்தலுக்கு இவ்வளவு பெரிய அளவில் பணம் ஏன் தேவைப்படுகிறது என மக்கள் ஆச்சரியப்படுகிறார்களே?' என நிருபர் கேட்டதற்கு ஜெயில்சிங் சொன்னது.

'நீங்கள் கிரியின் வெற்றியை மறந்து விட்டீர்களா? அவர் எப்படி இந்தியாவின் ஜனாதிபதியானார்? முதல் சுற்றில் அவர் தோற்றுக் கொண்டிருந்தார். ஆனால் அதன்பின் என்ன நடந்தது? அவர் எப்படி வென்றார்? எல்லாவற்றையும் நான் அறிவேன். திருமதி காந்தியின் சார்பாக, அந்த மொத்த செயல்பாட்டிற்கும் நான்தான் பொறுப்பேற்றிருந்தேன் என்பதை மறந்துவிடாதீர்கள்! சஞ்சீவ ரெட்டியைத் தோற்கடிக்க வேண்டுமென்பதில் திருமதி காந்தி தீர்மானகரமாக இருந்தார்! அதை அவர் முடித்தும் காட்டினார். திருமதி இந்திரா இதை எப்படிச் செய்தார் என்று நினைக்கிறீர்களா? பணம் இல்லாமலா?

பஞ்சாபில் அகாலி அரசாங்கம் இருந்தது. ஆனால் அகாலி எம்.எல்.ஏக்கள் கிரிக்கு வோட்டு போட்டனர். உத்திரபிரதேசத்தில் சரண்சிங் பல வாக்காளர்களை வைத்திருந்தார். அங்கே இரண்டாவது வோட்டுக்கள் எங்கள் வேட்பாளருக்கு கிடைத்தன. இவ்வாறு தான் கிரி, இரண்டாவது சுற்றில் முன்னணிக்கு வந்தார். இந்த வோட்டுகள் எல்லாம் இலவசமாக வந்தன என்றா நினைக்கிறீர்கள்?'

ஏகமனதான வேட்பாளராக தா நிறுத்தப்பட வேண்டும்; இரண்டு காங்கிரஸ் எம்.பிக்களில் சிலராவ தைரியமாக வெளிவந்து தன்னை தேர்தலில் நிற்குமாறு பகிரங்கமாக கோ வேண்டும்.

ஆனால் இரண்டுமே ஈடேறவில்லை முதலாவதாக, வலது. இடது போலிக ஜெயில்சிங்கை ஆதரிக்கவில்லை ராஜீவை விட நம்பகமான ஆகிய ஆதர ஆள் அடுத்த பிரதமராக வ வாய்ப்பில்லாத நிலையில் ராஜீவே நீடிக் வேண்டும் என்று வலது இடதுகளுக் மாஸ்கோ கட்டளை பிறப்பித்து விட்டது இரண்டாவதாக, காங்கிரஸ் எம்.பிக்களுப் பகிரங்கமாக வரவில்லை. வி.பி. சிங்குப் அருண்நேருவும் பகிரங்கமாக ஜெயில்சிங் கிற்கு ஆதரவு தர முன்வரவில்லை இதற்குக் காரணம் ராஜீவ் அரசை டிஸ்மிஸ் செய்யவே அவர்கள் ஜெயில்சிங் கைப் பயன்படுத்த நினைத்தனர். மீண்டும் அவர் ஜனாதிபதியாக வருவதை அவர்கள் விரும்பவில்லை. ஏனென்றால், அவர் மீண்டும் ஜனாதிபதியானால் அவர்தான் இந்த நாட்டிலேயே மிகச் சக்தியுள்ள மனிதராக இருப்பார். 'அமைச்சரவை அமைக்க யாரை அழைப்பது' என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜெயில்சிங்கிடம் இருக்கும். அப்போது தங்களை மதிக்காமல் வேறு யாரையாவது ஜெயில்சிங் அழைத்து விட்டால், பட்ட பாடெல்லாம் பாழாகி விடும் என பயந்தனர். ஏனென்றால் ஜெயில்சிங் ஒரு குள்ளநரி என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

வேறு வழியின்றி, ஜெயில்சிங் ஜனாதிபதி தேர்தலில் இரண்டாம் முறை நிற்கும் திட்டத்தை கைவிட்டார். இப்படித்தான் அரண்மனைச் சதியின் இரண்டாவது படலம் தோல்வியில் முடிந்தது.

அரண்மனைச் சதியின் இரண்டாவது படலத்தில்தான் ஜனாதிபதி விலை பேசப்பட்டது நடந்தது. சண்டே பத்திரிகை நிருபர் ரிட்டு சரினுக்கு கொடுத்த பேட்டியில் தான் இதை ஜெயில்சிங் சொன்னார். உடனே வானொலியும் வானொளியும் இதை பெரிதுபடுத்தின. வி.பி. சிங் கும்பலைச் சேர்ந்தவர்கள்தான் இவ்வாறு செய்திருப்பார்கள் என ராஜீவ் கும்பல் கருதியதே இதற்குக் காரணம். அதனால் பாராளுமன்றத்தில் இப்பிரச்சினை வந்த கணத்திலேயே விசாரணைக் கமிஷன் அமைக்க ராஜீவ் ஆலோசனை கூறினார். இதன் மூலம் எதிர்க்கட்சிகளின் பெரிய ஊழலை வெளிக்

பதவிப் போட்டியில் ஈடுபட்ட இன்னுமொரு போட்டி காங்கிரசு கும்பல். ஆனால் ஜெயில்சிங்கை நம்பத் தயாராக இல்லை. அருண் நேரு அரிப் முகம்மதுகான் வி.பி.சிங்.





படிப்பகம்

www.padippakam.com



ராஜீவைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற அனுமதியுங்கள்; மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று ஜெயில்சிங்கிடம் கோரினார் வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி

ராஜீவுக்கு நீங்கள் எழுதவுள்ள கடிதத்தை நான் தயாரித்துத் தரட்டுமா என்று ஜெயில்சிங்கிடம் கேட்டார் குருமூர்த்தி.

இந்த போட்டி முதலாளித்துவ கும்பலின் தலைமை கோயங்கா

கொணர்வதற்கு நல்ல வாய்ப்பு என மகிழ்ந்தார்; தான் சொன்னது எதிர்க்கட்சிகளை தாக்க ராஜீவ் கும்பலுக்கு ஆயுதமாக பயன்படுவதைக் கண்ட ஜெயில்சிங் தனது செய்திக்கு விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார்; ஆனால் அதுவே இன்னும் அவரை உளற வைத்து பல்வேறு விஷயங்களை அம்பலப்படுத்திவிட்டது

'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' பத்திரிகைக்கு ஜெயில்சிங் அளித்த பேட்டியில், நிருபர் ரூ. 40 கோடி பற்றி கேட்கிறார்; அதற்கு, 'நான் ஒன்றுமே சொல்லவில்லை' என்று பச்சையாக பொய் புளுகுகிறார் ஜெயில்சிங்; அதற்கு அடுத்த கேள்விக்கு பதிலளிக்கையில், 'பேசுகிற பொழுது ஒருவர் பேச்சின் போக்கில் எவ்வளவோ சொல்லலாம்; அதை எல்லாம் பத்திரிகையில் போடலாமா?' என நைச்சியமாக கேட்கிறார்; சரி அப்படியானால் மறுப்பு விடுங்கள் என கேட்கிறார் நிருபர்; அதற்கு, "நான் எப்படி விடமுடியும்? நான் சொன்னேன்; ஆனால் அது பதிவு செய்யப்படுவதற்கு அல்ல... இப்போது எந்த பிரச்சினையிலும் மாட்டிக்கொள்ள நான் விரும்பவில்லை; எல்லாம் முடிந்துவிட்டது; நான் அக்கடா என வாழ விரும்புகிறேன். இந்த நாட்டிலேயே பெரிய பதவியை நான் வகித்து விட்டேன். வாழ்க்கையில் இனி என்ன நான் எதிர்பார்க்க முடியும்?" என்று நழுவப் பார்க்கிறார்.

பணம் கொடுப்பதாக சொன்னவர்களின் பெயரைச் சொல்லுங்கள் என நிருபர் கேட்டதற்கு, "சரியான தருணத்திற்கு பொறுத்திருங்கள்; இப்பொழுது வேண்டாம்; தற்போது நான் மேலும் தொல்லைகளை விரும்பவில்லை." என பசப்புகிறார்; கேள்வியாளர் விடாமல், "பூடா சிங்கின் விசாரணை பற்றி கவலை கொள்கிறீர்களா?" என கேட்கிறார். அதற்கு ஜெயில்சிங் பின்வருமாறு சொல்கிறார். "நான் ஏன் கவலைப்பட வேண்டும்? பணம் எதுவும் கைமாறவில்லை. இரண்டாவது தடவையாக நான் தேர்தலில் நிற்கவில்லை. அப்படியிருக்க அவர் எதை விசாரிக்க முடியும்? பணத்தைக் கொடுக்க முயன்றவர்கள் யார் என் கேட்கத்தான் அவரால் முடியும். சொல்ல முடியாது என நான் மறுத்து விடுவேன்; அவ்வளவுதான் விசாரணை முடிந்து விடும்" என்று சொல்லி விட்டு சிரித்தாராம்!

'ரவிவார்' என்ற இந்தி பத்திரிகையின் நிருபர் ராஜீவ் சுக்லா என்பவருக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு ஜெயில்சிங் சொல்லியுள்ளார்: "அது மிகவும் சுலபமானது. எனது நண்பர்கள் என்னிடம் வந்து மீண்டும் தேர்தலில் நிற்கச் சொன்னார்கள்; என்னிடம் பணம் இல்லை என்று நான் சொன்னேன்; ஆனால் ஆளும் கட்சி உங்களுக்காக கோடிக்கணக்கில் செலவு செய்யும் என அவர்கள் சொன்னார்கள். கவலைப்படாதீர்கள்; எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எத்தனை கோடி வேண்டுமானாலும் செலவு செய்யப்படும் என்று சொன்னார்கள்; அந்த சமயத்தில் அவர்கள் ஆளும் கட்சியில் இருந்தார்கள்."; 'அவர்கள் இன்னும் ஆளும் கட்சியில் இருக்கிறார்களா' என நிருபர் கேட்டதற்கு, ஜெயில்சிங் சிரித்துக்கொண்டே பின்வருமாறு சொன்னாராம்: "நான் ஏன் அதை உங்களுக்குச் சொல்ல வேண்டும்? அவர்களுடைய பெயர்களை நான் ஏன் உங்களுக்குச் சொல்ல வேண்டும்? நான் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். வேண்டுமென்றே எனது நண்பர்களை நான் பாதுகாப்பேன். அதனால் அவர்களுடைய பெயர்களை நான் சொல்ல மாட்டேன்" ஆனால் நிருபர் விடாமல் அப்படி பணம் கொடுக்க முயன்றவர்கள் வி.பி. சிங், அருண்நேரு, வி.சி. சுக்லா என ஆளும்கட்சி கைகாட்டுகிறதே என கேட்கிறார்.

அதற்கு ஜெயில்சிங் சொல்கிறார்: "ஆகவே நான் அவர்களையும் பாதுகாக்க வேண்டும். என்னுடைய அறிக்கை மூலம் அவர்கள் காப்பற்ப்பட முடியுமென்றால் நான் நிச்சயம் அவர்களைப் பாதுகாப்பேன். இந்தப் பிரச்சினையில் ஆதாயம் தேட அரசாங்கத்தை நான் விடமாட்டேன். மாறாக, சம்பந்தப்பட்ட நபர்கள் ஆளும்கட்சியில் இருக்கிறார்கள் என்று மட்டுமே சொல்கிறேன்."

இவ்வாறு முன்னாள் முதல் குடிமகன் கூசாமல் பொய் சொல்கிறார்; புரட்டி புரட்டி பேசுகிறார். இந்திய நாட்டின் மிகப் பெரிய பதவி என்று பீற்றிக் கொள்ளப்படும் பதவிக்கான தேர்தலில் இலஞ்சம் கொடுக்க முயன்றதை சகஜமான விசயம் என்று சர்வ அலட்சியமாக கூறுகிறார். இலஞ்சம் கொடுக்க முயன்றவர்களைச் காப்பாற்றுவேன் என்கிறார். ஆம் இது தான் ஜனாதிபதிகளின் யோக்கியதை!

அரண்மனைச் சதி நடந்தபோது, மாற்றுப் பிரதமராக இந்நாள் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனை போடலாம் என்று முடிவெடுத்தனராம். அதற்கு வெங்கட்ராமனும் ஒப்புக்கொண்டாராம்! இதை அறிந்த ராஜீவ் வெங்கட்ராமனை அழைத்து அடுத்த ஜனாதிபதி பதவி தருவதாக ஆசை காட்ட வெங்கட்ராமன் ராஜீவ் கும்பலின் பக்கம் தாவிவிட்டார் என்றும் ஜெயில்சிங் தனது பேட்டியில் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற அவைத்தலைவர் பல்ராம் ஜாக்கரும் ஜெயில்சிங்கிற்கு தூது விட்டாராம்! ராஜீவை டிஸ்மிஸ் செய்துவிட்ட சேதி அனுப்பினாராம். சுவாரசியமான விசயம் என்னவென்றால் தூது வந்தவர் மணராம் பக்ரி என்ற எதிர்க்கட்சி எம்.பியாம்!

நரசிம்மராவும் தனது குருவான ஜகப் புரட்டன் சந்திராசாமி மூலம் தன்னை பிரதமராக்கச் சொல்லி ஜெயில்சிங்கிற்கு தூது விட்டிருக்கிறார். ஜெயில்சிங் இவ்வாறு செய்வதற்கு வேண்டிய அளவு பணத்தைத் தருவதாகவும் சந்திராசாமி ஆசை காட்டியுள்ளார்.

மொத்தத்தில் முதல் குடிமகன் முதல் பிற வோட்டுப் பொறுக்கிக் கட்சிகள், தரகு முதலாளிகள் வரை ராஜீவ்காந்தியின் ஊழல் இலஞ்ச லாவண்யங்களை எதிர்த்துப் போராடியது நாட்டின் வாழ்விலிருந்து இவைகளை ஒழித்து கட்ட வேண்டும் என்ற ஓங்கி உயர்ந்த இலட்சியத்தால் அல்ல! மாறாக அவைகளை அஸ்திரங்களாக ஏவி ஆட்சிக் கட்டிலிலிருந்து ராஜீவை 'அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் தாங்கள அமர வேண்டும் என்பதற்காக மட்டும்தான்.

அதற்கு அவர்கள் கையாண்ட இரகசியச் சதிகள்! இலஞ்சம் மூலம் எம்.பிக்களை விலைக்கு வாங்குதல்! ஆட்சிக் கவிழ்ப்புகள்! மக்கள்முன் நடிப்பது, பசப்புவது.

அவர்களே ஏற்றிப் போற்றுகின்ற ஜனாயக ரீதியிலான போராட்ட முறைகள், நிறுவனங்களைவிட அவர்கள் அதிகம் நம்பியது மேற்சொன்ன முறைகளையே! பேர்பாக்ஸ், போபார்ஸ் ஆயுத பேர ஊழல் தொடர்பான விவாதங்களின் போது நடந்தவைகள் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நிறுவனமாகவே நாடாளுமன்றம் இருந்தது என்பதால் இவர்கள் இவ்வாறு செய்யவுமில்லை!

இது ஏதோ ராஜீவ்காந்தி என்ற வெட்கமற்ற முரடனின் மூர்க்கத்தனத்தால் நடந்ததுமல்ல! மாறாக, இம்மாதிரியான கயவர்களைக் காப்பாற்றுவதுதான் நாடாளுமன்றம் சட்டமன்றங்களின் பணியாகும்.

'பலர்மீது ஒரு சிலர் நடத்தும் சூறையாடலே இந்தியக் குடியரசு' என்பது இவைகளின் மூலம் மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டு விட்டது. சூறாவளியென சுழன்றடிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சி ஒன்றுதான் ஊழல், இலஞ்சமற்ற புதிய இந்தியாவை படைக்க முடியும்.

வண்டார்குழலி மணாளன்

அன்பார்ந்த வாசகர்களே,

சென்ற 16-31 மார்ச் '88 இதழின் எண் 9 என்பதற்குப் பதிலாக 10 என தவறாக அச்சாகியுள்ளது. எமது கவனக்குறைவால் நேர்ந்த இத்தவறுக்கு சுயவிமர்சனம் ஏற்று, இனி இதுபோன்ற தவறுகள் நேராவண்ணம் எச்சரிக்கையுடன் செயலாற்ற உறுதியளிக்கிறோம்.

— ஆசிரியர் குழு
புதிய ஜனநாயகம்

படிப்பகம்

www.padippakam.com

## பாரத் பந்த் :

# தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணம் X பாசிச கும்பலின் காட்டு மிராண்டித்தனம்



'பந்த்'துக்கு ஆதரவாக ஜென்வதி மஹிலா சமிதியினர் டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்; போலீசின் வெறியாட்டம்.

ஓரணியில் திரண்ட இந்திய தொழிலாளர் வர்க்கத்தின் முன் பாசிச கும்பலின் மிருக பலம் பிசுபிசுத்து போய் விட்டது. மார்ச்சு 15 பாரத் பந்த் — அகில இந்திய வேலை நிறுத்தம் இதைத் தான் காட்டுகிறது.

அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கு எதிராக பாசிச ராஜீவ் கும்பலால் தொழிலாளி வர்க்கத்தின் மீது ஏவி விடப்பட்ட பகிரங்க மிரட்டல்களும், கொலைவெறி தாக்குதல்களும் தேன் தடவிய தோட்டாக்களும் — வஞ்சகப் பிரச்சாரமும் — முனை மழுங்கி முறிந்து விழுந்தது.

அகில இந்திய வேலை நிறுத்தத்தை தமிழகத்தில் தலைக்காட்ட விடாமல் விரட்டியடிப்பது என கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் குதித்த உளவு புகழ் கவர்னர் பி.சி. அலெக்சாண்டரும், பாசிச கும்பலின் அதிரடி படைத்தலைவன் வால்டர் ஐசக் தேவராமும் பாசிச ராஜீவ் அரசின் பல்லாகவும், நகமாகவும் செயல்பட்டும் கூட தொழிலாளர் வர்க்கத்தின் உறுதியை குலைக்க முடியவில்லை. வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்த ஓட்டுசீட்டு அரசியல் கட்சியின் உள்ளூர் தலைவர்களை நள்ளிரவில் கடத்திச் சென்றும் சோதனை, வரி வேட்டையை காட்டி வியபாரிகள், தனியார் நிறுவனங்களை திறந்து வைக்கும்படி மிரட்டியும், போலீசு கும்பலிடம் இருக்கும் வாகன வசதியுடன், தனியாரிடமிருந்து லாரிகளை வாங்கி குவித்து, பெரு நகரங்களில் சாலைகளில் நடமாடிக்கொண்டிருந்த பகுதி மக்களை வாரிக்கொண்டு சென்றும், வானொலி, வானொளி பிரச்சாரத்தை முடிக்கிவிட்டு பொது மக்களுக்கு பீதி யூட்டியும், தொழிற்சாலை பகுதிகளில் ராணுவம், போலீசு கும்பலின் அணி வகுப்பு நடத்தி முதலாளிகளுக்கு தெம்பு ஊட்டியும் கூட அலெக்சாண்டர், தேவாரம் கும்பலால் வேலை நிறுத்தத்தை உடைக்க முடியவில்லை.

பெரும்படையுடன் தொழிலாளர் வர்க்கத்தின் மீது முட்டிமோதிய அலெக்சாண்டர், தேவராம் கும்பல், கடைசியில் பரிதாபகரமாக கீழே விழுந்து மண்ணை கவ்வியதுதான் மிச்சம்.

இலவச சாப்பாடு, 'இன்னபிற' சலுகைகள் என கருங்காலிகளை அழைத்து வந்து நகரங்களில் மட்டும் அரசு பேருந்துகளை ஓட்டி வேடிக்கை காட்டியது. வேலை நிறுத்தம் என்று வீட்டில் முடங்கிக் கொள்ளாமல் போர் குணத்தோடு தங்கள் நிறுவனங்களின் முன்பு ஆர்பாட்டத்தில் இறங்கிய உறுதி மிக்க தொழிலாளர்களை கருங்காலிகளை வைத்து மிரட்டி பார்த்தது. எதற்கும் அசைந்துக் கொடுக்காமல், ஆர்பாட்டம் செய்த தொழிலாளர்களை பொய்குற்றம் சாட்டி பெருவாரியாக கைது செய்து சிறையில் அடைத்தது.

பந்த பிசுபிசுத்தது என்ற மாயத் தோற்றத்தை மக்களிடம் உருவாக்க, அடாவடித்தனமாக, அக்கிரமான முறையில் மக்களின் வரிபணத்தை குப்பையாக வாரி இறைத்தது. பயணிகள் இல்லை என தெரிந்தும், நெடுந்தூர ரயில்களையும், உள்நாட்டு மற்றும் வாயுதூத் விமான போக்குவரத்தையும் நிறுத்தாமல் நடத்தியது. வேலை நிறுத்த நாளன்று சென்னையிலிருந்து திப்பதி சென்ற வாயுதூத் விமானத்தில் ஒரு பயணியும், நெய்வேலி போக்குவரத்தில் இரண்டே இரண்டு பயணிகள் மட்டுமே பயணம் செய்திருக்கிறார்கள். எட்டே எட்டு பேருக்காக சென்னை-மதுரை வைகை எக்ஸ்பிரசும் 15 பேருக்காக சென்னை-ஏற்காடு எக்ஸ்பிரசும் ஓடி இருக்கின்றன.

சென்னையில், காலி மைதானங்கள் போலிருந்த பேருந்து நிலையங்களையும், கடைவீதிகளையும், புகைப்படம்

## அம்பலப்பட்ட சூசைராஜின் அராஜகம்!

புரட்சிகர பத்திரிக்கை புதிய ஜனநாயகத்தால் (பிப்ரவரி 88, 1-15 புதிய ஜனநாயகம்) மக்கள் மத்தியில் அம்பலப் பட்டு, முகத்திரை கிழிக்கப் பட்ட ஊர்ப்பணத்தையும் பொதுமக்கள் பணத்தையும் உண்டு கொழுத்த பன்றி சூசைராஜ் (கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிய சேர்மன், தி.மு.க.) புதிய ஜனநாயக வாசகர் களை பழிவாங்கவும், கொலை செய்யவும் தன் கட்சி ரவுடிகளான மாரிமுத்து, ரெங்கசாமி, பெருமாள், துரைராஜ், இராஜகோபால், வீரப்பன் மற்றும் ஜாதி வெறியர்களின் துணையுடன் திட்டம் தீட்டினார். அதன் முதல்கட்டமாக 1-3-88 செவ்வாயன்று புதிய ஜனநாயக வாசகர் களை ஆயுதங்களுடன் கொலை வெறி கொண்டு தாக்கினர். சேர்மன் சூசைராஜ் முன்னிலை வகித்து "அடித்து நொறுக்குங்கள்" என்று ஆணையிட சூரக்காடு கிராமத்து பஸ் நிறுத்துமிடத்தில் வாசகர் கள் ரௌடிகளால் தாக்கப்பட்டனர். வாசகர் இராஜேந்திரனின் சகோதரர் மாரி முத்துவின் வலது கையை ஒடித்துவிட்டனர் ரௌடிகள். அவர் 1-3-88 முதல்புதுக் கோட்டை தலைமை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். "தூத்துக்குடி ரவுடி" என்று பெயர் பெற்ற கரம்பக் குடி காவல் நிலைய சப்இன்ஸ்பெக்டர் கந்தசாமி ரூபாய் 1000/- பணம் பெற்றுக் கொண்டு குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் புகாரை கிடப்பில் போட்டு விட்டார். புதிய ஜனநாயக வாசகர்களை "ஊரைவிட்டே விரட்டி விடுவோம்" என்று மிரட்டியும், தாக்கியும் வரும் இந்த உழைக்காத வீணர்களின் கூட்டத்தை மக்கள் அடையாளம் கண்டுகொள்ளத்தான் போகின்றார்கள். வீணர்கள் கூட்டம் வீதியில் நிறுத்தப் பட்டே தீரும்.

— சேதாராமன். கரம்பக்குடி.



படிப்பகம்

www.padippakam.com




வெறிச்சோடி கிடக்கும் சென்னை தேனாம்பேட்டை காங்கிரசு கட்டிடம்.

எடுத்து செய்தி சேகரித்துக் கொண்டிருந்த பத்திரிக்கை நிருபர்கள் போலீசின் கண் எதிரிலேயே காங்கிரசு குண்டர்களால் கண் மூடித்தனமாக தாக்கப்பட்டனர்.

டில்லி, அருணாசலபிரதேசம், திரிபுரா, அசாம், பஞ்சாப், சண்டிகர், குஜராத், ஜம்மு, காஷ்மீர் மாநிலங்களில் குறைந்த அளவிலும் மற்ற மாநிலங்களில் அகில இந்திய வேலை நிறுத்தம் முழு அளவிலும் வெற்றி அடைந்தது. எதிர்கட்சி மாநிலங்கள் ஆளும் ஆந்திரா, கர்நாடாக, கேரளா, மே. வங்கம் தவிர காங்கிரசு மாநிலங்களான ஒரிசா, பீகார், மத்திய பிரதேசம், பாண்டிச்சோ, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலும் வேலைநிறுத்தம் முழு அளவில் வெற்றி பெற்றது. அரசு, தனியார் நிறுவன ஊழியர்கள், போக்குவரத்து, மின்சார துறை ஊழியர்கள், சிறுகடை வியாபாரிகள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றனர். குறிப்பாக மத்திய அரசின் 17 பொது துறை நிறுவனங்களின் 21 இலட்சம் தொழிலாளர்கள் மிகப்பெரும் அளவில் வேலை நிறுத்தத்தில் கலந்துக் கொண்டனர்.

பாசிச ராஜீவ் கும்பல், வேலை நிறுத்த நாளன்று அனைத்து மாநிலங்களின் 'சட்டம் ஒழுங்கை'யும் காங்கிரசு குண்டர்களின் கரங்களில் ஒப்படைத்தது. மாநிலங்களில் குவிக்கப்பட்ட போலீசு — ராணுவ பட்டாளம் காங்கிரசு குண்டர்களின் நடவடிக்கைகளுக்கு உதவுவது என்ற அளவிலேயே இயங்கியது.

அரசு புள்ளி விவரப்படி வேலை நிறுத்த நாளன்று 'கலவர'த்தால் இந்தியா முழுவதும் 7 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 250 பேர் காயமடைந்தார்கள். வழக்கமான போலீசு கும்பலின் துப்பாக்கி சூட்டுக்கு மாறாக, இந்தமுறை போராடிய தொழிலாளர்கள் காங்கிரசு குண்டர்களாலேயே அடித்துக் கொல்லப்பட்டனர். பீகார் — பாட்னா மாவட்டம். ஜெய்ட்டி பஜார் பகுதியில் பிரச்சாரத்தின் போது ஒரு தொழிலாளியும், காயா மாவட்டத்தில் தொழிற்சாலை ஆர்பாட்டத்தின் போது 4 தொழிலாளர்களும் காங்கிரசு குண்டர்களாலும், நிர்வாகத்தின் அடியாட்களாலும் அடித்துக் கொல்லப்பட்டனர். கேரளாவில் கொச்சி அருகே அரவை ஆலை முதலாளி தம் ஆலையின் முன்பு ஆர்பாட்டம் செய்த தம் தொழிலாளர்களில் இரண்டு பேரை நேரிடையாக சுட்டுக் கொன்றான்.

வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்த தொழிற்சங்கங்கள் 'தொழிலாளர்களின் தற்காப்பு பற்றி சிறிதும் அக்கறை கொள்ளவில்லை. பாசிச ராஜீவ் கும்பலின் அடக்குமுறை சட்டங்கள், வெறியாட்டங்கள் பற்றி இவ் ஓட்டுக்கட்சிகள் ஒருபுறம் வாய்கிழிய போசிக்கொண்டே, மறுபுறம் திட்டமிட்டே தொழிலாளர்களை நிராயுத பாணிகளாக முடக்கி வைத்தன. விளைவு; பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பட்டபகலிலும், நள்ளிரவிலும் கைது செய்யப்பட்டனர். பகிரங்கமாக மிரட்டப்பட்டனர். காங்கிரசு குண்டர்களால் அடித்தே கொல்லப்பட்டனர்.

ஓட்டுக் கட்சிகளுக்கு, பாசிச ராஜீவ் கும்பலை அதன் வேரோடும், வேரின் மண்ணோடும் தூக்கி எறிவதைப்பற்றியோ, அதற்கான போராட்டம் அமைப்பு முறைக்கு தொழிலாளர்களை பயிற்றுவிப்பது என்பதோ லட்சியம் அல்ல. "ராஜீவே, ராஜினாமா செய், மறு தேர்தல் நடத்து" என்பது தான் அவர்களுடைய மைய முழக்கம். மக்களின் மீது பெருஞ்சுமையாக, வேண்டாத சதையாக அழுத்திக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற போலி ஜனநாயக அமைப்பு முறையை கட்டிக்காத்து அதில் அதிகார பங்கு போட்டுக்கொள்வதே அவர்களுடைய ஒரே இலட்சியம்.

தொழிலாளர் வர்க்கமும், பரந்துப்பட்ட உழைப்பாளி மக்களும் தங்கள் போராட்ட பலனை அறுவடை செய்ய ஓட்டுக்கட்சிகளை நம்பி பலனில்லை. 'சுதந்திரத்'திற்கு முன்னும், பின்னும் கடந்த 100 ஆண்டுகால வரலாறு இதைத்தான் காட்டுகிறது. போலி பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு மாற்றாக, தேர்தல் பாதைக்கு வெளியே ஒரு புரட்சியின் மூலம் பாசிச கும்பலை தூக்கியெறியும் போது மட்டுமே, புது வாழ்வு பிறக்கும். ஓட்டுக்கட்சி தலைமை அல்ல புரட்சிகர தலைமையே இதை சாதிக்கும்.

● குணசேகரன்

## பந்த்: புதிய ஜனநாயக வாசகர்கள் மீது போலீசு தாக்குதல்!

மார்ச் 12ம் தேதி சனிக்கிழமை; திருவண்ணாமலை - மங்கலம். கிராமத்தில் உள்ள பங்க் கடை எதிரில் இரவு 8.30 மணி அளவில் எமது தோழர்கள் ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் கலைந்து சென்று கொண்டிருக்கையில் வந்த மங்கலம் சப் இன்ஸ்பெக்டர் வரதன், ஏட்டு செல்வராஜ் இருவரும் தோழர் ஜெகதீசனை ஸ்டேசனுக்கு போகும்படி சொன்னார்கள். ஏன்? என்ன விஷயம் என்று கேட்டதற்கு ஏதும் பதில் சொல்லாமல் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். செய்தி கேட்டு விசாரிக்க வந்த தோழர் இளவரசனையும் "நீயும் தேடப்பட்டு வருகிறாய்; உன் பெயரும் பட்டியலில் இருக்கிறது" என்று கூறி அழைத்துச் சென்றனர்.

உள்ளூர் ஸ்டேசனில் வைத்திருந்தால் கூட்டம் சேரும் என்று எண்ணி உடனடியாக திருவண்ணாமலை ஸ்டேசனுக்கு தனியார் கார் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டனர்.

மார்ச் 15-ம் தேதி நடைபெற்ற பந்தை பயன்படுத்தி எமது தோழர்களை கைது செய்திருக்கின்றனர். நாங்கள் பிற கட்சி நபர்களிடம் "போஸ்ட் ஆபீஸ், பள்ளிக்கூட ரெஜிஸ்டர்களை கொளுத்த வேண்டும் குண்டு வைக்க வேண்டும் என்றும் எப்பாடுபட்டாவது பந்தை நடத்த வேண்டுமென்றும்" ஒரு சந்தில் கூட்டாக பிற கட்சியினருடன் பேசிக் கொண்டிருந்தாகவும் இதை போலீசார் ஒட்டுக் கேட்டு அதன் மீது முன்னெச்செரிக்கை நடவடிக்கையாக கைது செய்ததாகவும் பொய் வழக்கு போட்டார்கள்.

இப்படி தான் பாசிச ராஜீவ் கும்பல் பந்தை 'உடைத்தது' போலும்!

புதிய ஜனநாயக வாசகர் வட்டம்.
மங்கலம்.



படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்

# “ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்”

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கம்யூனிச துரோகியான திருவாளர். பி. ராமமூர்த்தி தனது சா யஉணர்விலிருந்து சற்றும் வழுவாத வகையில் இரண்டு கருத்துக்களைச் சொல்லி பார்ப்பன கும்பலை தேசபக்தர்களாகச் சித்தரிக்க முயன்றிருக்கிறார் ● காங்கிரசு — ஹோம் ரூல் ஆகிய தேசிய இயக்கங்களில் பார்ப்பன ஆதிக்கமே இருந்ததில்லை என்று சாதிக்கிறார்; அவற்றில் பங்கேற்ற பார்ப்பனர்களும் தீவிரவாதிகளாகவும், வீரதீர தியாகிகளாகவும் இருந்தனர் என்று சித்தரிக்கிறார். ● நீதிக் கட்சியாளர் தேர்தலில் தோற்றாலும் பதவி மோகம் கொண்டலைந்தனர். காங்கிரசாரோ (அதாவது பார்ப்பனர்களோ) தேர்தலைப் புறக்கணித்தனர்; பங்கேற்று வெற்றி பெற்றாலும் பதவியேற்க மறுத்தனர்; பதவியேற்றாலும் நிபந்தனையுடன் பதவியிலிருந்தனர்; இலட்சியத்துக்காகப் பதவியைத் துறந்தனர் என்று வரலாற்றுப் புரட்டு செய்கிறார்.

'1907 சூரத் காங்கிரசில் கோகலேயின் தலைமையிலான மிதவாத கோஷ்டியை விரட்டியடிப்பதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வ.உ. சிதம்பரம்பிள்ளை, பாரதியார், சர்க்கரைச் செட்டியார், எஸ். துரைசாமி அய்யர் ஆகியோர் பங்காற்றினர். 1923 கயா மாநாட்டில் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று இந்தியா பூராவும் பிரபலமாகும் வகையில் திறமையாக வாதாடி தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார் ராஜாஜி. மணியாச்சியில் ஆஷ்துரையை வாஞ்சிநாதன் சுட்டுக்கொன்ற பிறகு அந்த சதி வழக்கிலிருந்து தப்புவதற்காக புதுச்சேரியில் தஞ்சம் புகுந்த சுப்பிரமணிய பாரதி, வ.வே.சு. அய்யர், சுப்ரமணிய சிவா, திருமலாச்சாரி போன்றவர்கள் தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்து வெகுஜன இய்க்கத்தில் பங்கேற்றனர். ரஷ்யாவில் நடந்த சோவியத் புரட்சியை வரவேற்க அதனை 'யுகப் புரட்சி' அதாவது ஒரு புதிய யுகத்தின் ஆரம்பம் என்று வர்ணித்து மகாகவி பாரதி கவிதை புனைந்தார்' — இவை ராமமூர்த்தி தனது முதல் கருத்தை வலியுறுத்துவதற்காகச் சொல்லும் பொய் கள்.

புதுச்சேரியிலிருந்து திரும்பிவந்த பாரதி விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார் என்பதும் ருஷ்ய அக்டோபர் சோசலிசப் புரட்சியை “யுகப் புரட்சி” யென்று வாழ்த்தி வரவேற்றார் என்பதும் போலிக் கம்யூனிஸ்டுகள் நீண்டநாட்களாகப் புளுகி வரும் பொய்கள். புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த பாரதி "இனிச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடமாட்டேன், பிரிட்டிஷ் அரசுக்குப் பாதகமான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன்" என்று எழுதிக் கொடுத்துவிட்டு சரணடைந்தார்; ஜாருக்கு எதிரான 1917 பிப்ரவரி முதலாளித்துவப் புரட்சியைத்தான் “காளியின் கடைக்கண் பார்வை பட்டு ஆகாவென்று எழுந்தது யுகப் புரட்சி" என்று பாரதி பாடினார். அதற்குப் பிறகு லெனின் தலைமையிலான 1917 அக்டோபர் சோசலிசப் புரட்சியைப் பார்தி கடுமையாகச் சாடினார். லெனின் — ஒரு முட்டாள்; வன்முறையில் நடக்கும் புரட்சி நிச்சயம் தோற்றுப்போகும்; செல்வந்தர்கள் பரம்பரை பரம்பரையாகச் சேர்த்து வைத்த சொத்தைப் பிடிங்கி|மற்றவர்களுக்கு பங்கீடு செய்வது அதர்மமானது என்று பாரதி “செல்வம்” என்கிற கட்டுரையில் எழுதி உள்ளார். ஆனாலும் ராமமூர்த்தி அப்பட்டமாகப் புளுகுகிறார்.

தீவிரவாதம், மிதவாதம் என்பதெல்லாம் காங்கிரசார் செய்த மோசடியே தவிர இந்த் இரு பிரிவுகளுக்குள் பெரிய வேறுபாடு ஒன்றும் கிடையாது. தீவிரவாதிகள் என்றழைக்கப்பட்டவர்கள் சுதந்திரமோ வேறு எதுவுமோ கோரித் தீவிரமாக எதையும் செய்தவர்கள் அல்ல. அதிலும் தமிழகத்திலிருந்த மைலாப்பூர் — எழும்பூர் பார்ப்பன கும்பல்கள் தமது சுயநலத்திற்கேற்ப சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டார்கள். காங்கிரசு — ஹோம்ரூல் இயக்கங்களின் தலைமையைக் கைப்பற்றுவதற்காக இரு பார்ப்பன கும்பல்களுக்கிடையே நடந்த போட்டி — சண்டையை மறைத்துவிட்டு, நீதிக்கட்சியின் துரோகங்களுக்கிடையேயும் இங்கே காங்கிரசு தீவிரவாதிகளின் பக்கம் நின்று விடுதலைப்போரை நடத்தியதாகச் சொல்லுகிறார் ராமமூர்த்தி.

“1880 களில், இந்தியர்களுக்குக் கூடுதலான பதவிகளும், செல்வாக்கும் வழங்கும் வகையில் அரசியல் சட்ட மாற்றங்கள் செய்வது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருந்தது. அப்போது கிளர்ச்சிக்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாக காங்கிரசு இருந்தது. அதிகாரம் பகிர்ந்தளிப்பது நடந்ததும், அதனால் மைலாப்பூர்க்காரர்கள் பலனடைந்ததும் அவர்கள் மிகவும் நைச்சியமான முறையில் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகள் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் இடையிலான சண்டையின்போது சென்னைக் காங்கிரசை மிதவாதிகளின் முகாமில் உறுதியாக இருத்திக் கொண்டார்கள், மைலாப்பூர்காரர்கள். 1907 சூரத் காங்கிரசு பிளவுக்குப் பிறகு சென்னை மாகாண காங்கிரசில் இருந்து தீவிரவாதிகளை மைலாப்பூர்க்காரர்கள் விரட்டிவிட்டனர். மாவட்டங்களில் இருந்த காங்கிரசு அமைப்பை துப்புறவாக ஒழித்துக்கட்டினர்; இல்லையானால் மைலாப்பூர்க்காரர்களின் செல்வாக்கை நிச்சயமாக உறுதி செய்யும் அரசியல் அமைதிக்குக் குந்தகம் ஏற்படும்.” (பேக்கர் பக் 24)

1914-18 முதல் உலகப்போரின் போது பிரிட்டிஷாருக்கு இருந்த நெருக்கடியையும் தமது செல்வாக்கையும் பயன்படுத்தி மேலும் கூடுதலான அதிகாரத்தைப் பெற மைலாப்பூர்காரர்கள் தீர்மானித்தார்கள். “மைலாப்பூர்காரர்களின் கோரிக்கைகளுக்கான வாகனமாக ஹோம்ரூல் இயக்கம் இருந்தது; அதன்

போலிக் கம்யூனிசத் தலைவர்களில் ஒருவராயிருந்தவர் திருவாளர் பி. ராமமூர்த்தி. தள்ளாத வயதிலும் பதவி மோகம் தீராத காரணத்தால் எம்.பி. பதவிக்காக காங்கிரசு எம்.எல்.ஏக்களிடம் இரகசியமாக ஓட்டுப் பிச்சை கேட்டது அம்பலமானது. வேறு வழியின்றி தலைமைப் பொறுப்புக்களில் இருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தார் — அதுவும் இரகசியமாக.சென்ற டிசம்பரில் அவர் இறந்து போனார். ஆனாலும் அவரைக் கம்யூனிசப் புரட்சியாளராக, விடுதலைப் போராட்ட தியாகியாக சித்தரித்து அணிகளை ஏமாற்றி வருகின்றனர், போலிக் கம்யூனிஸ்ட்டுகள்.

பி. ராமமூர்த்தி “ஆரியமாயையா? திராவிட மாயையா? விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்" என்றொரு நூலை எழுதிவிட்டுப் போயிருந்தார். உண்மையில் அது காந்திய — காங்கிரசு பார்ப்பணியப் பார்வையில் விடுதலைப் போரையும் திராவிட இயக்கத்தையும் எடைபோடும் “ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்.” அந்நூல் மீதான விமர்சனம் கடந்த பிப்ரவரி மாத்த்திலிருந்து எழுதி வருகிறோம். அது தொடர்கிறது...



படிப்பகம்

www.padippakam.com

**புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த பாரதி "இனி பிரிட்டிஷாருக்குப் பாதகமான நடவடிக்கையில் ஈடுபட மாட்டேன்" என்று எழுதிக் கொடுத்துவிட்டு சரணடைந்தார். ரஷ்யாவில் ஜாருக்கு எதிரான 1917 பிப்ரவரி முதலாளித்துவப் புரட்சியைத்தான் 'யுகப்புரட்சி' என்று பாடினார். அதே சமயம் லெனின் தலைமையிலான 1917 அக்டோபர் சோசலிசப் புரட்சியை பாரதி கடுமையாகச் சாடினார். ஆனால் பாரதியை சுதந்திரத் தேரின் சாரதியாகவும் யுகக் கவிஞனாகவும் சித்தரித்து வரலாற்றுப் புரட்டு செய்கிறார் ராமமூர்த்தி.**

மூலம் அன்னிபெசண்டோடு மைலாப்பூர்க் காரர்கள் கூட்டுச் சேர்ந்தார்கள்."

"1916 இல் கொஞ்ச காலத்துக்கு சென்னையின் எல்லா அரசியல் கோஷ்டிகளையும் மைலாப்பூர்க்காரர்களுக்கும் அன்னிபெசண்டுக்கும் பின்னே ஹோம்ரூல் இயக்கம் இணைத்தது. அதற்கு முன்னும் பின்னும் நிலமைகள் கூடுதலான அளவு சிக்கலாக இருந்தது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே மைலாப்பூர்க்காரர்களுடைய செல்வாக்கின் பிரமிக்கத்தக்க வளர்ச்சியை வெறுத்த பல குழுக்கள் இருந்தன. முதலாவதாக எழும்பூர் என்றழைக்கப்பட்ட ஒரு குழு சென்னை நகரில் இருந்தது. பின்னணி, தொழில், பேராசைகள் ஆகியவற்றில் இவர்களுக்கும், மைலாப்பூர் காரர்களுக்கும் வேறுபாடில்லை. அரசாங்கம் மற்றும் தென்னிந்திய சமூகத்திலுள்ள முக்கிய புள்ளிகள் ஆகியோரின் நம்பிக்கையைப் வெற்றிகரமாகப் பெறுவது என்கிற மைலாப்பூர்க்காரர்களின் மிக முக்கியமான தன்மை எழும்பூர் குழுவிடம் இல்லை. இந்தத் தன்மை இல்லாததால் அவர்களுக்கு செல்வாக்கில்லாமல் போனது; இதன் காரணமாக அவர்களுடைய அரசியல் போக்கு சிறுபிள்ளைத்தனமாகிப் போனது." (பேக்கர்பக் 25)

கஸ்தூரி ரெங்க ஐயங்காரின் இந்து பத்திரிக்கை எழும்பூர் கும்பலைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. சென்னை நகர அதிகார புரி மீது ஆசைகொண்டு கோவையிலிருந்து குடியேறிய இவர் மைலாப்பூர் கும்பலுக்குள் நுழைவதும், சென்னையில் வக்கீல் தொழில் செய்வதிலும் வெற்றி பெற முடியாமற் போகவே பத்திரிக்கையில் புகுந்தார். 1905இல் இந்துவை வாங்கினார். "மாநிலத்தின் தேசிய இயக்கத்தினுடைய பிரதான பிரச்சாரகனாக பத்திரிக்கையை மாற்றினர்; அது மைலாப்பூர்க்காரர்களுக்கு முள்ளாகக் குத்தியது. 1906-08இல் தீவிரவாதிகளை இந்து ஆதரித்தது; 1914-15இல் அன்னிபெசன்டை வெறுப்போடு கேலி செய்தது; 1916இல் அது தயக்கத்தோடு ஹோம்ரூல் இயக்கத்துக்குள் இழுக்கப்பட்டது; அதுவும் குறுகிய காலம்தான். 1917இல் தேசியவாதிகள் என்றழைக்கப்பட்ட இந்து குழு இரண்டு நோக்கத்தோடு மீண்டும் மைலாப்பூர்க்காரர்களை வெறுப்போடு கேலி செய்வதாக மாறியது. மைலாப்பூர்க்காரர்களுக்கு சங்கடமானநிலைமையை ஏற்படுத்துவது; அரசியல் சட்ட சீர்திருத்தத்தில் உடன்பாடு காணவே முடியாத அதிதீவிரமான நிலையை நோக்கிக் காங்கிரசைத் தள்ளுவதன் மூலம் காங்கிரசிலிருந்து மைலாப்பூர்க்காரர்களை விரட்டியடிப்பது ஆகியன அவர்களின் நேரக்கம்.

"இரண்டாவதாக, பொதுவிவகாரங்களுடைய தலைமை மீது தலைநகர ஏகபோகத்தை வெறுக்கக் கூடிய பல வக்கீல்கள், வியாபாரிகள், உள்ளூர் அரசியல் வாதிகள் மாவட்டங்களில் இருந்தனர். தனித் தனிக் குழுக்களாகவும், தனி நபர்களாகவும் பல இடங்களில் இருந்தவர்கள் 1905-08 தீவிரவாதிகள் கிளர்ச்சி மற்றும் 1916-17 ஹோம்ரூல் லீக் மூலம் அவர்கள் ஒரு தொளதொளப்பான கூட்டணியாக சேர்ந்தார்கள். தெலுங்கு பேசும் மாவட்டங்களில் கூட தனி தெலுங்கு மாநிலம் கோரும் கிளர்ச்சியான ஆந்திர இயக்கத்தின் மூலம் இணைந்தார்கள். தமிழ்நாட்டில் 1917 மதுரை ஆலை வேலை நிறுத்தத்தை தமது நோக்கத்துக்குப் பயன்படுத்திக்கொண்டார்கள். இந்தத் தொளதொளப்பான கோஷ்டியின் தலைவரும், வக்கீலும், சேலம் நகரவை முன்னாள் தலைவருமான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி 1918இல் சென்னையில் குடியேறினார். 1908இல் மந்தமான சுய திருப்தியுடைய மைலாப்பூர்க்காரர்களுக்கு எதிராக இவர்கள் எழும்பூர் குழுவோடு சேர்ந்து தீவிரவாதத்தை முன் தள்ளியது; 1917-18இல் மைலாப்பூர்க்காரர்களிடமிருந்து காங்கிரசைக் கைப்பற்றும் முயற்சியில் மத கூட்டணி மீண்டும் தலைதூக்கியது." (பேக்கர் பக் 25-26) இதே கருத்துக்களை வாஷ்ரூக் என்ற ஆராய்ச்சியாளரும் உறுதி செய்கிறார்.

மேற்கண்ட நீண்ட மேற்கோளிலிருந்து அறிவது என்ன? பிரிட்டிஷ் அரசாங்க சலுகைகளைப் பெறுவதற்காக காங்கிரசு ஹோம்ரூல் இயக்கங்களை மைலாப்பூர் பார்ப்பனக் கும்பல் பயன்படுத்திக் கொண்டது. 1907 சூரத் பிளவுக்குப் பிறகு சென்னை மாகாண காங்கிரசு அவர்களின் பிடியிலேயே இருந்தது. காங்கிரசின் தலைமையைக் கைப்பற்றுவதற்காகவே எழும்பூர் பார்ப்பனக் கும்பல் தீவிரவாதத்தை முன் தள்ளியது; அதே காரணத்துக்காக மாவட்டங்களில் இருந்து வந்த ராஜாஜி தலைமையிலான கும்பல் எழும்பூர் கும்பலுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டது. ஆகவே காங்கிரசு — ஹோம்ரூல் இயக்கங்களுக்குள் ஆதிக்கம் வகிக்க மூன்று பார்ப்பனக் கும்பல்கள் நடத்திய சண்டைதான் அன்றைய தீவிரவாதம், மிதவாதம் தேசியவாதம் எல்லாம்!



நீதிக்கட்சி பிரிட்டிஷாரின் பாதந்தாங்கி பதவி வெறி கொண்டலைந்த போது காங்கிரசுத் தலைவர்கள் தேர்தலைப் புறக்கணித்து, பதவிகளைத் துச்சமாகக் கருதித் துறந்தனர் என்று புளுகுகிறார் ராமமூர்த்தி. "1920-ம் ஆண்டு அரசியல் சட்டப்படி தேர்தல் நடந்தபொழுது வெகுஜன செல்வாக்கைப் பெற்றிருந்த காங்கிரசும், கிலாபத் இயக்கமும் அந்தத் தேர்தலைப் பகிஷ்கரித்த காலத்தில் சென்னை ராஜதானியில் ஜஸ்டிஸ் கட்சி அதில் பங்கெடுத்துக் கொண்டது. எதிர்ப்பதற்கு எந்த அரசியல் கட்சியும் கிடையாது. சில தனிநபர்கள் சுயேட்சையாக போட்டியிட்டனர். எனவே எதிரி இல்லாமல் போராடி வெற்றி பெற்றது. முதல் மந்திரி சபையை பொப்பிலிராஜாவின் தலைமையில் ஜஸ்டிஸ் கட்சி அமைத்தது" (ராமமூர்த்தி நூல் பக் 46) என்று அப்பட்டமான வரலாற்றுப்புரட்டு செய்கிறார்.

ஏனெனில் காங்கிரசு அந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதாக முடிவெடுத்த போதும், சென்னை மாநிலத்தில் மைலாப்பூர் பார்ப்பனக் கும்பல் சர். சி.பி. ராமசாமி ஐயர் தலைமையில் "தேசிய லிபரல் லீக்" என்கிற அரசியல் கட்சியைத் துவக்கிப் போட்டியிட்டுத் தோற்றுப்போனது. தேர்தலில் தோற்றாலும் கவர்னர் மந்திரிகளை நியமிக்கும் அதிகாரம் பெற்றிருந்ததால் மைலாப்பூர்க் கும்பலுக்கே முதலமைச்சர் பதவியளிக்க கவர்னர் விரும்பினார். ஆனால் கட்சி மாறச் செய்து பெரும்பான்மை பலம் பெறுவதில் மைலாப்பூர் கும்பல் தோற்றுப் போகவே வேறு வழியின்றி நீதிக்கட்சித் தலைவர் பி.டி. தியாகராய செட்டியை அழைத்தார். அவர் நீதிக்கட்சி சார்பாக சுப்பராயலு ரெட்டியை முதல் மந்திரி சபை அமைக்க அனுப்பினார். குறுகிய காலத்தில் சுப்பராயலு ரெட்டி இறந்து போகவே பனகல் ராஜா ராமணிங்கராயர் முதல்மந்திரியானார். 1932-36இல்தான் பொப்பிலிராஜா முதல்மந்திரியாக இருந்தார்.

மைலாப்பூர் கும்பலைப் போலவே தேர்தலில் போட்டியிட்டு பதவி சுகம் அனுபவிக்க எழும்பூர் இந்து கும்பலும் ஆசைப்பட்டது. தீவிரவாதம் பேசியும், அகில இந்திய ஆதரவு பெற்றும் 1918இல் மைலாப்பூர் கும்பலை விரட்டுவதில் வெற்றி பெற்றிருந்த இந்து கும்பல் தேர்தலில் காங்கிரசின் பெயரையும் செல்வாக்கையும் பயன்படுத்தவும் தயாராயிருந்தது. அது



படிப்பகம்

www.padippakam.com

வரை எழும்பூர் இந்து கும்பல் பேசிவந்த தீவிரவாதத்தையே தந்திரமாகக் கொண்டு ராஜாஜி தலைமையிலிருந்த மற்றொரு கும்பலிடம் காங்கிரசு தலைமை சிக்கியது; தேர்தல் புறக்கணிப்பு என்கிற அகில இந்திய முடிவும் வந்தது; எனவே எழும்பூர் இந்து கும்பலின் ஆசை நிறைவேறவில்லை. அந்தக் கும்பலைச் சேர்ந்த தேசியவாதிகள் காங்கிரசைவிட்டு வெளியேறி மைலாப்பூர் கும்பலோடு சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டனர் அல்லது காங்கிரசில் இருந்து கொண்டு தேர்தலைப் புறக்கணிக்கும்படியானது. 1920இல் திருநெல்வேலியில் நடந்த மாகாண மாநாட்டு ஆவணங்களே இதற்கு ஆதாரமாயுள்ளன.

'1923 கயா காங்கிரசு தீர்மானப்படி தேசியவாதிகளில் ஒரு பிரிவினர் சுயராஜ்யக் கட்சியை நிறுவி தேர்தலில் பங்கேற்று சட்டசபைகளில் பணியாற்றுவது, பெரும்பான்மையான வெற்றி பெற்றாலும் மந்திரிசபை அமைக்கக் கூடாது என்று முடிவானது. அடுத்து வந்த தேர்தல்களில் சுயராஜ்யக் கட்சி பெரும்பான்மையாக வெற்றி பெற்றாலும் மந்திரிசபை அமைக்க மறுத்துவிட்டது. ஆனால் மக்களால் நிராகரிக்கப்பட்ட நீதிக்கட்சி சில சுயேட்சைகள், நியமன உறுப்பினர்கள் மற்றும் ஆமாம் சாமிகளைக் கொண்டு மந்திரிசபை அமைத்தது' என்கிறார் ராமமூர்த்தி இப்படிச் சொல்வது நடந்தவைகளை திரித்துப் புரட்டுவதாகும்.

1920 தேர்தலில் பங்கேற்று பதவி சுகம் காணுவதை நழுவவிட்ட எழும்பூர் இந்து கும்பல் சத்தியமூர்த்தி தலைமையில் மீண்டும் தேர்தலுக்கான தயாரிப்பில் இறங்கியது. தேர்தல் புறக்கணிப்பால் அதிருப்தியுற்றிருந்த பிறமாநில காங்கிரசு தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த சத்தியமூர்த்தி 1922 மத்தியில் வெளிப்படையாக அறிவித்து, சுயராஜ்யக் கட்சிக்கான அடிக்கல் நாட்டார். காந்தியின் தலைமையிலிருந்து திருப்பி தேர்தல் கட்சியாக காங்கிரசை மாற்றுவதில் சத்தியமூர்த்தியோடு சித்தரஞ்சன் தாசும் மோதிலால் நேருவும் பங்கேற்றனர். பிறகு சுயராஜ்யக் கட்சிக்குத் தலைமையேற்றனர்.

1923 கயா காங்கிரசில் சட்டசபைக்குப் போவதற்கு அனுமதி பெற்றதும் சென்னை மாநிலத்தில் ஆள்பிடிக்கும் வேலையில் தீவிரமாக இறங்கினார் சத்தியமூர்த்தி. நீதிக்கட்சியில் பதவி கிடைக்காமல் போன சி.ஆர். ரெட்டி,டி.ஏ. ராமலிங்கம் செட்டி மற்றும் உதிரிகளான சி.வி.எஸ். நரசிம்மராஜு, சாமி வெங்கடாசலம் செட்டி,ராஜாஜி பின்னாலிருந்த பி. வரதராஜுலு நாயுடு, ஆந்திர காங்கிரசு தலைவர்களான காளீஸ்வரராவ், கொண்ட வேங்கடப்பையா போன்றவர்களை வளைத்துப் போட்டனர். எப்படியும் மந்திரிசபையில் பங்கேற்போம், சலுகைகளை — பதவிகளைப் பெறுவோம் என்று ஆசைகாட்டி மாவட்டங்களில் இருந்த செல்வாக்கு மிக்க புள்ளிகளை இழுத்தார். சத்தியமூர்த்தியோடு எஸ். சீனிவாச ஐயங்கார் தீவிரமாக இந்த வேலையில் ஈடுபட்டார்.

அடுத்து 1926 தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை சட்டசபையில் பெரிய கட்சியாயிருந்த சுயராஜ்ய கட்சியை மந்திரிசபை அமைப்பதற்கு கவர்னர் அழைத்தார். அகில இந்திய காங்கிரசின் அனுமதியில்லாததால் சத்தியமூர்த்தியும் சீனிவாச ஐயங்காரும் மந்திரி சபை அமைக்க முயலவில்லை. ஆனால் கூட்டு மந்திரிசபை அமைப்பதற்கு கவர்னர் முயன்றபோது அதற்கான பேரத்தில் காங்கிரசு — சுயராஜ்யக் கட்சியினர் ஊக்கமாகக் கலந்து கொண்டனர். அதிலும் குறிப்பாக தேர்தலைப் புறக்கணிக்கும்படி வாதாடிய ராஜாஜி அந்தப் பேரத்தில் முக்கியமாகப் பங்கேற்றார். அதன் அடிப்படையில் ராஜாஜியின் விசுவாச சீடரும், பிறகு நீதிக்கட்சியில் சேர்ந்தவருமான டாக்டர் பி. சுப்பராயன் (மோகன் குமாரமங்கலத்தின் தந்தை) தலைமையில் ஒரு 'சுயேட்சை' மந்திரி சபை அமைக்கப்பட்டது.

> நீதிக் கட்சியினரைப் போலவே ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் பதவி மோகம் கொண்டலைந்தது பார்ப்பன ஆதிக்கத்திலிருந்த காங்கிரசு கட்சி. ஆனால் அவற்றையெல்லாம் மறைத்துவிட்டு சத்தியமூர்த்தி, ராஜாஜி போன்றவர்களை மாபெரும் தேசபக்தர்களாக சித்தரிக்கிறார் ராமமூர்த்தி.

அடுத்த காங்கிரசில் மந்திரிசபை அமைக்க அனுமதி பெற்றுத் தருவதாக சொல்லி ஆதரவு திரட்டிய சீனிவாச ஐயங்கார், அகில இந்திய காங்கிரசு தலைவரானார். மாநில காங்கிரசார் மந்திரி சபையிடம் பதவி எச்சில் பொறுக்குவதை அங்கிருந்து ஆதரித்தார். சுயராஜ்யுக் கட்சி மூலம் மந்திரி பதவிகளுக்கு ஏங்கியிருந்தவர்கள் தமது ஆசை நிறைவேறாது போகவே நீதிக்கட்சிக்குத் தாவினர். அல்லது தனிக்கட்சி அமைத்துக் கொண்டனர். இவர்களில் சி.ஆர். ரெட்டி, ஆர்.கே. சண்முகம் செட்டி, சாமி வெங்கடாசலம் செட்டி, முத்தைய முதலியார், சேதுரத்தினம் ஐயர் முக்கியமானவர்கள். சீனிவாச ஐயங்கார் ஐரோப்பாவுக்கும், சத்தியமூர்த்தி மைசூர் அரசு திவானாகவும் போனபிறகு மாநில காங்கிரசு செயலிழந்து போனது. 1929இல் சட்டசபை பதவிகளைத் துறக்கும்படி அகில இந்திய காங்கிரசு உத்திரவு போட்டபோது 18 பேர் மறுத்துவிட்டார்கள்.

'1936, 37 தேர்தல்களில் நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது; பெரும்பான்மையாக காங்கிரசு வெற்றி பெற்றாலும் கவர்னர் நிர்வாக தலையீடு செய்யமாட்டார் என்கிற வாக்குறுதி கொடுக்காததால் மந்திரிசபை அமைக்கவில்லை. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நீதிக்கட்சிப் பிரமுகர்கள் இடைக்கால மந்திரிகளானார்கள். மூன்று மாதத்துக்குப் பிறகு கவர்னர் (மழுப்பலான) ஒரு வாக்குறுதி கொடுத்த பிறகு ராஜாஜி தலைமையிலான மந்திரிசபை அமைந்தது. யுத்தத்துக்குப் பிறகு சுதந்திரம் வழங்க வேண்டும்; யுத்தத்தை நடத்த முழுவதும் இந்தியர்களைக் கொண்ட நிர்வாக சபை வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்க மறுத்ததால் 1939இல் காங்கிரசு மந்திரிசபைகள் விலகின' என்று காங்கிரசின் பதவிவேட்டையைப் பூசி மெழுகுகிறார் ராமமூர்த்தி.

ஒத்துழையாமை இயக்கம் தோற்றுப் போன பிறகு தீவிரவாதம் பேசிவந்த எழும்பூர் இந்து கும்பல், சத்தியமூர்த்தி மற்றும் நீதிக்கட்சியிலிருந்து கட்சிமாறிகள் தலைமையில் மந்திரி பதவிகளைப் பிடிப்பதன் அவசியம் பற்றி பிரச்சாரம் செய்தது. உள்ளூராட்சித் தேர்தலில் ஊக்கமாகப் பங்கேற்றது. பழைய மைலாப்பூர்க்காரர்களும், நீதிக்கட்சியில் போட்டிப் பிரிவினரும் சேர்ந்து கொண்டு ஒரு புதிய கட்சி துவங்க முயன்றனர். அதுகண்டு அவசர அவசரமாக தமிழ்நாடு காங்கிரசு சுயராஜ்யக் கட்சியை நிறுவி கொள்கை அறிக்கை வெளியிட்டு மாநிலத்தில் ஆள்பிடிப்பதும், அகில இந்திய தலைவர்கள் ஆதரவு திரட்டுவதிலும் இறங்கினார் சத்தியமூர்த்தி. காந்தியும் அவர்களை ஆதரித்தார். அதுவரை தேர்தல் புறக்கணிப்பு — ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றுக்காக வாதாடிய ராஜாஜியும் சமரசம் செய்து கொண்டு காங்கிரசோடு சுயராஜ்யக் கட்சி இணைந்தது. குமாரசாமி ராஜா, நாகேஷ்வரராவ், டி.எஸ்.எஸ். ராஜன் அடங்கிய ஒரு கும்பல்; சத்தியமூர்த்தி, முத்துரங்க முதலியார், சாமி வெங்கடாசலம் செட்டி ஆகிய பழைய சுயராஜ்யக் கட்சியினர் மற்றொரு கும்பல்; என்.ஜி. ரெங்கா, வி.வி. கிரி போன்ற ஏற்கனவே பிரபலமான சுயேட்சையான அரசியல் புள்ளிகள், சாமுவேல் ஆரோன், அனந்தசயனம் ஐயங்கார், அவினாசி லிங்கம் செட்டி போன்ற புது காங்கிரசு அரசியல்வாதிகள் ஆகியோர் அடங்கிய மூன்றாவது கும்பல். இந்த மூன்றுக்குமிடையே கடுமையான கோஷ்டித் தகராறோடு 1936, 37 தேர்தல்களில் காங்கிரசு போட்டியிட்டது. தேர்தலுக்குப் பிறகு மந்திரி சபை அமைப்பதா இல்லையா என்ற பிரச்சினையை அதுவரை தள்ளிப்போட்டு வந்தனர். தேர்தலில் பெரும்பான்மையாக வெற்றி பெற்றதும் "அந்தப் பிரச்சினைகள் மீது விவாதமே கிடையாது; பதவியேற்பது பற்றி மாநிலத்தில் யாருக்குமே மாறுபட்ட கருத்து கிடையாது" என்று அறிவித்தார் சத்தியமூர்த்தி.

"சத்தியமூர்த்தி, அடைகாக்கும் புறாவைப்போல கூவுகிறார்; சென்னை காங்



படிப்பகம்

www.padippakam.com

கிரசுத் தலைவர்கள் (மந்திரிசபை) பதவிக்காக அலைகிறார்கள் என்று 1936 ஜூனில் கவர்னர் எர்ஸ்கின் பிரபு டில்லிக்கு எழுதினார். நவம்பரில் கவர்னரைச் சத்தியமூர்த்தி போய்த் தரிசித்தார்; மாகாணத்தில் அரசியல் சட்டத்தைக் தகர்ப்பதற்கு காங்கிரசு முயலாது என்று வாக்குறுதியளித்தார்" (பேக்கர் பக் 296) பிரபலமான வக்கீல்கள், பெரும வியாபாரிகள், மருத்துவர்கள் மற்றும் மிட்டா — மிராசுகள், ஜமீன் — நிலப் பிரப்புக்கள் ஆகிய முன்னாள் நீதிக்கட்சிப் புள்ளிகள் காங்கிரசில் சேர்ந்து போட்டியிட்டனர். நேரு, பட்டேல், ராஜேந்திரபிரசாத் ஆகிய அகில இந்தியத் தலைவர்கள் பல வாரங்கள் பிரச்சாரம் செய்தனர். தென்நாட்டிலேயே முதன்முறையாக அரசியல் பிரச்சார சினிமா எடுத்தார்கள்! ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது. இப்படி பெரும் முயற்சி செய்து காங்கிரசு வெற்றி பெற்றாலும் முதல்மந்திரி பதவிக்கு தமிழக சத்தியமூர்த்தியும் ராஜாஜியும், ஆந்திர பிரகாசமும், சாம்பமூர்த்தியும் ஆகிய பார்ப்பன கும்பல்கள் போட்டி போட்டன.

'இப்போதைய காங்கிரசு பெரும்பான்மை எப்படிப் பார்த்தாலும் ஒரு கட்டுக்கோப்பான திரள் இல்லை. அவர்களில் பலரும் சமீபகாலம் வரை நீதிக்கட்சிக்காராராகவோ, (லிபரல்கள்) மிதவாதிகளாகவோ இருந்தவர்கள்தான். மந்திரிசபை பதவியேற்க அனுமதிக்காவிட்டால் கட்சி முழுவதும் மிகவும் ஆத்திரம் கொள்ளும் நிலையில் உள்ளது' என்று வைசிராய்க்கு தேர்தல் முடிவு பற்றி கவர்னர் எர்ஸ்கின் எழுதினார் (பேக்கர் பக் 304) தேர்தலுக்கு 15 நாட்களுக்கு முன்பு கவர்னரைச் சந்தித்து காங்கிரசு மந்திரிசபை பதவியேற்குமென்று உறுதி கூறினார்.

மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், வங்காளம், பஞ்சாப் ஆகிய மாகாணங்களில் காங்கிரஸ் பெரும்பான்மை வெற்றி பெறவில்லை, காங்கிரசுக்குள்ளிருந்த "சோசலிஸ்டுகள்" மந்திரிசபை பதவியேற்பதை எதிர்த்தனர். ஆகவே காங்கிரசு தலைமை முதலில் தயங்கியது. கவர்னர்கள் நிர்வாகத் தலையீடு செய்யக்கூடாது என்று ஒப்புக்கு நிபந்தனை விதித்தனர். அவர்களிடமிருந்து அப்படிப்பட்ட வாக்குறுதி கிடைக்காத போதே பலமுறை ராஜாஜி கவர்னருடன் பேரம்பேசி கடைசியில் முதல்மந்திரியாக பதவியேற்றார்.

ஆக, நீதிக்கட்சியினரைப் போலவே ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் பதவிமோகம் கொண்டிருந்தது பார்ப்பன ஆதிக்கத்திலிருந்த காங்கிரசு கட்சி. ஆனால் அவற்றையெல்லாம் மறைத்து சத்தியமூர்த்தி சீனிவாச ஐயங்கார், ராஜாஜி போன்றவர்களை மாபெரும் தேச பக்தர்களாகச் சித்தரிக்கிறார் போலிக்கம்யூனிஸ்டுத் தலைவர் ராமமூர்த்தி.

(தொடரும்)




# திரிபுவாதிகளின் குருபீடத்தில் இனக்கலவரம்!

திரிபுவாதிகளின் குருபீடமான ரஷ்யாவில் மீண்டும் நெருக்கடி. திரிபுவாதிகளின் கொள்ளுப் பேரனும் 'தத்துவ வித்தகருமான' கோர்பச்செவ் ஆர்வாரமாக அறிமுகம் செய்த 'பிரஸ்டோரிகர், கிளாஸ்நாஸ்ட்' என்னும் கேடுகெட்ட முதலாளித்துவ பிற்போக்கு சித்தாந்தம் வெகுவிரைவிலேயே ஒரு இனக்கலவரத்தை பெற்றுக் கொடுத்துள்ளது.

ரஷியாவின் தெற்கேயுள்ள ஒரு மாநிலம் அர்மீனியா. இங்கு, கிருஸ்த்துவ மத கலாச்சாரத்தின் வழிவந்த சிறுபான்மை ஆர்மீனிய இனத்தவர்களுக்கும், முஸ்லீம் மத கலாச்சாரத்தின் வழிவந்த அசர்பைசானி இனத்தவர்களுக்கும் இடையில் இப்போது மோதல் வெடித்துள்ளது. அண்டை மாநிலமான அஜர்பெய்ஜானுடன் இணைந்திருக்கும் நகோர்னா-கராபாக் பகுதிகளை அர்மீனிய மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் கிளம்பிய இப்'போராட்டம்' மிகப்பெரும் இனக்கலவரமாக உருவெடுத்துள்ளது. இக்கலவரத்தில் இதுவரை 100க்கும் மேற்பட்ட அர்மீனிய இனத்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆர்மீனிய நகரங்களில் கூடும் ஆர்பாட்டக்காரர்களை கலைக்க பெரும் அளவில் படைகள் குவிக்கப்பட்டுள்ளது. இருந்தும் இக்கலவரங்களுக்கு முடிவுகாண முடியவில்லை. கோர்பச்செவ் கும்பல் ஒருபுறம் அமைதிவழி ராசங்கம் நடத்திக்கொண்டே பாசிச தாக்குதல்களை கட்டவிழ்த்து விட்டுள்ளது. கலவரங்கள் நடக்கும் இடங்களுக்கு வெளிநாட்டு செய்தியாளர்கள் செல்வது முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளது. அங்கு குவிக்கப்பட்டுள்ள பெரும்படையின் எதிர் வேலைகள் ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், போராடும் ஆர்மீனியர்கள் கோர்பச்செவ் சித்தாந்தத்திற்கு எதிரானவர்கள் அல்ல. அவருடைய 'பிரஸ்டோரிகா', 'கிளாஸ்நாஸ்ட்' கொள்கையின் விசுவாசிகள்.

அனைத்து துறைகளிலும மறு கட்டமைவை முன்னிறுத்துவது — இதற்காக பழைய சட்டங்கள், மரபுகளை மீத மிச்சங்கள் இருக்கும் சோசலிச' கட்டமைவை — உடைத்தெறிவது, ஒவ்வொருவருக்கும் கூடுதல் 'ஜனநாயகம்' கொடுப்பது, என்ற ப்ரஸ்டோரிகாகிளாஸ்நாஸ்ட' கொள்கையின் அடிப்படையில் இப்போது ஆர்மீனியர்கள் 16 ஆம் நூற்றாண்டு 'சுதந்திரத்தை' விரும்பி கேட்கிறார்கள். தங்களுடைய கிருஸ்த்துவ மதக்கலாச்சாரத்தை புதுப்பிப்பது, மத அடிப்படையில் ஒன்றிணைவது, அதற்காகப் போராடுவது என கிளம்பியிருக்கிறார்கள்.

இது, ஏதோ அவர்கள் திடுதிப்பென எடுத்த சுயேட்சையான முடிவு அல்ல. திரிபுவாதத்தின் பிதாமகன் குருச்சேவ் காலத்திலிருந்து பின்பற்றப்படும், 'எல்லா மக்களுக்குமான அரசு', 'அனைத்து மக்களின் கட்சி', சமாதான மாற்றம்' என்ற போர்வையில் வேகமாக வளர்ந்து வரும், கேடுகெட்ட முதலாளித்துவ ஜனநாயகத்தின் கள்ளக் குழந்தைதான் இது. குருச்சேவ் காலத்திலிருந்து நடந்துவரும் ஒவ்வொரு தலைமை மாற்றத்தின் போதும், கழித்துக் கட்டப்படும் பழைய திரிபுவாத தலைமையின் விசுவாசிகள், அதிகாரத்தை திரும்பப்பெற புதிய திரிபுவாத தலைமைக்கு கொடுக்கும் நெருக்கடியின் முற்றிய வெளிப்பாடு இது. அசர்பைசானி இனத்தவர்களில் இருக்கும் உயர்மட்ட கட்சி உறுப்பினர்களைவிட அர்மீனிய இனத்தவர்களில் உயர்மட்ட கட்சி உறுப்பினர்கள் அதிகம். பிரஸ்னேவ் கும்பலின் விசுவாசிகளாய் இருந்த பெரும்பாலான உயர்மட்ட கட்சி உறுப்பினர்கள், கோர்ப்ச்செவ் கும்பலால் ஆட்சியதிகாரத்திலிருந்து கழித்துக் கட்டப்பட்டனர். இவர்களுக்குள் கிளம்பிய அதிகார பங்கீட்டுக்கான கோஷ்டிச் சண்டை இப்போது இனக்கலவரமாக உருவெடுத்துள்ளது.

இதே அளவு நெருக்கடியில்தான், சீனத்தின் டெங் கும்பலும் மாட்டிக்கொண்டு விழிபிதுங்கி நிற்கிறது. திபெத்தில், புத்தமத பண்டாரம் தலாய்லாமா தலைமையில், அதன் தலைநகரமான லாசாவிலும், சுற்றுப்புற பகுதிகளிலும் 'வரலாறு காணாத' கலவரம் தொடர்கிறது. அவர்களும் மத அடிப்படையில் திபெத்தை தனியாக பிய்த்துக் கொடுத்துவிடும்படி, டெங் கும்பலுக்கு தீராத நெருக்கடியை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கண்டு மார்க்சியத்தின் எதிரிகள் உச்சி குளிர்ந்து போகிறார்கள். மார்க்சியத்தால் கூட தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியவில்லை என்று பச்சை பொய்யை அவிழ்த்து விடுகிறார்கள. சோசலிசக் கட்டுமானம் அல்ல; முதலாளித்துவ மீட்சி தான் இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணம் என்பதை மறைக்க முயலுகிறார்கள். சோசலிச கட்டமைவு சீர்குலையாதவரை, சோவியத் ரஷ்யாவிலோ, செஞ்சினத்திலோ, இனக்கலவரத்திற்கு அடிப்படையும் இல்லை. அப்படி எதுவும் வெளிப்படவும் இல்லை. முதலாளித்துவம் மீண்டும் அந்த நாடுகளில் நிலைநாட்டப்பட்டதற்கு பின்னர்தான் இந்தக் கலவரங்கள் வெடித்துள்ளன.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
அச்சிடுபவர்: எம்.கே. சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094.

படிப்பகம்

R.N. 42648/85 Regd. No. TN/MS(C) 544
www.padippakam.com

அருகில் இருப்பவர் ஷாராஷபீ ஹுசேன்பாய், வீட்டு வேலைகள் செய்து தன் நான்கு குழந்தைகளை காப்பாற்றி வரும் கணவனை இழந்த முஸ்லீம் விதவை. குஜராத் பரோடா நகரின் சேரிப் பகுதியில் ஒரு குடிசையில் வசித்து வருகிறார். குஜராத் போலீசு சென்ற ஆண்டு இரவு நேரத்தில் திடீரென்று இவரது வீட்டில் நுழைந்து இவரை கைது செய்து இழுத்துச் சென்றது. இவர் தன் 'வீட்டின் கூரையில் வெடிகுண்டு ஒளித்து வைத்திருந்ததாக' பொய்குற்றம் சாட்டி, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இவ்விதவையை 9 மாத கால சிறையில் அடைத்து சித்திரவதை செய்தது. மோசமான உடல்நிலையில் இவரைச் சென்ற மாதம் விடுதலை செய்தது. 'இனிமேல் என்னால் உழைக்க முடியுமா என்பதே எனக்கு சந்தேகமாக இருக்கிறது... என் நான்கு குழந்தைகளை யார் காப்பாற்று வார்கள்...?' என்று துயருகிறார் இந்த ஏழைத்தாய்.



ஒருவர், இருவரல்ல, சென்ற ஆண்டு மே முதல் நவம்பர் முடிய 7 மாதத்தில் 1701 பேர் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். அடிக்கடி அம்மாநிலத்தில் நடக்கும் சாதிக் கலவரங்களுக்கு காரணமான 'பெரும்புள்ளி'களை கைது செய்ய வக்கற்ற காங்கிரசு அரசு, போலீசை ஏவி பொதுமக்களை கடித்து குதறுகிறது.


தொழிற்சங்க தலைவர்கள், தொழிலாளர்கள், சிறு கடை வியாபாரிகள், சவரத் தொழிலாளி, எடுப்பு சாப்பாடு சுமந்து சென்று வயிற்றைக் கழுவும் தினக்கூலிகள், அனாதைப் பெண்கள், சிறுவர்கள் என உழைக்கும் மக்கள் அனைத்து பிரிவினரையும், கேட்பாரற்று, பயங்கரவாத தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்து சித்திரவதை செய்கிறது. மூத்திரம் குடிக்க வைப்பது, காலைக் கடனுக்கு 2 நிமிடம் மட்டும் ஒதுக்கி, அவர்கள் படும் கஷ்டத்தைக் கண்டு ரசிப்பது என மிருகத்தனமான சித்திரவதைகளை கையாள்கிறது.

இதோ, வாள், கத்தி, இயந்திரத் துப்பாக்கி என அனைத்து பயங்கர ஆயுதங்களையும் பகிரங்கமாக கையில் ஏந்திக் கொண்டு வலம்வரும் இவர்கள் சீக்கிய மத பயங்கரவாதிகள்; உயர் மட்ட சீக்கிய மத குருமார்கள். பல பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக பல தவணைகளில் கைது செய்யப்பட்ட இவர்கள் சமீபத்தில், பாசிச ராஜீவ் கும்பலால், வெகு விமரிசையாக விடுதலை செய்யப்பட்டனர். பஞ்சாப் கவர்னர் சித்தார்த்த சங்கர்ரே விமான நிலையம் வரைச் சென்று இவர்களை வரவேற்று கௌரவித்தார். 'சீக்கிய மத பயங்கரவாதிகளை அடக்கியே தீருவேன்' என கொக்கரித்த பாசிச ராஜீவ் கும்பல் இப்போது அரசியல் ஆதாயம் கருதி அவர்களின் காலடியில் தவம் கிடக்கிறது. சுசில் குமார் போன்ற ஜைன மத 'துறவி'களை இடைத்தரகர்களாக வைத்துக் கொண்டு பயங்கரவாதிகளுடன் குலாவுகிறது.

அப்பாவி மக்களை நாளும் படுகொலை புரியும் பிரிவினைவாத மதவெறி பயங்கரவாதிகளுக்கு பொது மன்னிப்பு, பெரும் உபசரிப்பபு. நிராதரவான மக்களுக்கோ பயங்கரவாதிகள் பட்டம்; தடுப்பு காவல் சட்டம்.

உழைக்கும் மக்களின் உயிரோடு விளையாடி அரசியல் ஆதாயம் தேடும் பிழைப்புவாத காங்கிரச கும்பலை முடமாக்குவது எப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்